விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 11 வியாழக்கிழமை (25.06.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 189

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## கந்தரோடை மடத்தடியில் வாள்வெட்டுக்குழு அட்டகாசம்



### கொள்ளையடிக்கவும் முயற்சி

(குப்பிழான்)

கந்தரோடை மடத்தடியில் நேற்றுப் புதன் கிழமை அதிகாலை வாள்களுடன் சென்ற கொள்ளைக் கும்பல் பெரும் அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளது.

குறித்த கொள்ளைக் கும்பல் வீட்டின் முன்கதவை மண்வெட்டி மற்றும் 23

## ஏழாலை மயிலங்காடு ஸ்ரீ நாகபூசணி அம்பாள்

### இரு கண்கள் திறந்து காட்சியளித்தார்



23

கொழும்புத்துறையில்

## வாள்களுடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொழும்புத் துறைப் பகுதியில் வாள் வைத்திருந்தனர் 23

## கட்டணம் செலுத்தாவிடின் மின்சாரம் துண்டிக்கப்படும்

### மின்சார சபை அறிவிப்பு

(கொழும்பு)

கொரோனா நெருக்கடி காலத்தில் மின் கட்டணம் செலுத்தாதவர்களின் 23

### அபாய கட்டத்தில் இலங்கை

# கொரோனா மீண்டும் சமூகத்தில் பரவலாம்

### சுகாதாரப் பணிப்பாளர் எச்சரிக்கை



(கொழும்பு)

**கொடிய கொரோனா வைரஸ் தொற்று நாட்டில் மீண்டும் சமூகத்தில் பரவும் அபாயம் காணப்படுவதாக சுகாதாரப் பணிப்பாளர் அனில் ஜாசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

கொரோனா அச்சுறுத்தலை அடுத்து நாட்டில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் பின்னர் பொது போக்குவரத்துச் சேவை மற்றும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறவரும் மக்களின் செயற்பாடும் வருத்தமளிப்பதாக அவர் தெரிவித்துள் 23

க.பொ.த (சா/த)
மாணவர்களுக்கான
மத்திய மாகாணத்தின்
**தமிழ் மொழியும் இலக்கியமும்**
மாதிரி வினாத்தாள்
உள்ளே

## யாழில் நான்கு நகைக் கடை

### உரிமையாளர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் நகைக் கடைகளை வைத திருக்கும் 4 உரிமையாளர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கடை உரிமையாளர்கள் திருட்டு நகைகளை வாங்கி 23

## 57 கிலோ கஞ்சா அனலைதீவில் மீட்பு

### சந்தேகத்தில் இருவர் கைது



(காரைநகர்)

இந்தியாவிலிருந்து இலங் 23

## நயினை அம்மனைத் தரிசிக்க விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் தளர்வு

### வெளி வீதியில் 300 பக்தர்களுக்கும் உள் வீதியில் 70 பக்தர்களுக்கும் அனுமதி

(யாழ்ப்பாணம்)

நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் சமூக இடைவெளிகளைப் பேணி அடியவர்கள் வழிபாடுகளில் ஈடுபடுவதற்கும், உள்வீதி 23

கொரோனா 2ம் அலை ஏற்பட்டால்

## தேர்தல் மீண்டும் ஒத்திவைக்கப்படலாம்

### மகிந்த தேசப்பிரிய

(கொழும்பு)

நாட்டில் கொரோனாவுக்கான 2ம் அலை ஏற்பட்டால் பொதுத் தேர்தல் மீண்டும் 23

## நாவாந்துறையில் வாள்வெட்டுக்குழு அட்டூழியம்



23

## மன்னாரில் அம்மன் ஆலயம் பெற்றோல் ஊற்றி எரிப்பு



(மன்னார்)

மன்னாரில் அம்மன் ஆலயம் ஒன்று பெற்றோல் ஊற்றி எரிக்கப் பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் 23

## கூறுவிலை கோரல்

தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிக்கு 180ml / 375ml / 750ml போன்ற தரமான வெற்றுப் போத்தல்கள் (DCSL, Mendis IDL) எனப் பெயர் குறிப்பிடாத போத்தல்களை சுத்திகரித்து வழங்கின் அதன் பெறுமதியையும், சுத்திகரிக்காது வழங்கின் அதன் பெறுமதியையும் தனித்தனி விலை குறிப்பிட்டு 30.06.2020 திகதிக்கு முன்னர் தலைவர், தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ. சங்கங்களின் கொத்தணி, பருத்தித்துறை வீதி, வரணி என்ற முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரிலோ ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

(C-9751) க. துரைசிங்கம் ( தலைவர் )


# 7 ஆயிரம் பட்டதாரி பயிலுநர்களுக்கு பொதுத்தேர்தலின் பின் நியமனம்

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும



(கொழும்பு)
பொதுத் தேர்தலின் பின்னர் 7 ஆயிரம் பட்டதாரி பயிலுநர்களுக்கு நியமனக் கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க உள்ளதாக கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

47 ஆயிரம் பட்டதாரி பயிலுநர்களுக்கான நியமனக் கடிதங்கள் கடந்த மார்ச் முதலாம் திகதி அனுப்பி வைக்கப்பட்டது.

பொதுத் தேர்தல் நிறைவடைந்து இரண்டு வாரங்களின் பின்னர் மேலும் சுமார் 7 ஆயிரம் பட்டதாரி பயிலுநர்களுக்கு நியமனக் கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டார். (ம-3)


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி. மகேஸ்வரன் சிவமலர் அவர்களின் தாயார்

**இராசரத்தினம் செல்லம்மா**

அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தின் துயரில் பங்கு கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(3101)

ஆசிரியர் நலன்புரி கழகம்
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி


# கொடிகாமம் தவசிக்குளத்தில் வாளுடன் இளைஞன் கைது

(குப்பிழான்)
கொடிகாமம் தவசிகுளம் பகுதியில் நேற்று இரவு 9 மணியளவில் வாளுடன் சென்ற இளைஞன் ஒருவர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதில் உசன் பகுதியைச் சேர்ந்த 24 வயது இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார் கைது செய்யப்பட்ட இளைஞனைக் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துப் பொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(ம-3,18,78)


## பகிரங்க ஏல விற்பனை

• இடம் : யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை
• நேரம் : மு.ப 9.00 மணி • காலம் : 30.06.2020

| இல | பொருள் விபரம் | தொகை | இல | பொருள் விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | மாணவர் நீள மேசை | 1 | 10 | Laser Printer | 1 |
| 02 | Computer Chair | 2 | 11 | Cross Bar | 1 |
| 03 | Lenovo or Desk top Computer | 5 | 12 | Suruthy Box | 1 |
| 04 | LCD Monitors | 5 | 13 | White Board 4 x 3 | 2 |
| 05 | Keyboards | 5 | 14 | Computer | 1 |
| 06 | Mouse | 5 | 15 | Speaker | 1 |
| 07 | Head set | 5 | 16 | Printer | 1 |
| 08 | UPS | 5 | 17 | Flip Chart Board With Stand | 1 |
| 09 | Dot matrix printer | 1 | 18 | Gas Cooker | 1 |

(3096) - அதிபர் -


# கொரோனாத் தொற்று 2 ஆயிரத்தைக் கடந்தது

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 10 பேர் நேற்று செவ்வாய்க்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது. இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 2 ஆயிரத்து ஒன்றாக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது. (ம-3)


## மரண அறிவித்தல்



செல்வி

**மனோமகமணி நாராயணசுவாமி**

வட்டுக்கோட்டை கள்ளி வீதியைச் சேர்ந்த செல்வி மனோமகமணி நாராயணசுவாமி அவர்கள் நேற்று (24.06.2020) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அமரர்களான நாராயணசுவாமி-மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகளும் அமரர் மனோகரிதேவி (Retired Teacher Of holy Family Convent - Dehiwela), மனோரஞ்சிதமலர் (Retired Staff Nurse), அமரர் மகேந்திரன் (Retired Teacher), அமரர் சிறிதரன் (Retired Agriculture Instructor), மனோகரன் (சட்டத்தரணி), மோகனதாஸ் (பொறியியலாளர்), கலாநிதி ரத்தினவதனி (U.S.A) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பகிரதன் (திருகோணமலை), சுசிலா (New Zealand), லலித்தா (Retired Teacher- St.Bridgets Convent Colombo-07), திருமகள், கெங்காதரன் (U.S.A) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ரமணன் (Australia), ஜீவனி (U.S.A) ஆகியோரின் பாசமிகு சித்தியும் வித்தியாவின் (New Zealand) அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக இல.34,கள்ளி ஒழுங்கை, வட்டுக்கோட்டையில் புதன்கிழமை 12.00 மணிமுதல் வைக்கப்பட்டு, பின்னர் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (25.06.2020) காலை 7.00 மணிக்கு நடைபெற்று, காலை 9.00 மணிக்கு வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல. 34, கள்ளி ஒழுங்கை, வட்டுக்கோட்டை. (C-9755)
தகவல்:- நாராயணசுவாமி மனோகரன் (சட்டத்தரணி) -077 301 3652
நாராயணசுவாமி மோகனதாஸ் -075 053 2761



## மரண அறிவித்தல்



**மோசெஸ் யேசுதாசன்**
(ஓய்வு நிலை அதிபர்)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 13-06-1936 | 24-06-2020 |

மணற்காட்டைப் பிறப்பிடமாகவும் சக்கோட்டை அல்வாய் வடமத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட மோசெஸ் யேசுதாசன் அவர்கள் நேற்று (24.06.2020) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான மோசெஸ் - மரியப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராயப்பு - நந்தாலிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் எட்வீசம்மாவின் (ஓய்வுநிலை ஆசிரியை) பாசமிகு கணவரும் சூசைநாயகி (திருமகள்-லண்டன்), சூசைமலர் (செல்வமகள்) ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr.ஆனந்தராசா (பொறியியலாளர் - லண்டன்), ஜெறோம் ஜெயதாஸ் (கச்சேரி-முல்லைத்தீவு) அவர்களின் நேசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான மரியபுஸ்பம், ஸ்ரனிஸ்லாஸ் மற்றும் லூசியா (பிரான்ஸ் -றோஸ்), இராஜதாசன் (லண்டன்)ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ் சென்ற அருளானந்தம் மற்றும் ஜோண்பிள்ளை திருச்செல்வம், அருள் தாஸ், பிரான்சீஸ்கா, Dr. பாக்கியநாதன், இசபெலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் அருள்வளன், அமுதவளன், அமலவளன், குயின்சா, லோறன்சா, வெரோனிசா ஆகியோரின் பேரன்புத் தாத்தாவுமாவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று (25.06.2020) வியாழக்கிழமை பி.ப 2.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பி.ப 3.00 மணிக்கு புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்திற்காக பழைய வேதக் கோவிலடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சக்கோட்டை, அல்வாய்
076 464 9096
0044 750 422 5606
தகவல்:- குடும்பத்தினர்

# கருணாவை சிறையில் அடையுங்கள்

## சரத் பொன்சேகா கொதிப்பு





(கொழும்பு)

**முன்னாள் பிரதி அமைச்சரான கருணா என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன், சரணடைந்த 1200 படையினரையும் கிழக்கு மாகாணத்தில் 600 பொலிஸாரையும் கொலை செய்தார் என்பது உண்மை என சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

கருணா தெரிவித்திருப்பது போன்று ஆனையிறவிலும் கிளிநொச்சியிலும் 3000 இராணுவத்தினரை அவர் கொலை செய்யவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆனையிறவு முகாமினை ஒரே இரவில் தொடர் தாக்குதல்களினால் கைப்பற்றிய போது. 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்களை கொன்று குவித்தோம் என அண்மையில் கருணா அம்மான் தெரிவித்தமை தொடர்பாக கருத்து வெளியிடும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இராணுவத்தில் உள்ள அனைவரையும் கொலை செய்தேன் என்ற தோற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் அவர் பெரும் வீரராக முயல்கின்றார். ஆனால் அவர் சரணடைந்த வீரர்களையே கொலை செய்தார் என சரத் பொன்சேகா சுட்டிக்காட்டினார்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கருணாவிற்கு பதவி வழங்கியுள்ளது. அரசாங்கம் அவரை காப்பாற்றுகின்றது எனவும் சரத் பொன்சேகா குற்றம் சாட்டினார்.

மேலும் கருணாவை சிறையில் அடைக்கவேண்டும் எனவும் சரத் பொன்சேகா வலியுறுத்தினார். (ஜ-4)

# மக்களின் அமோக ஆதரவுடன் கொள்கைமாறா அரசியல் தொடரும்

## வேலுகுமார் நம்பிக்கை

(கண்டி)

கண்டி மாவட்டத்தில் தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தின் அவசியத்துவத்தை உணர்ந்துள்ள தமிழ் மக்கள், இம்முறையும் அமோக ஆதரவை வழங்குவதற்கு தயாராகி விட்டனர்.

எனவே, மக்களின் ஆசியுடன் மக்களுக்கான எமது கொள்கைமாறா அரசியல்பயணம்தொடரும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட வேட்பாளருமான வேலுகுமார் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கண்டி மாவட்டமென்பது மலையகத் தமிழர்களின் வரலாற்றுடன் தொடர்புடைய மாவட்டமாகும்.

1947 ஆம் ஆண்டு நடைபெற்ற தொகுதி அடிப்படையிலான பாராளுமன்றத் தேர்தலில் நாவ



லப்பிட்டிய தொகுதியில் இருந்தும், அளுத்நுவர தொகுதியில் இருந்தும் இரண்டு தமிழர்கள் பாராளுமன்றம் சென்றிருந்தனர். 48 ஆம்ஆண்டு குடியுரிமை மற்றும் வாக்குரிமை பறிக்கப்பட்டதால் 3 தசாப்தங்களுக்கு மேலாக மலையகத் தமிழர்கள் அரசியல் ரீதியில் அநாதைகளாக்கப்பட்டனர்.

1994 இல்நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைத்தது. எனினும், அதன்பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் அது இழக்கப்பட்டது. இரண்டு தமிழ்ப் பிரதிநிதிகள் தெரிவாகலாம் என்பது உட்பட சமூகத்தில் விதைக்கப்பட்ட தவறான பிரசார யுக்தியாலும் வாக்குகள் சிதறடிக்கப்பட்டதாலுமே இந்நிலைமை ஏற்பட்டது. இதனால் 15 ஆண்டுகளாக கண்டி மாவட்ட தமிழர்களின் குரல் பாராளுமன்றத்தில் ஒலிக்கவில்லை.

இந்நிலையில்தான் தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து தமிழ்மக்கள் ஓரணியில் திரண்டு "வாக்குரிமை" மூலம் தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை வென்றெடுத்தனர். இதற்கு எமது முஸ்லிம் சகோதரர்களும் ஒத்துழைப்பு நல்கினர்.

இம்முறையும் தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை மக்கள் தக்கவைத்துக்கொள்வார்கள் என்பது உறுதி. கடந்த முறைபோல் முஸ்லிம் சகோதரர்களும் நேசக்கரம் நீட்டுவார்கள். ஆனால், வெல்லவே முடியாது எனத் தெரிந்தும், வாக்குகளை உடைப்பதற்காக ஒப்பந்தகாரர்களாக சில தமிழர்கள் களமிறங்கியுள்ளனர். தமிழ் வாக்குகளை உடைத்து, இனவாதிகளை மகிழ்ச்சிப்படுத்துவதே இவர்களின் நோக்கம். எனவே, இப்படியான வேட்பாளர்களுக்கு வழங்கப்படும்வாக்குகளானவை வீணானவையாகவே அமையும்" எனத் தெரிவித்தார். (ஜ-4)

# பிரித்தானியாவிலிருந்து 154 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த இலங்கையர்களை நாட்டுக்கு மீண்டும் அழைத்து வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் நேற்றைய தினம் பிரித்தானியாவிலிருந்து 154 பேர் விசேட விமானம் மூலம் அழைத்து வரப்பட்டனர்.

லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் இருந்து குறித்த 154 பேரையும் ஶ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விசேட விமானம் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கியது. இவ்வாறு அழைத்துவரப்பட்ட அனைவரும் விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# குணமடைந்தோர் 1562

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 562 ஆக அதிகரித்துள்ளது.

இந்தத் தொற்றிலிருந்து நேற்று புதன்கிழமை மேலும் 14 பேர் குணமடைந்த நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானோரின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 991 ஆக பதிவாகியுள்ளது. அவர்களில் வைரஸ் தொற்றுக்கு உள்ளான 418 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களில் 11 பேர் இதுவரை உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# கருணாவின் வரலாறு இரகசியமானதல்ல; விமர்சனங்களுக்கு மகிந்த பதிலடி

(கொழும்பு)

கருணா அம்மான் குறிப்பிட்ட சர்ச்சைக்குரிய கருத்தினை அரசியலாக்கும் எதிர்த்தரப்பினர் விடுதலைப் புலிகளுக்கு யார், ஆயுதம் வழங்கியது என்பதை மறந்து விட்டார்கள். கருணாவின் வரலாறு ஒன்றும் இரகசியமல்ல, அனைவருக்கும் தெரிந்ததே எனப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

குளியாப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சவால்களை எதிர்கொள்ள முடியாதவர் சிறந்த தலைவராக செயற்பட முடியாது. நாம் ஆட்சி அதிகாரத்தை பெறும் போதெல்லாம் சவால்கள் அதிகரித்ததாகவே இருந்தது.

ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் தீர்க்க முடியாத



பல பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டோம். தற்போதும் பூகோள மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள கொவிட்-19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தி வெற்றி பெற்றுள்ளோம்.

கருணா அம்மான் குறிப்பிட்ட சர்ச்சைக்குரிய கருத்தினை தற்போது எதிர்த்தரப்பினர் தங்களின் அரசியல் பிரசாரங்களுக்கு முழுமையாக பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பு பலம் பெறுவதற்கு ஆயுதம் வழங்கிய நபர் தொடர்பில் கருத்துரைப்பது இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியதிகாரத்தில் இருக்கும் போது விடுதலைப் புலிகள் அமைப்புக்கு சார்பாக செயற்பட்டது. பலம் வாய்ந்த ஆயுதங்கள் வழங்கப்பட்டன. அந்த ஆயுதங்களை கொண்டே விடுதலைப் புலிகள் அமைப்பு இராணுவத்தினரை கொன்றார்கள். கருணா அம்மானின் வரலாறு ஒன்று இரகசியமல்ல, அனைவரும் அறிந்ததே என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# சஹ்றான் மீது உடன் நடவடிக்கை எடுங்கள் என பலமுறை தெரிவித்தும் பயனேதும் ஏற்படவில்லை

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் உளவுப்பிரிவு முன்னாள் பணிப்பாளர் சாட்சியம்



(கொழும்பு)

**காத்தான்குடி பகுதியில் சஹ்ரானின் கும்பல் தொடர்புபட்ட மோதல் சம்பவம் ஒன்றினை அடுத்து நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை அடுத்து சஹ்ரான் ஹஷீம் இந்தியாவுக்கு தப்பிச் சென்றதாகவும் அவ்வாறு படகில் இந்தியாவுக்குச் செல்ல அவருக்கு முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனின் சகோதரர் றிப்கான் பதியுதீன் உதவியதாகவும் உளவுப் பிரிவொன்றின் முன்னாள் பணிப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.**

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை சாட்சியமளிக்கும் போதே முன்னாள் உளவுத்துறை பணிப்பாளர் மேற்படி விடயத்தை வெளிப்படுத்தினார்.

அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில், "நான் பணியாற்றிய உளவுத்துறை, முன்னாள் தேசிய புலனாய்வு சேவைத் (என்.ஐ.எஸ்) தலைவர், ஓய்வு பெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிசிர மெண்டிஸ், முன்னாள் அரச புலனாய்வு சேவை பணிப்பாளர் நிலந்த ஜெயவர்தன ஆகியோருக்கு ஒன்பது சந்தர்ப்பங்களில் சஹ்ரானின் தீவிரவாத உரைகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து தகவல் அளிக்கப்பட்டது.

சமூக ஊடகங்களில் பரப்பப்பட்ட சஹ்ரானின் உரைகள் இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்) கருத்துக்களை ஒத்ததாக இருப்பதால், இது தொடர்பாக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட உளவுத்துறை பிரதானிகளை நான் கேட்டுக்கொண்டேன்.

என்.ஐ.எஸ். எனும் தேசிய புலனாய்வு சேவைக்கு தலைமை தாங்க வேண்டிய நபர் இந்த விடயத்தில் நன்கு அறிந்தவராக இருக்க வேண்டும். எனினும் சிசிர மெண்டிஸ் அத்தகைய பண்புகளைக் கொண்டிருக்கவில்லை.

கடந்த 2017 மார்ச் மாதம் தேசிய தௌஹீத் ஜமாத் தரப்புக்கும் மற்றொரு தரப்பினருக்கும் இடையே காத்தான்குடியில் மோதலொன்று ஏற்பட்டது. அந்த மோதலைத் தொடர்ந்து சஹ்ரான் கத்தான்குடி பகுதியில் இருந்து தப்பிச் சென்றார்.

அந்தச் சம்பவத்தை மையப்படுத்தி சஹ்ரான் உள்ளிட்டோரைக் கைது செய்ய நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. அதனால், சஹ்ரான் அவ்வப்போது மாவனெல்லை மற்றும் குருநாகல் பகுதிகளில் பதுங்கி இருந்ததும் தெரியவந்தது.

"பின்னர் 2018 ஆம் ஆண்டு சஹ்ரான் மன்னார் வந்து படகு மூலம் இந்தியா சென்றிருந்தார். சஹ்ரான் இந்தியாவின் ஐதராபாத்தில் இருந்து தனக்கு சொந்தமான யூடியூப் சனல் மூலம் மற்றொரு வீடியோவை வெளியிட்டிருந்தார்.

சஹ்ரான் இந்தியாவில் காஷ்மீர் வரை சென்றதாக அப்போது தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டன என உளவுத்துறை முன்னாள் பணிப்பாளர் சாட்சியம் அளித்தார்.

அப்போது ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், சாட்சியாளரிடம் இந்தியா செல்ல சஹ்ரானுக்கு யார் உதவி செய்தார்கள் என வினவினர். அதற்குப் பதிலளித்த அவர், றிப்கான் பதியுதீனே சஹ்ரானுக்கு படகு மூலம் இந்தியா செல்ல உதவியதாக கூறினார்.

அத்துடன் அவர் முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் சகோதரர் எனவும் சாட்சியாளர் வெளிப்படுத்தினார்.

ஏற்கனவே தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்த சஹ்ரான் போன்ற ஒருவருக்கு சக்திவாய்ந்த அமைச்சரின் சகோதரர் அளித்த ஆதரவைப் பற்றி தேசிய பாதுகாப்பு கவுன்சிலுக்கு (என்.எஸ்.சி) அறிவித்தீரா? என்று ஆணைக்குழு உறுப்பினர்கள் சாட்சியாளரிடம் மீளவும் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அவர், முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவுடன் இந்த விவகாரம் குறித்து கலந்துரையாடியதாக கூறினார். "ஒவ்வொரு செவ்வாயன்றும் நடைபெற்ற உளவுத்துறை கூட்டத்திலும் நான் இந்த விடயத்தைப் பற்றி விவாதித்தேன்.

2019 மார்ச் 19 அன்று இந்த விவகாரம் என்.ஐ.எஸ். தலைவரின் கவனத்திற்கு அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மூலம் கொண்டு வரப்பட்டது" என்று சாட்சியாளர் விளக்கினார்.

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புக்கு முன்னர் தேசிய பாதுகாப்பு கவுன்சில் கூடியதா? என்று ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மீளவும் சாட்சியாளரிடம் கேள்வி எழுப்பினர். தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் சபைக் கூட்டம் எதுவும் நடைபெறவில்லை என்றும் 2019 மார்ச் 20 மற்றும் ஏப்ரல் 2 ,9 ஆம் திகதிகளில் நடைபெற்ற உளவுத்துறை மறு ஆய்வுக் கூட்டங்களில் இந்த தகவலை தான் முன்வைத்ததாகவும் சாட்சியாளர் கூறினார். இந்த தகவல்கள் அப்போதைய பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ முன்னிலையில் தன்னால் முன்வைக்கப்பட்ட போதும் அவர்கள் அது தொடர்பில் எந்தக் கவனமும் செலுத்தவில்லை எனவும் சாட்சியாளர் சுட்டிக்காட்டினார். (ஐ-4-8)

---

# கொவிட்-19 பரவலின் எதிரொலி; போதியளவு வருமானம் கிடைப்பதில்லை

## பொதுப்போக்குவரத்து ஊழியர்கள் கவலை

(கொழும்பு)

கொவிட் - 19 பரவல் ஆரம்பித்த காலத்திலிருந்து தற்போது வரையில் மக்கள் பொதுப் போக்குவரத்துச் சேவைகளை பயன்படுத்துவது குறைவடைந்துள்ளதால் தங்களுக்கு போதியளவு வருமானம் கிடைப்பதில்லை என பொதுப் போக்குவரத்து ஊழியர்கள் போக்குவரத்து அமைச்சர் மகிந்த அமரவீரவிடம் தெரிவித்துள்ளனர்.

போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பொன்றின் போதே பொதுப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் ஊழியர்கள் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

குறித்த சந்திப்பின் போது கடந்த இரு வருடங்களாக போக்குவரத்து கட்டணங்களில் மாற்றங்கள் செய்யப்படவில்லை எனவும் போக்குவரத்துச் சேவை ஊழியர்கள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர்.

எவ்வாறாயினும் கொரோனா தொற்று காரணமாக நாட்டின் சகல துறைகளும் முடங்கிக்கிடக்கும் நேரத்தில் போக்குவரத்து கட்டணங்களை அதிகரிப்பது பொருத்தமற்றதென்னவும் அதனைச் செய்ய அரசாங்கம் தயாரில்லை என்றும் அமைச்சர் அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-8)

---

# சமூக நலனுக்காக அதன் இருப்புக்காக எமது கட்சி பாடுபடும் - றிசாத்



(கொழும்பு)

மக்கள் சமுதாயத்துக்கு அயராது சேவை செய்வதற்கான இயக்கமாக கட்சிகள் இருக்க வேண்டுமேயொழிய, ஒரு குறிப்பிட்ட சாராரை திருப்திப்படுத்துவதற்காகவோ, அவர்களை மகிழ்விப்பதற்காகவோ அல்லது அவர்களை பதவியிலிருத்தி அழகு பார்ப்பதற்காகவோ அவை இருக்கக்கூடாதென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

கடந்த 22 ஆம் திகதி பொத்துவிலில் இடம்பெற்ற கூட்டத்திலேயே அவர்இவ்வாறு கூறினார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "சமூக நலனுக்காகவும் அதன் இருப்பு, பாதுகாப்பு, உரிமை மற்றும் அபிவிருத்திகளை பெற்றுக்கொடுக்கும் ஒரு நிறுவனமாக கட்சிஇருக்க வேண்டுமென்பதில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தெளிவாகவும் உறுதியாகவும் இருப்பதுடன், அந்த வழியிலே குறுகிய காலத்தில் பயணித்து, பல்வேறு அடைவுகளையும் பெற்றுள்ளது என்பதில் திருப்தி காண்கின்றோம்.

தற்போதைய காலகட்டம் மிகவும் நிதானமாக சிந்திக்க வேண்டிய ஒன்று. அதுவும் எதிர்கொள்ளவுள்ள தேர்தல், நமது சமூகத்தைப் பொறுத்த வரையில் முக்கியத்துவம் வாய்ந்தது. இதனை நாம் சரியாகப் பயன்படுத்தவில்லையெனின் வருந்த நேரிடும்.

கடந்த பொதுத் தேர்தலில்; அம்பாறை மாவட்டத்தில் மக்கள் காங்கிரஸ், சுமார் 33,000 வாக்குகளைப் பெற்றது. இம்முறை அந்த எண்ணிக்கை இரட்டிப்படையும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

ஒவ்வொரு பிரதேசத்திலும் தரமான, தகைமையுள்ள, திறமையான வேட்பாளர்கள் பட்டியலில் இருப்பது இம்முறை நமது இலக்கை சுலபமாக்கும். இறைவனும் இதற்கு உதவி செய்வான்" என்று மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# இராசிபலன்

25.06.2020
ஆனி 11, வியாழக்கிழமை
சதுர்த்தி முற்பகல் 9.09 மணிவரை
ஆயிலியம் பிற்பகல் 1.04 மணிவரை
சுபநேரம் 7.25-8.55 மணிவரை
இராகுகாலம் 1.25-2.55 மணிவரை
சந்திராஷ்டமம்- உத்தராடம், திருவோணம்
ஸ்கந்த பஞ்சமி

வளவன்

**மேஷம்** — உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்** — பெற்றோரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் வந்து சேரலாம், நண்பர்கள் சந்திப்புண்டு.

**மிதுனம்** — இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**கடகம்** — குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு, வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்** — விருப்பங்கள் நிறைவேற கந்தனை வழிபடவேண்டிய நாள், குடும்பச்சுமை கூடும் நாள், நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி** — வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள்.

**துலாம்** — தொழில் முன்னேற்றகரமாக அமையும், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள்.

**விருச்சிகம்** — சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன நன்மையுண்டு, கௌரவமான நாள்.

**தனுசு** — அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தன்னம்பிக்கையோடு பணியாற்றுவீர்கள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம்.

**மகரம்** — சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், குடும்பத்தில் சில முரண்பாடுகள் தோன்றி மறையும்.

**கும்பம்** — இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**மீனம்** — சச்சரவை விட்டு சாதித்துக் காட்டுவீர்கள், உடல் நலன் சீராகும், செய்தொழில் மேன்மையுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

உண்மையும் எண்ணெயும் எப்போதும் அடியில் தங்காது

# தாயகம் எங்களுடையது என கூறி யாரும் நாட்டை மீண்டும் துண்டு போட முடியாது

## பிரதமர் காட்டம்



**(கொழும்பு) நாட்டில் இந்த மாகாணம் எங்களுடையது, இந்த தாயகம் எங்களுடையது என கூறி யாரும் இந்த நாட்டை மீண்டும் துண்டாக்க முயற்சித்தால் அது நிறைவேறாத விடயம் என்பதை நான் நினைவுபடுத்துகிறேன் என தமிழ் மக்களைப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ எச்சரித்தார்.**

அத்துடன் இது அனைவரின் நாடாகும். யாழ்ப்பாணத்தில் பிறந்தாலும் தெற்கில் பிறந்தாலும் இந்த நாடு சொந்தமாகும். இந்த இடம் ஒரு சிலருக்கு மட்டும் சொந்தமானது, ஏனையோர் சமூகமளிக்க முடியாதென கூறுவதற்கு யாருக்கும் உரிமையில்லையென்றும் சுட்டிக்காட்டினார்.

குருநாகல் தலவத்தகெதர பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


கடந்த 5 வருடங்களாக ஐ.தேகவினரும் சு.கவின் ஒரு தரப்பினரும் இணைந்தே ஆட்சியமைத்தனர். 2015 ஆம் ஆண்டு என்னை தோற்கடித்து, முன்னாள் ஜனாதிபதி ஆட்சிக்கு வந்தார்.

அதன் பின்னர் பொதுத்தேர்தலில் 96 ஆசனங்களை பெற்றோம், இப்பொழுது தேர்தல் வருகி றது. ஜனாதிபதியை பலப்படுத்தவும், சட்டதிட்டங்களை உருவாக்கவும் பலமான நாடாளு மன்றம் அவசியம். ஜனாதிபதி ஒரு பக்கமும் நாடாளுமன்றம் இன்னொரு பக்கமும் பயணித்தால், முன்னோக்கி நகர முடியாது. ஜனாதிபதிக்கு அதிகாரத்தை வழங்கி வேலைத்திட்டங்களை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டுமென்றால், ஜனாதிபதி பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிக்கே நாடாளுமன்ற அதிகாரத்தை வழங்க வேண்டும். சிலர் தங்களுக்கான தாயகம் முக்கியமென கூறுகிறார்கள். ஆனால் அனைவருக்கும் சொந்தமான தாயகமே இலங்கை.

ஆகவே இலங்கையை துண்டாக்க அனுமதிக்க முடியாது. இந்த மாகாணம் எங்களுடையது.இந்த இடம் எங்களுடையதென கூறியாரும் இந்த நாட்டை துண்டாட முயற்சித்தால் அது தவறானதென்பதை நினைவுபடுத்துகிறேன் என அவர் சுட்டிக் காட்டினார். (ஜ-8)

# ராஜபக்ஷக்கள் பகல்கனவு காண்கின்றனர்

## அநுரகுமார கூறுகிறார்



(கொழும்பு)

அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணைகளை நடத்தும் இந்த ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் அல்லது அதனுடன் தொடர்புடைய குழுக்களுடைய தேவைக்காக இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை.

இதன் பின்புலத்தில் வெறும் அரசியல் நோக்கங்களே காணப்படுகின்றன என்று தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க, நாட்டிலுள்ள பொது மக்களின் சொத்துக்களை கோடிக் கணக்கில் கொள்ளையிட்ட குழுக்கள் மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) செயற்பாடுகளால் அதிருப்தியடைந்துள்ளமையே இதற்கான காரணமாகும் என்றும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையானதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளுக்கு எதிரான போராட்டங்களில் ஜே.வி.பி. பிரதானமாகச் செயற்பட்டமை அனைவரும் அறிந்த விடயமாகும்.

ராஜபக்ஷக்களும் ஊழல் மோசடிக்காரர்களும் கொள்ளைக்காரர்களும் ஊழல் மோசடிக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களை முடக்க முயற்சிகளை ஆரம்பித்துள்ளனர்.

ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு எம்மை அழைத்து அதன் மூலம் எமது போராட்டங்களை முடக்கி விடலாம் என்று அவர்கள் கற்பனை செய்துள்ளனர். ஆணைக்குழுவிற்கு அழைப்பது மாத்திரமல்ல எம்மை சிறையிலடைத்தாலும் எமது போராட்டம் கைவிடப்படமாட்டாது.

இவ்வாறான சிறு செயற்பாடுகள் மூலம் ஜே.வி.பியின் போராட்டங்களை நிறுத்திவிட முடியாது என்பதை ராஜபக்ஷக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் அவ்வாறு எண்ணுவார்களாயின் அது அவர்களது பகல் கனவாகும். தேசிய சொத்துக்களை கொள்ளையிட்டவர்களில் அரசியல் குழுக்களும் உள்ளடங்குகின்றன. இவற்றில் அவன்கார்ட் நிறுவனமும் ஒரு பங்குதாரராகும். கடற்படையினரால் முறையாக முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்த போதிலும் கோட்டாபய ராஜபக்ஷவின் தலையீட்டினால் அவன்கார்ட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அது பொதுமக்களுக்கு உரித்துடைய தேசிய சொத்தாகும்.

எனவே இதனை தனியார் துறை கையகப்படுத்துவதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. இது தொடர்பில் பாராளுமன்றத்திலும் தெரியப்படுத்தியிருக்கின்றோம்.

பல்வேறு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருக்கின்றோம். ஜனாதிபதி ஆணைக் குழுவிலும் இது தொடர்பில் ஆதாரங்களை ஒப்படைத்துள்ளோம்.

எத்தனை கோடிக்கணக்கான சொத்துக்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன என்பதை மக்களுக்கு தெரியப்படுத்துவோம் என அவர் தெரிவித்தார். (ஜ-4)



வயாவிளான் மத்திய கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள கற்பக விநாயகர் ஆலய கும்பாபிஷேக தின விசேட அபிஷேகமும், பூசையும் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்றது. கிரியைகளை சிவஸ்ரீ நாகேஸ்வரக் குருக்கள் சிவசுந்தரசர்மா நிகழ்த்தினார்.

(படம்:- குப்பிழான் செய்தியாளர்)

# பொதுச் சுகாதார பரிசோதகரைத் தாக்கியவருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வீதியில் கழிவுப் பொருட்களை வீசுவதைத் தடுத்த பொதுச் சுகாதாரப் பரிசோதகரை தாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை நாளை 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அத்தியடி பகுதியில் வீதியில் நீண்டகாலமாக கழிவுப் பொருட்கள் வீசப்பட்டு வந்தன. அதனால் அப்பகுதியைச் சூழவுள்ள குடியிருப்பாளர்கள் பாதிக்கப்பட்டனர். இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்க அந்தப் பகுதிக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கழிவுகள் வீசப்படும் பகுதியில் சென்ற போது ஒருவர் கழிவுப் பொதியை வீசுவதற்கு முற்பட்டதை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தடுக்க முற்பட்டுள்ளார்.

அதனால் இருவருக்கு இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. ஒருகட்டத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரைத் தாக்கிவிட்டு குப்பைப் பொதியை வீசிவிட்டு அந்த நபர் தப்பிச் சென்றார்.

சம்பவத்தில் காயமடைந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார்.

இந்நிலையில் தாக்குதல் நடத்தியவரின் மோட்டார் சைக்கிள் இலக்கத் தகட்டின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் அதன் உரிமையாளரை கடந்த திங்கட்கிழமை கைது செய்தனர்.

பொலிஸாரால் அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

பொது ஊழியர் ஒருவரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை, பொது ஊழியரின் கட்டளையை மதிக்காது செயற்பட்டமை, பொது ஊழியருக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் செயற்பட்டமை மற்றும் பொது ஊழியரைத் தாக்கியமை ஆகிய நான்கு குற்றச்சாட்டுக்கள் அறிக்கையில் முன்வைக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதவான் ஏ.பீற்றர்போல், சந்தேக நபரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (4-5)

# வியாபாரிகளின் கொள்வனவில் பாதிப்படையும் விவசாயிகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச் சந்தையில் விவசாயிகளிடம் இருந்து மரக்கறி வகைகளை கொள்வனவு செய்யும் போது பத்து வீதம் கழிவு விதிப்பது விவசாயிகளின் வயிற்றில் அடிக்கும் செயற்பாடு என சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் க.கஜிதன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகர சபையில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற விசேட அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சந்தையில் விவசாய உற்பத்திப் பொருட்களை விவசாயிகளிடம் இருந்து வியாபாரிகள் கொள்வனவு செய்யும் போது பத்து வீதக் கழிவுடனே பணத்தைக் கொடுக்கின்றனர். இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

கிழங்கு வகைகளுக்கு பத்து வீதக் கழிவு ஓரளவு பொருத்தமாக இருப்பினும் காய்கறி வகைகளுக்கு இக்கழிவு விதிப்பது நியாயமற்றது. சந்தையில் வரி வசூலிப்பாளர்கள் விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வரும் பொருட்களின் நிறைக்கே வரி வசூலிக்கின்றனர்.

இதன்போது பத்து வீதக் கழிவுத் தொகை கணக்கில் எடுக்கப்படுவதில்லை. இதனாலும் விவசாயிகள் பாதிப்படைகின்றனர் என அவர் தெரிவித்தார்.

சாவகச்சேரி பொதுச் சந்தையில் உழவர் சந்தைக்கு இடம் ஒதுக்கி விவசாயிகளுக்கு வாய்ப்பளிந்திருந்தால் அவர்கள் பாதிப்படைவது குறைந்திருக்கும் என ஏனைய சபை உறுப்பினர்களும் வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது. (4-5-30)

# மும்மொழி கற்கை நெறிகள் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மும்மொழிக் கற்கை நிலையத்தினால் நடத்தப்பட்ட 2018/2019, 2019/2020 கல்வி ஆண்டுகளுக்குரிய A.B பிரிவு சிங்களமொழி, ஆங்கில மொழி மற்றும் தமிழ் மொழிக் கற்கை மாணவர்களுக்கான அனைத்துக் கற்கை நெறிகளும் கொவிட்-19 நோயின் பின் எதிர்வரும் 29.06.2020 திங்கள் பிற்பகல் 4 மணி முதல் வழமையான நேர அட்டவணையின் பிரகாரம் ஆரம்பமாகும் என மும்மொழி கற்கை நிலைய பதில் பணிப்பாளர் பி.என்.சுதர்ஷன் அறிவித்துள்ளார். (5)

# மாணிக்கவாசகர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் அறநெறிப் பாடசாலை நடத்தும் மாணிக்கவாசகர் குருபூசை தின விழா நாளை 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் நடைபெறும். (4-5)


# அலங்காரத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

சரவணை மேற்கு ஸ்ரீ அருள் வரத காளியம்பாள் தேவஸ்தான வருடாந்த அலங்காரத்திருவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தலின்படி மட்டுப்படுத்தப்பட்ட பக்த அடியார்களுடன் திருவிழா நடைபெறவுள்ளது. (4-5)

# தமிழ் இசையால் பெருமை சேர்த்த சங்கீதபூஷணம் ப.முத்துக்குமாரசாமி



முதலாம் ஆண்டு நினைவு இன்றாகும்

சங்கீதபூஷணம் ப.முத்துக்குமாரசாமி இலங்கைத் திருநாட்டின் சிரசு எனப் போற்றப்படும் யாழ்ப்பாணத்தில் பிறந்து, இசையே மூச்சாகி, தம் வாழ்வினை இசைக்காகவே அர்ப்பணித்தார். இலங்கை வானொலியில் பல துறைகளிலும் கோலோச்சித் தனக்கென ஒரு நேயர் பட்டாளத்தையே கொண்டிருந்த பெரும் கலைஞன். எண்பத்தாறுகளுக்குப் பின் சென்னை சென்று தன் கடைசி மூச்சுவரை தமிழிசைக்குத் தொண்டாற்றி எமை விட்டுப் பிரிந்து அதற்குள் ஒருவருடம் ஓடிவிட்டது.

சங்கீதபூஷணம் ப.முத்துக்குமாரசாமி 1986 ஆம் ஆண்டுக்குப் பின் இந்தியாவிலேயே வாழ்ந்தவர். தன் எண்பத்தேழாவது வயதில் அவர் இயற்கை எய்தும் வரையும் அவரது தனித் தமிழிசை ஒலித்துக்கொண்டே இருந்தது.

இலங்கையின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தின் சுழிபுரம் பறாளாய் முருகன் கோயிலடியைத் தாயவள் வீடாகவும் நல்லூரைத் தந்தை ஊராகவும் கொண்டவர்.

கலைப் பாரம்பரியம் மிக்கதோர் சூழலில் பரமசாமிக்குருக்கள் இரத்தினம்மா தம்பதியினருக்கு இரண்டாவது புத்திரனாகப் பிறந்தார் முத்துக்குமாரசாமிசர்மா. சிறுவயதில் மாமனார் வைத்தியநாத சர்மாவினால் கலை ஆர்வம் மிக்கவராக ஆக்கப்பட்டார். தவில் மேதை தட்சணாமூர்த்தியும் முத்துக்குமாரசாமியும் பள்ளிக் காலந்தொட்டே மிக நெருங்கிய நண்பரகள். இவர்கள் நட்பு ஆயுள் வரை நீடிக்க இசையே காரணமானது.

தன் இருபத்தேழாவது வயதில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீதபூஷணம் படிப்பை மேற்கொண்டார்.

இசை என்பது பூர்வஜென்ம புண்ணியம். இறைவனின் பெருங்கொடை அது. 'இசை இசை' என்று வாழ்ந்த இவர், சங்கீதபூஷணமாக உருமாறியது சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் குருநாதர் இசையரசு எம்.எம். தண்டபாணி தேசிகரது வழிகாட்டலில் என்றால் மிகையில்லை.

இசையருவி, கலையருவி என இரு இசையிதழ்களை இலங்கையிலிருந்து வெளியிட்டுப் பின் இந்தியாவிலிருந்து இசை ஏடு எனும் இசையிதழை வெளியிட்டார் என்பதும் இவரது இசைப் பயணத்தில் ஒருமைல் கல்லாக அமைந்தது.

இலங்கையின் மிகச் சிறந்த சங்கீத ஆசானாய் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியிலும் இவர் ஆற்றிய இசைப்பணி மகத்தானது.

சங்கீதபூஷணம் முத்துக்குமாரசாமியின் குரல், இலங்கை வானொலிக்கும் அதன் தமிழ் நேயர்களுக்கும் செல்லப் பிள்ளையாகியது. நேரடி இசைக் கச்சேரி, மெல்லிசைப் பாமாலை, இசைச் சித்திரங்கள், ஆய்வுப் பேச்சுக்கள் எனச் சகலகலா வல்லவராக இலங்கை வானொலியில் இவரது குரலோசை வலம் வந்தது.

வானொலி நிகழ்ச்சியின் சிகரமாக "நாதவிநோதம்" என்ற நூறு வார நிகழ்ச்சி கொடிகட்டிப் பறந்ததோடு, மார்கழி மாதத்தில் ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வரர் ஆலயத்தில் இருந்து அதிகாலை நேரத்தில் திருவெம்பாவை என்னும் தேனமுதாயும் நல்லூர்க் கந்தன்மேல் எழுதி இசையமைத்துப் பாடிய பாடல்கள் தேர் உற்சவத்தில் இசையோடு கூடிய நேரடி வர்ணனையாய் இவரது காந்தக் குரலில் ஒலித்தது. புளியங்கூடல் முத்து மாரியம்மன் மீது பாடிய பாடல்களும் உலக மாதாவாகிய கற்பகாம்பாள் மீது பாடிய நூற்றுக்கணக்கான பாட்ல்களும் வானலையில் பக்திரசமாய் ஒலித்தன. தனக்கென இலங்கை வானொலியில் ஒரு நேயர் பட்டாளத்தைக் கொண்டிருந்த சாதனை ஒருபுறம், நேரடியான இசைக் கச்சேரிகள் பலவற்றையும் சாதனையாகச் செய்து காட்டினார். அவரது மகோன்னத சேவையும் தாராள குணமும் சிதம்பரநாதனின் அருட்கடாட்சமும் அவருக்கு பேரின்ப பெருவாழ்வை அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

**அ.உமாமகேஸ்வரன்**
**இந்து கலாசார அலுவல்கள் பணிப்பாளர்.**

# தமிழ்சார் பாராளுமன்ற அரசியல் எங்கு செல்கின்றது?

ஜனநாயக அரசியல் அமைப்பில் அதி உச்ச பீடமும் ஒரு தேசத்து மக்களின் இறையாண்மையைப் பிரதிபலிக்கின்ற மக்களாட்சி மையமாகவே நாடாளுமன்றம் காணப்படுகின்றது.




இலங்கையில் நாடாளுமன்ற தேர்தல் நெருங்குகின்ற இந்த வேளையில் தமிழர் சார் ஜனநாயக அரசியல் முனைப்புக்கள் ஆரோக்கியமான முறையில் முன்னகர்த்தப்பட வேண்டியது ஒரு தேசிய இனத்தின் அரசியல் இருப்புக்கு இன்றியமையாததாகும். விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்ட மௌனிப்பிற்கு பிற்பட்ட ஒரு தசாப்த கால மிதவாத அரசியலின் போக்கு தமிழர் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் முன்னகர்த்தப்படுகிறதா? என்றால் அது இல்லை என்பதே இங்கு பதிலாகப் பெறமுடியும்.

நீண்டகால இன விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழரின் பெரும் அரசியல் சக்தியாகத் திகழ்ந்தவர்கள் புலிகளே. அரசியல் தீர்வு தொடர்பான அவர்களுடைய முன்னகர்வுகள், மூலோபாயங்கள் என்பன நேர்மையானதாகவும் முற்றுமுழுதாக ஒரு இனத்தின் அரசியல் உரிமையுடன் கூடிய நல்வாழ்வுக்காகவே அமைந்திருந்ததை அவர்களுடைய தீர்வுத்திட்ட முன்மொழிவுகளை நோக்குகின்ற போது தெளிவாகவே புரிந்து கொள்ள முடிகின்றது.

2001 ஆம் ஆண்டு சமாதானக் காலப்பகுதியிலே வன்னிப் பிராந்தியத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வெளிநாட்டு ஊடகவியலாளர் ஒருவர் அரசியல் தீர்வு தொடர்பாக நேர்காணலை மேற்கொண்டிருந்தார். அதன்போது அப்பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரிடம் அந்த ஊடகவியலாளர் ஒரு கேள்வியைக் கேட்டிருந்தார். அதாவது விடுதலைப்புலிகளது அரசியல் தீர்வு முயற்சிகள் பற்றி தமிழர் இனம் சார்ந்த ஒருவர் என்ற ரீதியில் நீங்கள் என்ன கருதுகிறீர்கள் என்றார். அதற்கு அந்த ஆசிரியர் சற்றும் தாமதிக்காமல் "விடுதலைப்புலிகள் முன்வைக்கின்ற அரசியல் தீர்வு நிச்சயமாக தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடியதும் நீதியானதுமாகவே இருக்கும். ஏனெனில் அவர்கள் அரசியல்வாதிகள் அல்ல போராளிகள். இனத்துக்காய் உயிரைக் கொடுத்தார்கள்" என்றார்.

இக் கருத்தானது தமிழ் மக்களின் ஏகோபித்த கருத்தாகவே இருந்ததாக அந்த ஊடகவியலாளர் கூறியிருந்தமையை அந்த அரசியல் பெட்டக நிகழ்ச்சியை தொலைக்காட்சியில் காண்கின்ற போது புரிந்து கொள்ள முடிந்தது. இது ஒரு இனம் தமது அரசியல் உரித்துக்களை நிர்ணயிக்கின்ற உரிமையை மானசீகமாக ஒரு தலைமைத்துவத்திடம் வழங்கியிருந்தமையை எடுத்துக் காட்டுகிறது.

இவ்வாறான ஒரு அரசியல் வாழ்வுரிமை நிர்ணயிப்பை ஒரு நம்பிக்கையான தலைமைத்துவத்திடம் கையளித்துவிட்டு அதற்குப் பக்கபலமாக பயணித்தவர்கள் தான் தமிழ் மக்கள். இவ்வாறான ஒரு நீண்ட அரசியல் சூழ்நிலைக்குள் வாழ்ந்த இனம் திடீரென அந்த நம்பிக்கை சிதைக்கப்பட்டதன் பின்னர் எழுந்த அரசியல் சூழ்நிலையில் ஒரு அரசியல் விரக்தி மனோ நிலைக்கே தள்ளப்பட்டார்கள் என்பதோடு தலைமைத்துவ வெற்றிடம் என்று வியாபகம் பெற்றதாக எண்ணும் மனோ நிலையிலேயே இருந்தார்கள் எனலாம்.

இங்கே தான் தமிழர் அரசியல் இனத்தேசிய நிலையிலிருந்து கட்சி அரசியலாக மாற்றம் பெறத் தொடங்கியது. இதற்கு பல்வேறு அகப்புறக்காரணிகள் உண்டு. அதை ஆய்வது இப்பத்தியின் நோக்கமல்ல. ஆயினும் தமிழர் சார் அரசியலை முன்னெடுப்பவர்களை தமிழ் மக்கள், கட்சிப் பிரமுகர்களாகவோ அல்லது கட்சியின் தலைவர்களாகவோ பார்க்கிறார்களே அன்றி ஒரு இனத்தின் தலைவர்களாகப் பார்ப்பதில்லை என்பதுதான் இன்றைய கசப்பான யதார்த்தம். தமிழ் மக்களின் நோக்கு நிலையில் இருந்து பார்க்கும் போது இன்றைய அரசியல் நிதர்சனம் இதுதான் என்பது மறுக்க முடியாத உண்மை.

தெற்கு அரசியல் தளத்தை நோக்குகின்ற போது அங்கு பெருந்தேசியவாத எழுச்சி தழைத்தோங்குகின்றது. கட்சி சார் அரசியல் பாரம்பரியம் அங்கு கால்பதித்த போதும் பேரினவாத எழுச்சிக்கு உரமூட்டுகின்ற கட்சித் தலைவர்களை பெரும்பான்மை இனத்தின் தலைவர்களாக ஆதரிக்கின்ற அரசியல் போக்கு முனைப்பு பெறுகிறது. இதை தமிழர் தேசியவாதத்தை தோற்கடிப்பதற்கான ஆயுதமாக தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் பின்பற்றுகின்றனர்.

இவ்வாறான களச்சூழலில் தமிழர் தரப்பின் ஜனநாயக அரசியல் முனைப்புக்கள் பாதிக்கப்பட்ட இனத்தின் அரசியல் அபிலாசைகளை முன்னெடுப்பதில் தோல்வியை நோக்கியே செல்கிறது என்பது தெளிவாகிறது. ஏனெனில் சனத்தொகை அளவில் குறைந்த எண்ணிக்கையுள்ள ஒரு இனத்தின் மத்தியில் இருந்து அதிகளவான சுயேட்சைக்குழுக்களும் அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும் தேர்தலில் களம் இறக்கி (இறக்கப்பட்டும்) இருப்பது ஆரோக்கியமானதல்ல. யாழ். தேர்தல் மாவட்டத்தின் வாக்குச்சீட்டின் நீட்சியைக் கொண்டே இதனை புரிந்து கொள்ள முடியும். கடந்த காலத் தேர்தல்களில் பெரும்பான்மையான தமிழ் மக்கள் தங்கள் அரசியல் வேணவாவை மிகத் தெளிவாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்கு வாக்களித்ததன் மூலம் தெரியப்படுத்தியிருந்தார்கள்.

ஆயினும் அபிவிருத்தி ரீதியாகவோ அல்லது அரசியல் ரீதியாகவோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த ஆதரவை தமிழ் மக்கள் அரசியல் பேரத்திற்கான ஆயுதமாகப் பயன்படுத்தவில்லை என்ற விமர்சனம் பல்வேறு தரப்பாலும் முன்வைக்கப்படுகின்றது.

அதாவது தமிழ் மக்கள் ஒற்றுமையாகப் பல தடவைகள் தங்கள் ஆதரவை அக்கட்சிக்கு வழங்கியிருந்தும் அம் மக்களின் தலைவர்கள் என்று கூறிக் கொண்டு நாடாளுமன்றம் சென்றவர்கள் உட்கட்சி அதிகாரப் போட்டிகளிலும் பூசல்களிலும் ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சிகளிலும் ஈடுபட்டார்களே அன்றி தமிழ்த்தேசிய அரசியலை முன்கொண்டு செல்வதிலோ சிரத்தை காட்டவில்லை என்பது பெரும்பாலான தமிழ் மக்களின் பரந்த கருத்தாகக் காணப்படுகிறது.

கடந்த காலங்களில் தமிழர் அரசியல் சக்தியானது கட்டமைக்கப்பட்ட கொள்கை ரீதியாக ஒரு திரட்சியாகவே இருந்து வந்திருக்கிறது. ஆயினும் இன்று கட்சிக் கட்டமைப்பாக இருப்பதாகக் கூறிக்கொண்டு தனிநபர் நலன் சார்ந்த அரசியலை முன்னெடுக்கின்றார்.

இனம் சார் நிலையான கொள்கைகளுக்கு அப்பால் சென்று பாராளுமன்ற கதிரைகளுக்கான குடுமிப்பிடிச் சர்ச்சையில் ஈடுபடுகின்றனர். தனி நபர் சுய இலாப சிந்தனைகளை ஒரு இனத்தின் தோள் மீது ஏறி நின்று அதன் பிம்பங்களாக பிரதிபலிக்க முயல்கின்றனர். தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் மீட்பாளராக தம்மைக் காட்டிக் கொண்டு பிராந்திய வல்லரசுகளின் நலன்சார் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய தமிழர் அரசியலை முன்கொண்டு செல்ல முயல்வதாகவும் அரசியல் ஆய்வாளர்கள் விமர்சிக்கின்றார்கள்.

ஒட்டுமொத்தத்தில் நோக்குகின்ற போது கொள்கைக்காக ஈகத்தின் உச்சிக்கே சென்ற இனத்தின் அரசியல் வேணவா இன்று எவ்வித இலட்சியமோ கொள்கைகளோ அற்று வெறும் பாராளுமன்ற கதிரைக்களுக்கானது என்று எண்ண வைக்கும் அளவுக்கு கீழ்மை நிலைக்குச் சென்றுள்ளது. ஆயினும் பாராளுமன்ற தமிழ் பிரதிநிதித்துவமூடாக தமிழ் மக்களிற்கு இயன்றதைச் செய்யலாம். அபிவிருத்தியையும் வாழ்வாதாரத்தையும் கூட மேம்படுத்தலாம் என்ற மனோநிலையிலும் சில நேர்மையான அரசியல் தலைவர்கள் இருப்பது மறுக்க முடியாததாகும். எது எவ்வாறாயினும் தமிழ் மக்கள் தற்போது திரிசங்கு சொர்க்க நிலையிலேயே இருக்கிறார்கள் என்பது தான் உண்மை.

எனவே வரப்போகும் பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் தமிழ் மக்களின் அரசியல் சக்தித்திரட்சியை ஓரளவேனும் கூறு போடும் என்பதோடு பாராளுமன்ற ஜனநாயக அரசியலிலும் தமிழ் இனம் தோற்றுப்போனதாகவே வரலாறு கூறும் என்ற அளவிற்கான அரசியல் களச் சூழலிலே வியாபித்து நிற்கின்றதென்பதே நிதர்சனம்.

**க.மதுராந்தகன்**

# இடுகம கொவிட்-19 சமூக பாதுகாப்பு நிதிய மீதி ஆயிரத்து 392 மில்லியனாக அதிகரிப்பு

(கொழும்பு)

தனிப்பட்ட, நிறுவன அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புகளுடன் 'இடுகம' கொவிட்-19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி ஆயிரத்து 392 மில்லியனாக அதிகரித்துள்ளது.

மல்வத்து பீடத்தின் அனுநாயக்க தேரர் பேராசிரியர் சங்கைக்குரிய நியங்கொட விஜித்த சிறி ஒரு இலட்சத்து 92 ஆயிரத்து 516 ரூபாவையும் மெதிரிகிரிய பௌத்த மத்திய நிலையத்தின் தலைவர் சங்கைக்குரிய மெதிரிகிரியே அஸ்ஸஜி தேரர் ஒரு இலட்சம் ரூபாவையும் கல்வி அமைச்சின் பிரிவெனா கல்விப் பிரிவு 44 இலட்சத்து 84 ஆயிரத்து 500 ரூபாவையும் கொவிட் நிதியத்திற்காக ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

பட்டுவிட்ட வன சேனாசனாதிபதி சங்கைக்குரிய கம் புறுகமுவே வஜிரசீஹ தேரர் நேரடியாக அன்பளிப்பு செய்த தொகை ஒரு இலட்சம் ரூபாவாகும்.

உடுதும்பர பிரதேச செயலக பிரிவின் ஊனமுற்றவர்களின் சுவசக்தி அமைப்பு 50 ஆயிரம் ரூபாவையும் உடுதும்பர பிரதேச செயலகத்தின் சமூக சேவை அதிகாரி ஏ.டபிள்யு.ஏ.கே. அமுனுகம 10 ஆயிரம் ரூபாவையும் பெலருசின் கோமல் (Gomal) பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட மாணவர்கள் ஒரு இலட்சத்து 85 ஆயிரம் ரூபாவையும் திருமதி புத்தினி ஜின தாச ஒரு இலட்சம் ரூபாவையும் ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் எம்.எம்.ஜயதிலக 40 ஆயிரம் ரூபாவையும் சட்டத்தரணி வினுர ஜயவர்தன 10 ஆயிரம் ரூபாவையும் அரச சார்பற்ற அமைப்பு செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் ராஜா குணரத்ன 88 ஆயிரம் ரூபாவையும் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி இந்திரபால கே.கப்புகே 10 ஆயிரம் ரூபாவையும் இந்நிதியத்திற்கு அன்பளிப்பு செய்துள்ளனர்.

தற்போது இடுகம கொவிட் 19 சுகாதார, பாதுகாப்பு நிதியத்தின் மீதி ஆயிரத்து 392 மில்லியன் ரூபாவாகும்.

உள்நாட்டு, வெளிநாட்டு நன்கொடையாளர்கள் இக்கணக்கிற்கு பங்களிப்பு செய்து வருகின்றனர்.

காசோலைகள் அல்லது டெலிகிராப்கள் மூலமும் **www.itukama.lk** என்ற இணையத் தளத்தின் ஊடாகவோ அல்லது **#207#** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பங்களிப்பை செய்ய முடியும். **0760700700/ 0112320880/ 0112354340/ 0112424012** என்ற இலக்கங்களுடன் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (ஜ-4)

# தீர்வு கிடைக்கும்வரை போராட்டம் தொடரும் காஞ்சுரமோட்டை மக்கள் உறுதி

(நெளுக்குளம்)

**வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட காஞ்சுரமோட்டை மக்கள் வனவளத் திணைக்களத்தின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துமாறு கோரி மூன்றாவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களை நேற்று முன்தினம் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் இ.பிரதாபன் மற்றும் வடக்கு பிரதேச சபை தலைவர் இ.தணிகாசலம் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடினர்.**

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட காஞ்சுரமோட்டை மற்றும் நாவலர் பண்ணை பகுதிகளில் போர்ச் சூழல் காரணமாக 1980-1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெயர்ந்து இந்தியா உட்பட வேறுபகுதிகளிற்கு இடம் பெயர்ந்து சென்ற மக்கள் கடந்த 2012 ஆம் ஆண்டளவில் மீண்டும் வந்து காடுகளாகக்கிடக்கும் தமது காணிகளை துப்புரவு செய்து தற்காலிகக்கொட்டகைகளை அமைத்து வசித்து வந்தனர்.



அவ்வாறு மீளக்குடியேறிய 38 குடும்பங்களுக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையினூடாக வீட்டுத்திட்டத்திற்கான முதற்கட்ட நிதி வழங்கப்பட்டுள்ள நிலையில் பல வீடுகள் கட்டப்பட்டு முடிவுறாத நிலையில் உள்ளது.

இந்நிலையில் குறித்த காணிகள் தமக்குரியது என்று வனவளத் திணைக்களத்தால் நீண்டகாலமாக கூறப்படுவதுடன் குறித்த காணிகளில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ளும்போது தடையையும் ஏற்படுத்தி வருவதுடன் காணிகளைத் துப்புரவாக்கினாலோ அல்லது கட்டுமானப் பணிகளை மேற்கொண்டாலோ கைது செய்வோம் எனவும் மக்களை எச்சரித்து வருகின்றனர்.

இதேவேளை காடுகளாகக் காணப்படும் குறித்த காணிகளிற்குள் அமைந்துள்ள பாழடைந்த வீடுகள் மற்றும் கிணறுகள் பல வருடங்களுக்கு முன்னர் தாங்கள் வசித்தமைக்கான ஆதாரமாக இருப்பதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிப்பதுடன் சிலர் காணிக்கான அனுமதிப்பத்திரங்களையும் வைத்துள்ளனர்.

இந்நிலையில் வனவளத் திணைக்களத்தினால் தொடர்ந்து அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்ற மக்கள் அனைத்து தரப்பினர் மீதும் நம்பிக்கை இழந்த நிலையில் தமக்கான தீர்வினைக் கோரி கடந்த திங்கட் கிழமை போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். தமக்கான தீர்வு கிடைக்கும் வரை குறித்த போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பாக வவுனியா மாவட்ட வனவளத் திணைக்களத்தின் பொறுப்பதிகாரியான கே.நாணயக்காரவிடம் கேட்டபோது குறித்த காணிகளில் முன்னர் மக்கள் வாழ்ந்தமைக்கான அடையாளங்கள் காணப்பட்டால் அதனை அடையாளப்படுத்திய பின்னர் அவர்களுக்கு வழங்குவதில் தமக்கு ஆட்சேபனை இல்லை என்றும் அக்காணிகளை அடையாளப்படுத்தும் நடவடிக்கைகளைத் தொடர்புடைய ஏனைய அரச திணைக்களங்களோடு இணைந்து தாம் மேற்கொள்வதற்கு தயாராக இருப்பதாகவும் இவ்விடயம் தொடர்பாக வடக்கு பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகங்களுக்கும் ஏற்கனவே தெரியப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார். (5-4-299)

# பாடசாலைகளுக்கு கிருமித் தொற்று நீக்கி விசிறும் பணி யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்



(கொழும்பு)

பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் யாழ்.பிரதேச செயலகத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கிருமித் தொற்று நீக்கும் பணிகள் யாழ்.பிரதேச செயலர் எஸ்.சுதர்சனின் ஒருங்கிணைப்பில் சிறப்பு அதிரடிப்படையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த 3 மாதங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 5 கட்டங்களாக மீள ஆரம்பிக்கப்படவுள்ளன. அதன்படி எதிர்வரும் 29 ஆம் திகதி அனைத்துப் பாடசாலைகளுக்கும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் கடமைக்குத் திரும்ப வேண்டும். எதிர்வரும் ஜுலை 6 ஆம் திகதி திங்கட்கிழமை 5 ஆம் 11 ஆம் மற்றும் 13 ஆம் தரங்களில் பயிலும் மாணவர்களுக்கும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை 10 மற்றும் 12 ஆம் தரங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை 3,4,6, 7,8,9 ஆம் தரங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பமாகும். எனினும் தரம் ஒன்று மற்றும் இரண்டில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கற்றல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படவில்லை என்று கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு நேற்று புதன் கிழமை தொடக்கம் எதிர்வரும் சனிக்கிழமை வரை பிரதேச செயலர் எஸ்.சுதர்சனின் ஒருங்கிணைப்பில் சிறப்பு அதிரடிப் படையினரால் கிருமித் தொற்று நீக்கி விசிறும் பணி முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன் முதல் பணியாக நேற்று யாழ். திருக் குடும்பக் கன்னியர்மடம் மற்றும் யா/ புனித பத்திரிசியார் கல்லூரியில் சிறப்பு அதிரடிப் படையினரால் கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்டது. இன்று யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையும், யா / ஜோண். பொஸ்கோ வித்தியாலயமும் தொற்று நீக்கம் செய்யப்படும் என பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (4-5-8)

# ஓகஸ்ட் மாதத்தில் இருந்து விடுதிகளில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு அனுமதி

(கொழும்பு)

நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியில் இருந்து சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஹோட்டல்களில் தங்குவதற்கு அனுமதிக்கப்படவுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தல்களுக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் 5 ஆயிரம் ஹோட்டல்கள் மற்றும் தங்குமிடங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன், நாடு முழுவதும் 20 ஆயிரம் பதிவு செய்யப்படாத சுற்றுலா விடுதிகள் மற்றும் ஹோட்டல்கள் உள்ளன. இதேவேளை, இதுவரை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பதிவு செய்யப்படாத சுற்றுலா விடுதிகள் மற்றும் ஹோட்டல்கள் ஆகியவற்றை பதிவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அத்துடன், ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு அழைத்து வரப்படவுள்ளனர். இவ்வாறு நாட்டுக்கு அழைத்துவரப்படும் சுற்றுலாப் பயணிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். (ஜ-8)

# குருபூசை


(குப்பிழான்)

மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு நாளை 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி யளவில் குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் நடைபெறும். (4-5-18)

# பயனாளிகளிடம் வீடு கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

தியாகி அறக்கொடை நிதியத்தின் உரிமையாளர் தி.வாமதேவனின் 25 இலட்சம் ரூபாய் நிதிப் பங்களிப்பில் இராணுவத்தால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடு கோப்பாய்ப் பகுதியைச் சேர்ந்த பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பம் ஒன்றிற்கு யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி ருவான் வணிகசூரிய நேற்று முன்தினம் கையளித்தார். (4-5-9-10)




# வேலன் சுவாமிகளின் அருளுரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த உற்சவத்தில் நாளை 26 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை நல்லூர் தவத்திரு வேலன் சுவாமிகளின் அருளுரை நடைபெறும்.

அத்துடன் மேற்படி நிகழ்வுகள் யாவும் சமூக இடைவெளியைப் பேணி சுகாதார நடைமுறை களைப் பின்பற்றி நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-5)

# வடமாகாணத்தில் அரச திணைக்களங்களினால் காணிகள் கையடக்கலும் மக்களின் காணிப் பிரச்சினையும் - ஒரு பார்வை



09

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக 5 வகையான பிரதேசங்கள் உள்ளன. அவை கட்டாய இயற்கை ஒதுக்கீடுகள் **(Strict Natural Reserves)** ,தேசிய பூங்காக்கள் **(National Parks)**, இயற்கை ஒதுக்கீடுகள் **(Nature Reserves)** , காட்டு இடைவழிகள் **(Jungle Corridors)** மற்றும்சரணாலயங்கள் **(Sanctuaries)** என்பனவாகும்.

**கேள்வி:-** கட்டாய இயற்கை ஒதுக்கீடுகள் **(Strict Natural Reserves)** என்றால் என்ன?

பதில்- கட்டாய இயற்கை ஒதுக்கீடுகளாவன வனவிலங்குகளைப் பாதுகாப்பதற்கென ஒதுக்கப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளாகும். இவை வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படுவதோடு பொதுமக்கள் பார்வையிட அனுமதி கொடுக்கப்படாதவை ஆகும். இந்த ஒதுக்கீடுகளுக்குள் ஆய்வுகள் நடத்துவதற்கு மட்டும் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியுடன் இப் பிரதேசத்துக்குள் பிரவேசிக்கலாம். இலங்கையில் இவ்வாறான இயற்கை ஒதுக்கீடுகள் மூன்று உள்ளன. அவையாவ்ன ஹக்கல (1142ஹெக்டேயர், 1938இல் பிரகடனப்படுத்தப்பட்டது), ரிட்டிகல (1528ஹெக்டேயர், 1941இல் பிரகடனப் படுத்தப்பட்டது) மற்றும் யால (28,905 ஹெக்டேயர், 1938இல் பிரகடனப்படுத்தப்பட்டது) ஆகும்.

**கேள்வி:-**தேசிய பூங்காக்கள் **(National Parks)** என்றால் என்ன?

**பதில்:-** தேசிய பூங்காக்கள் அனைத்தும் அரசிற்குரிய காணிகளில் அமைந்துள்ளன. வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்திடமிருந்து அனுமதி பெற்றபின்னர் மக்கள் இந்தப் பூங்காக்களுக்குச் சென்று வனவிலங்குகளைப் பார்வையிடலாம். தற்பொழுது பாரிய அளவிலான யால மற்றும் வில்பத்து தேசிய பூங்காக்கள் உள்ளடங்கலாக 26 தேசிய பூங்காக்களை (சுண்டிக்குளம் - மடுறோட், ஆதாம்பாலம் மற்றும் நெடுந்தீவு உட்பட) வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் முகாமைப்படுத்தி வருகின்றது. இதில் வட மாகாணத்தில் உள்ள சுண்டிக்குளம் (19565 ஹெக்டேயர்), மடுறோட் (16367ஹெக்டேயர்), ஆதாம் பாலம் (18990 ஹெக்டேயர்) மற்றும் நெடுந்தீவு (1846 ஹெக்டேயர்) என்பவை 2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டவை.

**கேள்வி:-**இயற்கை ஒதுக்கீடுகள் **(Nature Reserves)** என்றால் என்ன?

**பதில்:-** வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களமானது ஒன்பது இயற்கை ஒதுக்கீடுகளை முகாமைப்படுத்தி வருகின்றது. இவை அரசிற்குரிய காணிகளில் காணப்படுகின்றமையினால் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுமதியின்றி பொது மக்கள் இந்த ஒதுக்கீடுகளைப் பார்வையிடமுடியாது. திரிகோணமடு (25019 ஹெக்டேயர்) 1986-10-24இல் பிரகடனப்படுத்தப்பட்டது. மின்னேரியா-கிரித்தலை (15005 ஹெக்டேயர்) 1993,1995,1997ஆம் ஆண்டுகளில் மூன்று கட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. ஆற்றங்கரை (824 ஹெக்டேயர்) 1997-07-31இல் பிரகடனப்படுத்தப்பட்டது. வெட்டகிரியகந்த (3229 ஹெக்டேயர்) 2002-06-07இல் பிரகடனப்படுத்தப்பட்டது. சிவனொளிபாதமலையைச் சூழவுள்ள காட்டியல்பு மலைச்சிகரம் **(Peak Wilderness)** (12979 ஹெக்டேயர்) 2007-09-21இல் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த ஐந்து இயற்கை ஒதுக்கீடுகளும் வடமாகாணத்திற்கு வெளியே உள்ளவை. வட மாகாணத்தில் உள்ள நாகர்கோவில் இயற்கை ஒதுக்கீடு (7882 ஹெக்டேயர்) மற்றும் விடத்தல்தீவு இயற்கை ஒதுக்கீடு (29180 ஹெக்டேயர்) என்பவை 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டவை. 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி மேலும் இரண்டு இயற்கை ஒதுக்கீடுகளை வட மாகாணத்தில் பிரகடனப்படுத்தியது. அவையாவன நாயாறு இயற்கை ஒதுக்கீடு (4464 ஹெக்டேயர்), நந்திக்கடல் இயற்கை ஒதுக்கீடு (4142 ஹெக்டேயர்).

"வடக்கு மாகாணத்திற்கான ஒருங்கிணைந்த மூலோபாய சுற்றுச்சூழல் மதிப்பீடு" ஆய்வு அறிக்கையின் படி நாகர்கோவில் மற்றும் விடத்தல்தீவு ஆகியவை நாகர்கோவில் சரணாலயம் மற்றும் விடத்தல் தீவு சரணாலயம் என்று சிபாரிசு செய்யப்பட்டிருந்தாலும் அவை நாகர்கோவில் இயற்கை ஒதுக்கீடு மற்றும் விடத்தல்தீவு இயற்கை ஒதுக்கீடு ஆக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. சரணாலயங்கள் தனியார் காணிகளில் காணப்படலாம். ஆனால் இயற்கை ஒதுக்கீடுகள் அரசிற்குரிய காணிகளில் மட்டுமே இருக்கமுடியும். இவ்விரு இயற்கை ஒதுக்கீடுகளும் **(Nature Reserves)** அரசிற்குரிய காணிகளில் மட்டும் காணப்படுகின்றனவா? என்பதை நில அளவைத் திணைக்களமே தீர்மானிக்க வேண்டும்.

மேலும் "வடக்கு மாகாணத்திற்கான ஒருங்கிணைந்த மூலோபாய சுற்றுச்சூழல் மதிப்பீடு" ஆய்வு அறிக்கையில் சிபாரிசு செய்யப்படாத நாயாறு மற்றும் நந்திக்கடல் இயற்கை ஒதுக்கீடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக பத்திரிகையில் வந்த செய்தி ஒன்று கீழே தரப்படுகின்றது. அச்செய்தியில் குறிப்பிட்டவாறு ஏதும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா? என்பது எனக்குத் தெரியவில்லை.

"நாயாறு களப்பு மற்றும் நந்திக்கடல் களப்பு பகுதியில் வர்த்தமானி அறிவித்தலின்படி காணிகள் வனஜீவராசிகள் திணைக்களத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டதனால் பாதிப்படைந்த பொதுமக்கள் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கு வழங்கிய முறைப்பாட்டினை தொடர்ந்து ஆளுநர் இது தொடர்பில் ஆராயும் கூட்டம் 03 ஒக்டோபர் 2019 அன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

2017ஆம் ஆண்டு வனஜீவராசிகள் திணைக்களத்தினர் நாயாறு மற்றும் நந்திக்கடல் பகுதியினை வர்த்தமானி அறிவித்தல் மூலம் தமது கட்டுப்பாட்டுக்கள் கொண்டுவந்தனர். ஆனாலும் அப்பிரதேசத்தினுள் மக்களினுடைய தனியார் காணிகளும் வயற்காணிகளும் இருந்தமையினால் தற்பொழுது வனஜீவராசிகள் திணைக்களத்திற்கும் அப்பகுதி மக்களுக்குமிடையில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. எனவே இது தொடர்பில் இக்கூட்டத்தில் ஆராய்ப்பட்டது.

இது தொடர்பில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் வனஜீவராசிகள் திணைக்களத்தினுள் கொண்டு வரப்பட்ட மக்களின் காணிகளின் அளவினை இனங்கண்டு அவற்றினை மீளவும் வர்த்தமானி அறிவித்தலின்படி பொதுமக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.

மேலும், இவ் இரண்டு களப்பு பகுதிகளிலும் மீன்பிடி தொழிலில் ஈடுபடுவதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் தடைவிதித்து வருவதாகவும் பொதுமக்கள் முறைப்பாடு தெரிவித்திருந்தமை தொடர்பிலும் இக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

அப்பகுதி மக்கள் காலா காலமாக செய்துவந்த பாரம்பரிய மீன்பிடி முறையை செய்யமுடியும் என்றும் இந்த இரு களப்பு பகுதிகளையும் சுத்தம் செய்ய 2018 இல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் இதுவரை எதுவித முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வில்லை என்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் ஆளுநர் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

இதனைத்தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழகத்தின் மீன்பிடியியல் துறையினை தொடர்புகொண்டு களப்பு பகுதி மீன்பிடி தொடர்பில் ஆய்வு செய்து உடனடியாக வனவிலங்கு திணைக்களத்திற்கு சமர்ப்பித்து நந்திக்கடல் பகுதியில் துப்புரவுப்பணியை மேற்கொள்ளுமாறும் அதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

வன ஜீவராசிகள் திணைக்கத்தினால் பொது மக்களின் காணிகள்,விவசாய நிலங்கள் என்பன இதற்குள் அடங்குவதால் அவற்றை மீள் வர்த்தமானி மூலம் ஜனாதிபதியின் உதவியுடன் மக்களிடம் மீண்டும் கையளிக்க நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் இதன்போது மக்களுக்கு நம்பிக்கை தெரிவித்தார்." ஆளுநர் ஆலோசனைகள் வழங்கி 7 மாதங்கள் கடந்து விட்டன. அவ் ஆலோசனைகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டதாக எந்தவொரு தகவலும் இல்லை.

**கேள்வி:-** காட்டு இடைவழிகள் **(Jungle Corridors)** என்றால் என்ன?

பதில்- பிரதான பாதுகாப்பு பகுதிகளைத் தொடுக்கும் ஒடுங்கிய இயற்கையான பகுதிகள் காட்டு இடைவழிகள் ஆகும். வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் பாரிய காட்டுப் பகுதிகளை ஒன்றுடன் ஒன்றைத் தொடுப்பதற்காக பல காட்டு இடை வழிகளை நிறுவுகின்றது. இவ்விடைவழிகள் இக்காட்டுப் பகுதிகளிடையே வனவிலங்குகளை குறிப்பாக பரந்த பகுதிகளுக்குச் சென்று வரும் யானைபோன்ற விலங்குகளின் நகர்வுகளிற்கு துணை நிற்கின்றன. இவ்விடை வழிகள் விலங்குகள் தங்களுடைய வாழ்விடங்களுக்கிடையே இடம்பெயரும்போது மானிடர்கள் வாழும் பகுதிகளைத் தவிர்த்து மனித-விலங்கு மோதல்களைக் குறைக்கும் நோக்கத்தோடு அமைக்கப்பட்டவையாகும்.

இவ்வாறு யானைகள் இடம்மாறுவதற்குரிய நடைபாதைகள் பல காணப்பட்டாலும் ஒரு நடைபாதை மட்டுமே பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அது கவுடுள்ள-மின்னேரியாகாட்டு இடைவழி (8777 ஹெக்டேயர்) இது 2004ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டது. வட மாகாணத்தை பொறுத்தவரையில் "வடக்கு மாகாணத்திற்கான ஒருங்கிணைந்த மூலோபாய சுற்றுச்சூழல் மதிப்பீடு" ஆய்வு அறிக்கையின்படி பின்வரும் காட்டு இடைவழிகள் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன.

1. யானை இடம்பெயர்வு, பல்லுயிர் பாதுகாப்பு போன்றவற்றிற்காக வில்பத்து தேசிய பூங்கா மற்றும் மடு றோட் சரணாலயம் ஆகியவற்றுக்கு இடையே நடைபாதை.
2. யானை இடம்பெயர்வு, பல்லுயிர் பாதுகாப்பு போன்றவற்றிற்காக மடு றோட் மற்றும் கட்டுக்கரைக்குளம் சரணாலயங்களை நீந்தவில் வன ஒதுக்கீட்டுடன் இணைக்கும் நடைபாதை
3. யானை இடம்பெயர்வு, பல்லுயிர் பாதுகாப்பு போன்றவற்றிற்காக நாகபடுவான், நீந்தவில் மற்றும் அக்கராயன் ஆகிய வன ஒதுக்கீடுகளை ஒன்றுடன் ஒன்று இணைப்பதற்கான நடைபாதை.
4. யானை இடம்பெயர்வு, பல்லுயிர் பாதுகாப்பு போன்றவற்றிற்காக நைனாமடு வன ஒதுக்கீடு **(Nainamadu F.R)** மற்றும் சமலன்குளம் **(Chamalankulum F.R)** இடையே நடைபாதை.
5. யானை இடம்பெயர்வு, பல்லுயிர் பாதுகாப்பு போன்றவற்றிற்காக ஆண்டான்குளம் மற்றும் நைனாமடு வன ஒதுக்கீடுகளை பதவியாக் குளம் சரணாலயத்துடன் இணைப்பதற்கான நடைபாதை.

**(தொடரும்...)**

# பாரதம்

## ஊட்டி மரக்கறி சந்தையில்

# எரிவாயு சிலிண்டர் வெடித்து தீ பரவல்

# 80 கடைகள் எரிந்து நாசம்

(ஊட்டி)

**எரிவாயு சிலிண்டர் வெடித்ததால் ஊட்டி நகராட்சி சந்தையில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதில் 81 கடைகள் எரிந்து நாசமானது.**

நீலகிரி மாவட்டம் ஊட்டி நகராட்சி சந்தையில் 1,300 இற்கும் மேற்பட்ட கடைகள் இருந்தன. அருகே சிறிய ஹோட்டல்கள் செயற்பட்டு வருகின்றன.

ஊரடங்கு கட்டுப்பாடுகளில் தளர்வு செய்யப்பட்டதால், சுழற்சி முறையில் கடைகள் செயற்பட்டு வந்தன. இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு 2 மணியளவில், அங்குள்ள ஒரு ஹோட்டலில் பயங்கர சத்தம் கேட்டது. தொடர்ந்து கடையில் தீப்பிடித்து எரிந்தது. நேரம் செல்ல செல்ல தீ மளமளவென கொழுந்துவிட்டு எரிந்தது.

# இந்தியாவில் கொரோனா இயல்பானது தான்

## உலக சுகாதார ஸ்தாபனம்

(ஜெனிவா)

இந்தியாவில் கொரோனா தொற்று அதிகரிப்பது ஒரு சோதனை நிகழ்வு அல்ல என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கின்றது. கொரோனா வைரஸ் தொற்று இந்தியாவில் பெருகிக்கொண்டே போகிறது.


அதிலும் கடந்த சில நாட்களாக 14 ஆயிரம், 15 ஆயிரம் என்கிற அளவுக்கு தினமும் தொற்று அதிகளவில் பரவி வருகிறது. நேற்று மாலை நிலவரப்படி இந்தியாவில் கொரோனாப் பாதிப்புக்கு ஆளானோர் எண்ணிக்கை 4 இலட்சத்து 57 ஆயிரத்தை கடந்துள்ளது. பலியானோர் எண் ணிக்கையும் 14 ஆயிரத்தை தாண்டியுள்ளது. இந்தியாவுக்கு சோதனையான காலமாக இது பார்க்கப்படுகிறது. ஆனால் இது இயல்பான ஒன்று தான் என்பதாக உலக சுகாதார நிறுவனம் கருதுகிறது.

இதையொட்டி நேற்று முன்தினம், சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனிவாவில் உலக சுகாதார நிறுவனத்தின் அவசர கால திட்ட இயக்குநர் டாக்டர் மைக்கேல் ரேயான் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது.

இந்தியா உள்ளிட்ட பல நாடுகளும் இப்போது கொரோனா பரிசோதனைகளை அதிகரித்து இருக்கின்றன. ஆனால், கொரோனாத் தொற்று பாதிப்பு எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போவதை ஒரு சோதனையான நிகழ்வாக கருத வேண்டாம். கொரோனா தொற்று பாதிப்பு எண்ணிக்கை உயர்ந்துகொண்டே போகிறது.

ஏனென்றால், ஏராள மான மக்கள் தொகையைக் கொண்ட நாடுகளில் தொற்று நோய் பரவல் அதிகரிப்பது இயல்பானது தான். (2)

# மெக்சிக்கோவில்



(மெக்சிக்கோ சிட்டி)

மெக்சிக்கோவின் தெற்குப் பகுதியில் அதிசக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

மெக்சிக்கோவின் ஓக்சாகா நகரில் ஏற்பட்ட அதிசக்திவாய்ந்த நிலநடுக்கம் 7.4 ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்

## அரசன் எவ்வழியோ மக்களும் அவ்வழியே

# முகக்கவசம் அணியுங்கள்; தவறின் அபராதம் செலுத்துங்கள்

## பிரேசில் ஜனாதிபதிக்கு நீதிமன்றம் உத்தரவு

(றியோடி ஜெனிரோ)

பிரேசில் ஜனாதிபதி பொது இடங்களுக்கு செல்லும் போது முகக்கவசம் அணிய வேண்டும் எனவும் மீறினால் 30 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என அந்நாட்டு நீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.



உலக அளவில் கொரோனா வைரஸால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகள் பட்டியலில் பிரேசில் இரண்டாவது இடத்தில் உள்ளது. அந்நாட்டில் இதுவரை 11 இலட்சம் பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், அங்கு வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 52 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா தீவிரமடைந்து வந்தாலும் அந்நாட்டு ஜனாதிபதி ஜெய்ர் போல்சோனரோ வைரஸைக் கட்டுப்படுத்துவதில் மிகுந்த மெத்தனப்போக்கை கடைப்பிடித்து வருகிறார். கொரோனாப் பரவத்தொடங்கியபோது இது ஒரு சிறிய காய்ச்சல் தான் என அவர் சர்ச்சைக்குரிய வகையில் கருத்துத் தெரிவித்தார்.

இதற்கிடையில், கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பிரேசிலில் வீடுகளை விட்டு வெளியே செல்லும் போது மக்கள் முகக்கவசம் அணிய வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஆனால், ஜனாதிபதி போல்சோனரோ பொதுநிகழ்ச்சிகளில் பங்கேற்கும் போது முகக்கவசம் அணியாமல் விதிமுறைகளை மீறி செயற்பட்டு வந்தார்.

ஜனாதிபதி முகக்கவசம் அணியாமல் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பது அவரது ஆதரவாளர்களுக்கும் நாட்டு மக்களுக்கும் தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தும். ஜனாதிபதியைப் பின்பற்றிபலரும்கொரோனா அச்சுறுத்தலைக் கருத்தில் கொள்ளாமல் முகக் கவசம் அணிவதை தவிர்க்கலாம். ஆகையால் ஜனாதிபதி முகக்கவசம் அணிய உத்தரவிடக்கோரி அந்நாட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி கொரோனா அச்சுறுத்தல் காரணமாக வீடுகளை விட்டு வெளியே வரும் மக்கள் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும் என்ற உத்தரவு நாடு முழுவதும் அமுலிலுள்ளது.

ஆகையால், இந்த உத்தரவை பின்பற்றி ஜனாதிபதி போல்சோனரோ தனது வீட்டை விட்டு வெளியேறி நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் போது கட்டாயம் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும்.

முகக்கவசம் அணியாமல் போல்சோனரோ விதிமுறைகளை மீறும் பட்சத்தில் 2 ஆயிரம் ரியால்ஸ் அபராதம் செலுத்த வேண்டும் என நீதிபதி அதிரடி தீர்ப்பு வழங்கினார். (2)

# ஒரே பிரசவ
# பிறந்த சி

(மெக்சிக்கோ சிட்டி)

ஒரே பிரசவத்தில் பிறந்த 3 குழந்தைகளுக்கும் கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதுவரை உலகில் எங்கும் இப்படி நடந்ததாக தகவல் இல்லை என்று மெக்சிக்கோ சுகாதார அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். புத்தம் புதிதாய் இந்த மண்ணில் வந்து பிறக்கிற ஒவ்வொரு குழந்தையும் ஆச்சரியம், நம்பிக்கை, கனவு என எல்லாவற்றின் தொடக்கமுமாக அமையும்.

அப்படி ஒரு குழந்தை இந்த மண்ணில் வந்து உதித்த சில மணித்துளிகளில் உயிர்க்கொல்லி வைரஸான கொரோனா பாதிப்புக்கு ஆளானால்? மனது கனத்துப் போகிறது. கொலைகார வைரஸ் என்று

# க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்- தமிழ்மொழியும் இலக்கியமும்
# மத்திய மாகாணம்- மாத்தளை வலயக் கல்வி அலுவலகம்

நேரம்: ஒரு மணித்தியாலம் வினாப்பத்திரம் - 01

**தடித்த எழுத்தில்** அமைந்த சொல் பற்றிய வினாவுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. "சூழ **மேதி** இறங்கும் துறையில்"- இங்கு **மேதி** என்பது
   1.யானை 2. அன்னம்
   3.எருமை 4.மான்

2. "**கோது** இலான் இந்த மொழி கூறுதல்" -இங்கு **கோது** என்பது
   1.செல்வம் 2.பாதுகாப்பு
   3.அறிவு 4.குற்றம்

3. "ஏதிலார் ஆரத் **தமர்** பசிப்பர்"- இங்கு **தமர்** என்பதன் எதிர்க்கருத்து
   1.உறவினர் 2.பிறர்
   3.பகைவர் 4.உற்றார்

4. " **சண்டமாருதம்** அடித்து ஓய்ந்தது"- **சண்டமாருதம்** என்பதன் எதிர்க்கருத்து
   1.மந்தமாருதம் 2.அமைதி
   3.சூறாவளி 4.கடும்புயல்

5. " பெண்களுக்கு **தம்பதியே** பெருந் தெய்வம் என்பர் சிலர்"- இங்கு **தம்பதி** என்பது
   1.கணவன்- மனைவி 2.தம்முடைய கணவன்
   3.தம்முடைய ஊர் 4. தாம்பத்திய வாழ்க்கை

● **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

6. பின்வருவனவற்றுள் **பொருத்தமற்ற** சொற்களின் இணைவு
   1.நெல்- அரிசி 2.கற்றாழை- சோறு
   3.அவரை- பருப்பு 4.தோடை- சதை

7. " பக்குள் பறந்ததாகச் சிலமன் இல்லை"
" அந்தக் கோப்பு இருந்த சிலமன் கூட இல்லை"- இக்கூற்றுக்களில் இடம்பெறும் **சிலமன்** என்னும் பேச்சு வழக்குச் சொல் உணர்த்தும் பொருள்
   1.காட்சி 2.கேள்வி
   3.சாட்சி 4.அறிகுறி

8. **ஆபரணம், பாத்திரம், கப்பல்** என்னும் பொருள்களை தரும் சொல்
   1.அணி 2.ஆளி
   3.கலம் 4.ஏனம்

9. " உலக சந்தையில் இலங்கைத் தேயிலைக்கு நல்ல டிமாண்ட் **(Demand)** இருக்கிறது"- டிமாண்ட என்பதற்கு நிகராகத் தமிழில் வழங்கும் கலைச்சொல்
   1.பெறுமதி 2.கேள்வி
   3.மதிப்பு 4.தேவை

10. ஒருவன் அறிவுக்கூர்மையை சுட்டுவதற்கு கையாளப்படும் அரும் சொற்தொடர்
   1.ஒல்காப் பெரும்புகழ் 2.கருவிலே திருவுடையோன்
   3.நுண்மாண் நுழைபுலம் 4. சொல்லின் செல்வர்

11. நீண்ட காலம் வாழ்பவன்
   1.சஞ்சீவி 2.சிரஞ்சீவி
   3.அமரன் 4.அசகாயன்

12. ஆண் இனத்தை, கடுவன் என்ற சொல்லால் குறிக்கும் வழக்கமற்ற விலங்கு
   1.நாய் 2.குரங்கு
   3.குதிரை 4.பூனை

13. " இது சமநிலைக் கொள்கைக்கு ஓர் உரைகல்லாக விளங்குகிறது" - **உரைகல்** என்ற மரபுத் தொடர் உணர்த்தும் பொருள்
   1.சான்று 2.உறுதி
   3.காட்சி 4.தெளிவு

14. நடக்கவிருக்கும் நாடகம், வரவேற்பு வைபவம் முதலான வற்றை, ஒழுங்கானவற்றை ஒழுங்காக நடத்தும் நோக்கில் முன்கூட்டியே நிகழ்த்தி பார்க்கும் செயற்பாடு
   1.அரங்கேற்றம் 2.வெள்ளோட்டம்
   3. பரீட்சார்த்தம் 4.ஒத்திகை

15. ஒருசெயலை செய்வதற்குறிய அடிப்படை தகுதி இல்லாதவரால் அச் செயலைச் சிறிதேனும் செய்ய இயலாது என்பதைக் குறிக்கும் பழமொழி
   1.அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது
   2.அச்சம் இல்லாதவன் அம்பலம் ஏறுவான்
   3.ஆடத் தெரியாதவனுக்கு மேடை கோணல்
   4.கனவில் கண்ட பணம் செலவுக்கு உதவுமா?

16. "**அன்னமிட்டவர் வீட்டில் கன்னமிடாதே**" என்ற பழமொழி மூலம் வலியுறுத்தப்படுவது
   1.நன்றியுணர்வு 2.துரோகத்தனம்
   3.நிதானம் 4.நேர்மை

17. "அது இப்படி காலை வாரியும் எனக்குப்புத்தி வரவில்லை" **காலைவாருதல்** என்ற மரபுத்தொடர் உணர்த்தும் பொருள்
   1.கால் இடறல் 2. ஏமாற்றுதல்
   3.காலூன்றல் 4.எதிர்த்து நிற்றல்

18. பின்வருவனவற்றுள் இணைமொழி
   1.ஆடியாடி 2.கன்னங்கரிய
   3.ஓடியாடி 4.நெறுநெறு

19. (அ) அவர் நன்றாக படித்தவர்தான்

(ஆ) மேடையில் ஏறி பேசுவதென்றால் அவருக்கு நடுக்கம்

மேற்படி வாக்கியங்களை இதே ஒழுங்கில் இணைப்பதற்கு மிகப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்
   1.ஆகவே 2. என்றாலும்
   3.ஆதலால் 4.ஏனெனில்

20. பின்வருவனவற்றுள் பெயரடியாகப் பிறந்த **வினைச்சொல**
   1.சித்திரித்தான் 2.பெற்றான்
   3.காட்டினான் 4.வாழ்க

● பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **மிகச் சரியான** விடையை தெரிவு செய்க.

21.ககரம் "g" என்ற ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிக்கும் சொல்
1.கப்பல் 2.தேகம்
3.தங்கம் 4.சுகம்

22.இடைநிலை அமையப்பெற்ற பெயர்பகுபதம்
1.ஓடுதல் 2.மரங்கள்
3.கூத்தன் 4.அறிஞன்

23.பின்வருவனவற்றுள் வினையடை
1.நடந்து 2.நேற்று
3.அழகான 4.வேகமான

24.பின்வருவனவற்றுள் வேற்றுமை தொகையாய் அமைந்த தொடர்
1.குடும்பச்சொத்து 2.தேடியசொத்து
3.பொதுச்சொத்து 4.அழியாச்சொத்து

25.பின்வருவனவற்றுள் இயல்பு புணர்ச்சி இடம்பெற்ற சொல்
1.மணியோசை 2. கடலலை
3. பூங்கொடி 4.மரவேர்

26. "செத்த மாட்டில் உண்ணி கழன்றது போல"-இத்தொடரில் இடம்பெற்ற **வேற்றுமைப் பொருள**
1.இடம் 2.ஒப்பு
3.நீங்கல் 4.ஏது

27. "சாலச்சிறந்தது"-இங்கு **சால** எனும் உரிச்சொல் உணர்த்தும் பொருள்
1 .பொருத்தம் 2. உறுதி
3. கூர்மை 4.மிகுதி

28. "கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு"-இங்கு **கற்றோர** என்பது
1.தொழிற்பெயர் 2. காரணப்பெயர்
3.வினையாலணையும் பெயர் 4.ஆக்கப்பெயர்

● **பொருத்தமற்ற** உதாரணம் இடம்பெற்றுள்ள சொற் தொகுதியை தெரிவு செய்க

29. 1.அஃறிணை:-மரம்,செடி,குருவி
2.ஆண்பால்-வந்தான்,படித்தவன்,நோயாளி
3.பெண்பால்-மங்கை,தங்கை,வந்தாள்
4.பலர்பால்-ஆசிரியர்கள்,மாணவர்கள்,பெற்றோர்

30. 1.உவமைத்தொகை - பால்நிலா,மதிமுகம்,கயல்விழி
2.உம்மைத்தொகை-வீடுவாசல்,கோயில்குளம்,சோறுகறி
3.பண்புத்தொகை-வெண்சங்கு,நேர்கோடு,வட்டநிலவு
4.வினைத்தொகை-ஏவுகணை,சுடுசோறு,கடுகதி

● புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு **மிகப் பொருத்தமான** விடையை தெரிவு செய்க

31.வீதி அபிவிருத்தித் திட்டத்தால் தம் காணிகளை இழந்தவர்களுக்கு தக்க............வழங்கப்படும் என அரசாங்கம் உறுதியளித்துள்ளது.
1.உதவி 2.இழப்பீடு
3.காப்பீடு 4.அனுசரணை

32.நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பது தொடர்பான அறிவித்தல் அரச ..............வெளியிடப்பட்டுள்ளது.
1.சுற்றறிக்கையில் 2.சட்டமூலத்தில்
3.வர்த்தமானியில் 4.விளம்பரத்தில்

33. ஜனாதிபதித் தேர்தலுக்குரிய ..............தாக்கல் செய்வதற்கான முடிவுத்திகதி அறிவிக்கப்பட்டுள்ளது
1.பதிவு 2.விண்ணப்பம்
3.வேட்புமனு 4.விஞ்ஞாபனம்

34.எமது பாடசாலை தாபிக்கப்பெற்று 50 ஆண்டு நிறைவடைந்தமையை கொண்டாடுமுகமாக.............. இடம்பெறவுள்ளது
1. வைரவிழா 2.மணிவிழா
3.வெள்ளிவிழா 4.பொன்விழா

35.தேசிய...................காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள தொல் பொருள்கள் எமது நாட்டின் வரலாற்றை உணர்த்தி நிற்கின்றன.
1.கலாபவனத்தில் 2.நூதனசாலையில்
3.சுவடிகள் காப்பகத்தில் 4.காட்சிக்கூடத்தில்

36.ஆணைக்குழுவின் .................. உயர்கல்வி விருத்திக்கு பெரிதும் உதவும்
1.நிபந்தனைகள் 2.கோரிக்கைகள்
3.பரிந்துரைகள் 4.பிரேரணைகள்

● கீழே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாக கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

கிளையினிற் பாம்பு தொங்க
விழுது என்று குரங்கு தொட்டு,
விளக்கினை தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்தத்தைப் போல்
கிளைதோறும் குதித்துத் தாவி,
கீழ் உள்ள விழுதை எல்லாம்
ஒலிப் பாம்பாய் எண்ணி எண்ணி,
உச்சிபோய்த் தன் வால் பார்க்கும்

37.இக்கவிதை மூலம் கவிஞர் வாசகரிடம் ஏற்படுத்த முயலும் உணர்ச்சி
1.அச்சம் 2.ஏமாற்றம்
3.நகைச்சுவை 4.திகைப்பு

38. "விளக்கினைத் தொட்ட பிள்ளை வெடுக்கென குதித்ததை போல்" என்னும் உவமை கையாளப்பட்டதன் நோக்கம்:
1. விழுதின் தோற்றத்தை உணர்த்துதல்
2.குரங்கின் பதற்றத்தை உணர்த்துதல்
3.குரங்கின் இயல்பை உணர்த்துதல்
4.பாம்பின் பயங்கரத்தை உணர்த்துதல்

39. இப்பாடல் வரிக்கு காட்சியோடு மிகப்பொருந்தி வரும் **பழமொழி**
1.கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே
2.தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தான் தெரியும்
3.மழைக்கால இருட்டு என்றாலும் மந்தி கொப்பிழக்கப்பாயாது
4.மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்

40.கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றி காணப்படுகின்றன அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையை தெரிவு செய்க.
அ. அவ்வகையாகத் தமிழிலே தோன்றி முதலாவது காவியம் சிலப்பதிகாரமாகும்.
ஆ.காவியம் என்பது ஒரு பேரிலக்கிய வடிவமாகும்.
இ.அது இளங்கோவடிகளால் பாடப்பட்டது.
ஈ.அது ஒரு கதையினை தொடர்ச்சியாக அமையும் பல செய்யுள்களால் எடுத்துரைப்பு
உ. அவரைப்போலவே சாத்தனார் மணிமேகலை என்ற காவியத்தை படைத்தார்.
1.உ,அ,ஈ,இ,ஆ 2.இ,அ,ஆ,ஈ,உ
3.ஆ,ஈ,அ,இ,உ 4.ஆ,இ,உ,ஈ,அ

# க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்- தமிழ்மொழியும் இலக்கியமும்

# மத்திய மாகாணம்- மாத்தளை வலயக் கல்வி அலுவலகம்

நேரம்: 2 மணித்தியாலம் வினாப்பத்திரம் - 02

**1.சுருக்கமான விடை எழுதுக**

i. " உயர் குறிக்கோள், ஒருவர் உண்ணும் உணவினும் பருகும் நீரினும் அவருக்கு இனியது" இந்த வாக்கியத்தின் எழுவாய் யாது?

ii. பின்வரும் வாக்கியத்துக்குப் பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டு அதனை மீண்டும் எழுதுக.

iii. " இளங்கோ அடிகள், தமிழர் தழுவிய பழக்கவழக்கங்களையும் வழிபாட்டு முறைகளையும் கூறியுள்ளார்" மேற்படி செய்வினை வாக்கியத்தை செயற்பாட்டுவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

iv. "சினிமாவுக்கு கடும் உழைப்பும் பயிற்சியும் அவசியமற்றவை" மேற்படி எதிர்மறை வாக்கியத்தை உடன்பாட்டு வாக்கியமாக்குக.

v.கம்பன் இராம கதையைக் காவியமாகப் பாடினான் அதனால் கவிச்சக்கரவர்த்தி என்ற புகழைப்பெற்றான் இவ்விரு வாக்கியங்களில் கூறப்பட்ட விடயங்களை ஒரே வாக்கியத்தில் அடக்கி எழுதுக.

vi. " படிக்காத அந்தப் பையன் பரிதாபமாக நின்றான்" - இவ்வாக்கியத்தில் காணப்படும் பெயரெச்சம் யாது?

vii. பின்வரும் சொற்றொடரைச் சந்தி பிரித்து எழுதுக. கூனலிளம்பிறை

viii. "நாம் பல்லாற் கடித்த தடயங்கள்கூட இருக்கின்றன"- இங்கு இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபு யாது?

ix. பின்வரும் வாக்கியத்திற் காணப்பெறும் திசைச்சொல் யாது? "நல்ல சினிமாவுக்கு சில அடிப்படை அளவுகோல்கள் உண்டு"

x. "தங்கச்சி விரல் சூப்பிக்கொண்டு அங்குமிங்கும் ஓடித்திரிந்தது"- பேச்சு வழக்கில் உள்ள இந்த வாக்கியத்தை எழுத்து வழக்கில் திருத்தி எழுதுக.

2. பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக.

நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

i. 'உலகின் நுரையீரல்' எனப்படும் அமேசன் காடு அண்மைக் காலத்தில் பல தினங்களாகத் தொடர்ந்து எரிந்தது. அதனால் மரங்கள் ஏராளமாக அழிந்தன. வனவிலங்குகள் மடிந்தன; சுற்றுச்சூழல் மாசடைந்து. மனிதனால் ஏற்படுத்தப்பட்ட இப்பாதிப்புகள் வனவளத்தைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை நமக்கு வன்மையாக உணர்த்தியுள்ளன. அவ்வகையில், வனவளம் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம், பாதுகாக்கப்படாவிட்டால் ஏற்படும் தீமைகள் முதலானவற்றை விபரிக்கும் ஒரு **விளக்கக் கட்டுரை.**

ii. அண்மையில் நீர் கலந்து கொண்ட கல்விச் சுற்றுலாவின் போது தரிசித்த இடங்கள், கவின்மிகு காட்சிகள், சந்தித்த சமூகத்தவர்கள், அவர்களோடு பேசிப் பழகிப் பெற்ற அனுபவங்கள் முதலானவை உமது கல்விக்கும் பொது அறிவுக்கும் உதவுவனவாக அமைந்தன. அவற்றையெல்லாம் எடுத்துரைப்பதான ஒரு **விவரணக் கட்டுரை.**

iii. சிறந்த ஆளுமை உடையவர்களாலேயே வாழ்க்கையில் உயர் நிலை அடைய முடியும். ஆளுமை என்பது பன்முகப்பட்ட ஆற்றல்களின் தொகுதியாகும். ஆதலால் ஒருவன் ஆளுமை உடையவனாய் இருப்பது அவன் பெற்ற கல்வித் தகைமைகளால் மாத்திரம் சாத்தியப்படாது. பாடவிதானத்திற்கு அப்பால் கலை, இலக்கியம், விளையாட்டு முதலான துறைகளிலும் பரிச்சயம் உடையவனாய் இருத்தல் வேண்டும். அதை உணராது ஏனைய விடயங்களில் ஈடுபடுவது படிப்பைப் பாழாக்கிவிடும் என்ற கொள்கை உடைய மாணவன் ஒருவனுக்கு அவ்வாறின்றி கல்வியிற் போலவே இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் ஈடுபடுவதே உயர்வுக்கு வழிவகுக்கும் என்ற கொள்கை உடைய மாணவன் ஒருவனுக்கும் இடையிலான ஓர் **உரையாடல்.**

iv. முயற்சி உடையவர்கள் ஒருபோதும் தாழ்ச்சி அடைய மாட்டார்கள். ' முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்பது பழமொழி. விடாமுயற்சியால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை. 'அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்' என்ற பழமொழியும் அதைத்தான் வலியுறுத்துகிறது. அடிமட்டத்திலிருந்து தம் முயற்சியால் முன்னேறியவர்களின் அனுபவ மொழிகள் இவை. அவ்வாறாக தன் முயற்சியால் வாழ்வின் உச்சத்தைத் தொட்ட ஒருவரின் வாழ்க்கையை வெளிப்படுத்தும் ஒரு **சிறுகதை.**

3.பின்வரும் உரைப்பகுதியின் **சுருக்கத்தை** 40-45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)

இன்றைய காலகட்டத்தில் தொடர்பாடல் என்பது மிகப் பிரபல்யமானதும் அவசியமானதுமான ஒரு செயற்பாடாகிவிட்டது. இன்று முழு உலகமே ஒரு கிராமம் என்ற வகையில் சுருங்கி விட்டமைக்கும் நெருங்கி விட்டமைக்கும் இத்தொடர்பாடல் விருத்தியே அடிப்படைக் காரணமாகிவிட்டது எனலாம்.

பழைமைமிக்க தொடர்பாடல் முறையான கடிதம் முதல் தொலைபேசி, தொலைநகல் (பக்ஸ்) தொலைப்பதிவு (டெலக்ஸ்), மின்னஞ்சல் (ஈ மெயில்) போன்ற பல்வேறு ஊடகங்களும் அகில உலகத்தையுமே ஆட்டிப்படைக்கின்றன. மேற்கூறப்பட்ட பல்வேறு வகையான சாதனங்கள் தோற்றம் பெற்றுவிட்ட போதும் மனிதப் பண்பும் நேயமும் மிக்க நேரடித் தொடர்பானது எல்லாவற்றிற்கும் மேலானது என்று கூறலாம். உயர்ந்த அறிவும் ஆற்றலும் விஞ்ஞானத்தில் வியத்தகு சாதனைப் போக்கும் மிக்க மனிதன் தனது நாளாந்தத் தொடர்பாடலை பண்புடனும் சிறப்புடனும் மேற்கொண்டு ஊடாடும், உறவாடும் தன்மைகளைத் தன்னுள் வளர்த்துக் கொள்ளல் மிக அவசியமாகும்.

எமது நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு சந்தர்ப்பங்களின் போதும், தேவைகளின் போதும் நாம் பல்வேறு வகைப்பட்டவர்களுடன் தொடர்புகொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அத்தகைய தொடர்பாடலானது பல்வேறு மட்டங்களில் இடம்பெறக் கூடும். வயதில் கூடியோருடனோ குறைந்தோருடனோ சமவயது உடையவருடனோ இருக்கலாம்; நம்மைவிட அறிவிலும், ஆற்றலிலும், கல்வியிலும், செல்வத்திலும் சிறப்புப் பெற்றவர்களுடனும் இருக்கலாம். நமது நாட்டவர்களுடன் மட்டுமன்றி வேறு நாட்டவர்களுடனும் இருக்கலாம். இவ்வாறு பல்வேறு வகைப்பட்டவர்களுடனும் நாம் தொடர்பாடல் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களை நிகழ்காலத்தில் மட்டுமன்றி, வருங்காலத்திலும் ஏற்படலாம். இதற்கு இசைவாக நாம் தொடர்பாடலைத் திறன்பட மேற்கொள்ளும் ஆற்றல், பண்பு என்பவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

4.பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

பழந்தமிழ் இலக்கியச் சிறப்பியல்புகளுள் நம் கருத்தைக் கவரும் சிறந்த பண்பு ' ஒன்றே உலகம்' எனும் உயரிய மனப்பான்மையாம். வெண்டல் வில்கி என்ற அமெரிக்க அறிஞர் எழுதி வெளியிட்ட ' ஒரே உலகம்' (One World) என்னும் நூலை மக்கள் இனிதாக வரவேற்றனர். இந்நூற் கருத்தானது உலகம் தழுவியதாக இருந்ததால் இருபதாம் நூற்றாண்டில் ஏனையோர்க்குப் பெருமகிழ்வு அளித்தது. இதுபற்றி தமிழராகிய நாம் சிறுபுன்முறுவல் அரும்பி நிற்கிறோம். ஏன்? இருபது நூற்றாண்டுகட்கு முன்னமே தமிழறிஞர் இதனை இனிது உணர்ந்திருந்தனர். இதற்கு 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் பாடல் இடம்பெறும் புறநானூறு தக்க சான்றாகும். இவ்வுயர் பண்பு தமிழர்க்கு எங்ஙனம் அமைந்தது? பிறநாட்டினருடனான வணிகத்தின் பயனாகவும், மூவேந்தருடன் பிறநாட்டு மன்னர்க்கு உண்டான தொடர்பின் பயனாகவும் பழந்தமிழர்க்கு இப்பரந்த மனப்பான்மை வாய்த்ததெனலாம்.

மேலே எடுத்துக்காட்டிய ஒருலக மனப்பான்மையும், அதற்கு அடிப் படையான பரந்த நோக்கமும் மற்றொரு சிறந்த பண்புக்குக் காரண மாயின. இது கண்ணோட்டம் எனப்படும். இதனைப் பொறை எனலும் பொருந்தும். தமிழ்மொழி வரலாறு, நம் மக்களின் ஒப்பற்ற சமயப் பொறைக்குச் சான்றாக அமைந்துள்ளது. இலத்தீன் மொழி மேல்நாட்டுச் சமயங்களின் மொழி. சமஸ்கிருதம் இந்தியச் சமயங்களின் மொழி. ஆனால் பல சமயத்தவர்களும் உரிமை பாராட்டும் சிறப்பு தமிழ்மொழிக்கே உண்டு.

i. 'ஒன்றே உலகம்' எனும் மனப்பான்மையைத் தமிழர் பழங் காலத்திலேயே பெற்றிருந்தமைக்கு ஆதாரமாக அமைந்த நூல் யாது?
ii. இம்மனப்பான்மையை, பழந்தமிழர் பெற்றுக்கொண்டமைக் கான காரணங்களாகக் கட்டுரையாசிரியர் எவற்றைக் கருதுகிறார்?
iii. பொறை எனும் பண்புக்கு அடிப்படைகளாக அமைந்தவை எவை?
iv. பிறமொழிகளோடு ஒப்பிட்டு, தமிழ்மொழியின் எச்சிறப்பை ஆசிரியர் பாராட்டுகின்றார்?
v. தமிழரிடம் சிறுநகை தோன்றுவதற்கான காரணம் யாது?

5. பொன்னகரம் பிரதேசத்தில் அமைந்துள்ள விளையாட்டு மைதான மானது நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாதுள்ளது. இதனால் இளைஞர்கள் அதனைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. அப்பிரதேச இளைஞர் மன்றத்தின் செயலாளர் க.தேவ குமாரன் என உங்களைக் கருதிக்கொண்டு, மைதானத்தைப் புனரமைத்துத் தருமாறுகோரி பின்வரும் விடயங்கள் உள்ளட ங்கியதாக பொன்னகர பிரதேச செயலாளருக்கு 100 சொற்களில் கடிதம் ஒன்று எழுதுக.

❖ மைதானத்தின் தற்போதைய நிலை

❖ அதனால் இளைஞர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு

❖ புனரமைப்பதால் ஏற்படும் நன்மைகள்


**அல்லது**

இலாபமீட்டுதலைக் கருதி விவசாயத்துறையில் இரசாயன உரங் களின் பாவனை அதிகரித்துள்ளது. இதனால் நாம் உண்ணும் உணவில் நச்சுத் தன்மை மிகுந்துள்ளது. இவ்வுணவுப் பாவனை யால் புற்றுநோய் முதலிய கொடுநோய்கள் மனித சமுதாயத்தில் பெருகி வருகின்றன. எனவே இவற்றிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கு மீண்டும் இயற்கை உணவை நோக்கிச் செல்லு வதன் தேவையை வலியுறுத்தி, அது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சோழியபுரம் இளம் விஞ்ஞானிகள் சங்கத்தின் சார்பில் 100 சொற்களில் ஒரு துண்டுப்பிரசுரம் எழுதுக.

# க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்- விஞ்ஞானம்-II தொடர்ச்சி

08.(A) இயற்கை நீர்ச் சூழற்றொகுதியின் மாதிரி வரிப்படம் உருவிற் காட்டப்பட்டுள்ளது

(i) மேற்படி சூழலில் வாழும் அங்கிகளை வகைப்படுத்தும் போது அவைகளிடையே கூர்ப்புரீதியான தொடர்புகளை அவதானிக்கலாம். இத்தகைய பாகுபாடு எப்பெயரால் அழைக்கப்படும்,



(ii)(a) இங்கு காணப்படும் சில அங்கிகள்ஆபத்தான சூழல்களிலும் வாழும் ஆற்றலுடையவை. இவை எப் பேரிராச்சியத்துக்குரியவை

(b) இங்கு ஆபத்தான சூழல் எனப் படும் இரண்டு இடங்களைக் குறிப்பிடுக

(iii) உருவிற் காட்டியவாறு நீர்ச் சூழலில் காணக்கூடிய இரண்டு அங்கிக் கூட்டங்களைப் பெயரிடுக

(iv) (a) இங்கு நீர்ச் சூழலிலிருந்து பெறப்பட்ட நீர் மாதிரி நுணுக்குக் காட்டியின் கீழ் அவதானிக்கப்பட்டது. இங்கு a- பிசிர்கள், b - சவுக்கு முளைகள், C – போலிப்பாதம் ஆகிய இடப்பெயர்ச்சி அங்கங்களைக் கொண்டஅங்கிகள் அவதானிக்கப்பட்டது. a,b,c ஆகிய கட்டமைப்புகளைக் கொண்ட அங்கிகள் ஒவ்வொன்று வீதம் குறிப்பிடுக.

(b) மேற்படி சூழலில் அவதானிக்கக்கூடிய நீரினுள் அமிழ்ந்தி வாழும் தாவரம் ஒன்றைப் பெயரிடுக

(B) (i) மேற்படி நீர்ச் சூழலுக்கு அண்மையில் நன்கு வளர்ந்த மரமொன்றில் பகல் நேரத்தில் ஏராளமான வெளவால்கள் காணப்படுவது அவதானிக் கப்பட்டது.


(a) வெளவால்களுக்கு தடைகளைத் தாண்டி பறப்பதற்கு உதவும் அலை வகை யாது?

(b) மேலே (a) இற் குறிப்பிட்ட அலைகள் மனிதன் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(ii) நீரினுள் வாழும் மீனொன்றின் திணிவு **1.4 kg** ஆகும். மீனின் மீது **10N** மேலுதைப்பு விசை தொழிற்படுகின்றது. மீனின் உண்மை நிறை யையும் தோற்ற நிறையையும் காண்க.

(iii) மேற்படி சூழலில் மீனவர் ஒருவர் வலையைப் பயன்படுத்தி மீன் பிடிக்கச் செல்கிறார். அவரது வலையின்அடிப்பாகத்தில் ஈயக் கோளங்களும் மேற்பாகத்தில் ஸ்ரைரபோம் கோளங்களும் பொருத்தப்பட்டுக் காணப்பட்டன. இவ்வாறு ஈயக் கோளங்களும் ஸ்ரைரபோம் கோளங்களும் பொருத்தப் படுவதற்கான காரணத்தை விஞ்ஞான ரீதியாக விளக்குக.

(iv) நீரினுள் காணப்படும் மீன் ஒன்று அதற்கு முன்னாலுள்ள மற்றொரு மீனின் தெளிவானவிம்பத்தை நீருக்கு வெளியே அவதானிக்கிறது. அதற்குரிய கதிரின் பயணப்பாதை அருகே தரப்பட்டுள்ளது.



(a) உருவிற் தரப்பட்டுள்ள θ கோணத்தின் பெறுமானம் அவதிக் கோணத்திலும் குறைந்ததா? கூடியதா?

(b) மீனின் மேற்படி அவதானிப்புடன் தொடர்புடைய (a) இற் குறிப்பிட்ட தோற்றப்பாடு மனிதனாற்பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக

(09)(A) பெரும்பாலான சேதனச் சேர்வைகள் பெற்றோலியத்திலிருந்து பிரித்தெடுக்கப்படுகின்றன.

(i) கலவையின் கூறுகளை வேறாக்கும் எம்முறையைப் பயன்படுத்தி பெற்றோலியத்தின் கூறுகள் வேறாக்கப்படுகின்றன?

(ii) ஒக்ரேன் ($C_8H_{18}$) என்பது பெற்றோலியத்திலிருந்து வேறாக்கப்படும் ஒரு கூறாகும். இது வளியில் தகனமடைவதுடன் தொடர்புடைய இரசாயனச் சமன்பாடு கீழே தரப்பட்டுள்ளது.

$2C_8H_{18} + 25O_2$--------- $16CO_2 + 18H_2O$ + வெப்பம்

மேற்படி தாக்கம் அகவெப்பத் தாக்கமா புறவெப்பத் தாக்கமா எனக் குறிப்பிடுக

(iii) மேற்படி தாக்கத்தில் தாக்கிகளையும் விளைவுகளையும் சக்திமட்ட வரைபிற் குறித்துக் காட்டுக.

(B) ஐதரோ காபனான எதீனின் பல்வேறு பெறுமதிகளைப் பயன்படுத்தி பல்வேறு பல்பகுதியங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

(i) எதீன் மற்றும் அதனையொத்த மற்றொரு மூலக்கூறான எதேன் என்பவற்றுள் மிகவும் தாக்குதிறனுடையது எது?

(ii) உமது விடைக்கான காரணத்தைக் குறிப்பிடுக.

(iii) பொலிரெற்றாபுளோரோஎதீனின் (ரெவ்லோன்) ஒருபகுதியத்தின் கட்டமைப்புச் சூத்திரத்தை எழுதுக.


(C) பல்வேறு பதார்த்தங்களினூடு மின்னோட்டம் பாய்தல் தொடர்பாகக் கருதும் போது அவற்றை மின்கடத்திகள், மின் காவலிகள், குறை கடத்திகள் என வகைப்படுத்தலாம். குறைகடத்தித் திரவியங்களைப் பயன்படுத்தி ஆக்கப்பட்ட துணைக்கூறுகளைக் கொண்டு மாணவன் ஒருவனால் ஆக்கப்பட்ட மின்சுற்றின் வரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது.

(i) குறைகடத்திகளைப் பயன்படுத்தி ஆக்கப்பட்டுள்ள a,b,c,d ஆகிய துணைக்கூறுகள் எப்பெயரால் அழைக்கப்படும்?

(ii) குறித்த சந்தர்ப்பத்தில் பெயர்ப்புச் சுற்றுக்கு வழங்கப்படும் ஆட லோட்டம் JA திசையினூடாகப் பாய்கின்றது. இதன்போது a,b,c,d என்பவற்றுள் முன்முகக்கோடலுற்றிருப்பவை யாவை?

(iii) பெயர்ப்புச் சுற்றில் ஆடலோட்டம் பாயும் போது G யின் தொழிற்பாடு தொடர்பாக எத்தகைய அவதானத்தைப் பெறலாம்?

(iv) பெயர்ப்புச் சுற்றில் ஆடலோட்டம் பாயும் போது பயப்புச் சுற்றினூடு பாயும் மின்னோட்டத்தின் அலை வடிவத்தை வரைக.



# வெளிநாடு



மேலும் அருகில் இருந்த பிற கடைகளுக்கும் தீ பரவியது. இதனால் அப்பகுதி முழுவதும் புகை மண்டலமானது.

இதுகுறித்து தகவல் அறிந்த ஊட்டி தீயணைப்பு நிலைய வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். சுமார் 3 மணி நேரம் போராடி நேற்று முன்தினம் அதிகாலை 5 மணியளவில் தீயை அணைத்தனர்.

பொலிஸார் நடத்திய விசாரணையில் சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்ததால், தீப்பிடித்தது தெரியவந்தது. இந்த பயங்கர தீ விபத்தில் காய்கறி, மளிகை கடைகள், ஹோட்டல்கள் என 81 கடைகள் முற்றிலும் எரிந்து நாசமாகின. (2)

## ரஷ்யாவில் 2 ஆம் உலகப்போர் வெற்றிதினம் இந்திய முப்படை வீரர்கள் பங்கேற்பு

(மொஸ்கோ)

ரஷ்யாவில் இரண்டாம் உலகப்போர் வெற்றி தின கொண்டாட்டத்தில் இந்திய வீரர்கள் பங்கேற்று அணிவகுப்பு நடத்தினர். ரஷ்ய தலைநகர் மொஸ் கோவில் இரண்டாம் உலகப் போரின் 75 ஆவது வெற்றிதினம் நேற்று கொண்டாடப்பட்டது.


மே மாதம் நடைபெறுவதாக இருந்த வெற்றி தின அணிவகுப்பு கொரோனா அச்சுறுத்தல் காரணமாக தள்ளி வைக்கப்பட்டு நேற்று நடைபெற்றது.

ரஷ்ய வீரர்களின் சிறப்புமிக்க அணிவகுப்பு நடைபெற்றது. அணிவகுப்பை ரஷ்ய ஜனாதிபதி புடின் பார்வையிட்டு, உரையாற்றினார்.



இந்த வெற்றிக்கொண்டாட்டத்தில் இந்தியாவின் முப்படை வீரர்களும் பங்கேற்று அணிவகுப்பு நடத்தினர். இந்த அணிவகுப்பை ரஷ்ய ஜனாதிபதி புடின், இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோர் பார்வையிட்டனர். இதேபோல் சீன இராணுவ வீரர்களும் இதில் பங்கேற்று அணிவகுப்பு நடத்தினர். (2)

## ...வில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்!





துள்ளது.

அதிசக்திவாய்ந்த நிலநடுக்கத்தையடுத்து, கட்டடங்கள் குலுங்கின. நகரின் கட்டடங்களுக்குள் இருந்த மக்கள் தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறி வீதிகள் மற்றும் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்தனர்.

நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட சேத விபரங்களோ அல்லது உயிரிழப்புகளோ உடனடியாக வெளிவரவில்லை. இதேவேளை, குறித்த சக்திவாய்ந்த நிலநடுக்கத்தையடுத்து சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லைஎன்பது குறிப்பிடத்தக்கது. (2)

## ஜப்பானில் அமெரிக்க விமான படைத்தளத்தில் பயங்கர தீ விபத்து


(டோக்கியோ)

ஜப்பானில் உள்ள அமெரிக்க விமானப்படை தளத்தில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது. இந்த தீ விபத்தில் உயிரிழப்போ அல்லது காயங்களோ ஏற்படவில்லை.

ஜப்பானின் ஒக்கினாவா மாகாணத்தில் உள்ள கதினாவ நகரில் அமெரிக்க இராணுவத்தின் மிகப்பெரிய விமானப்படை தளம் உள்ளது.

சுமார் 2 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த விமானப்படைத்தளத்தில் 25 ஆயிரத்து 800 அமெரிக்க வீரர்களும், அவர்களது குடும்பத்தினர் 19,000 பேரும் உள்ளனர்.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை இந்த விமானப் படை தளத்தில் திடீர் தீ விபத்து



ஏற்பட்டது. வெடிபொருட்கள் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் ஆயுதக் கிடங்கில் தீ பிடித்தது.

மளமளவென கொழுந்து விட்டு எரிந்த தீ, சற்று நேரத்தில் விமானப் படைத்தளத்தின் பிற பகுதிகளுக்கும் பரவியது. இதையடுத்து விமானப் படை தளத்தில் இருந்த தீயணைப்பு வீரர்கள் விரைந்து செயற்பட்டு தீயை அணைத்தனர்.

அதிர்ஷ்டவசமாக இந்த தீ விபத்தில் உயிரிழப்போ அல்லது யாருக்கும் காயமோ ஏற்படவில்லை.

தீ விபத்துக்கான காரணம் என்ன என்பது உடனடியாக தெரியவில்லை. இது குறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. (2)

## ...சவத்தில் பிறந்த 3 குழந்தைகளுக்கு கொரோனா; ... சில மணிநேரத்தில் எப்படி சாத்தியமாகும்

### அதிர்ச்சியில் மருத்துவர்கள்



கொரோனாவை சொல்வது சரிதான்.

இப்படித்தான் மெக்சிக்கோ நாட்டில் நடந்திருக்கிறது. அங்கு ஒரு பெண்ணுக்கு ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகள் பிறந்தன.

பிறந்து சில மணிநேரத்தில் அந்த 3 குழந்தைகளுக்கும் கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளது தெரியவந்தது. இதுவரை உலகில் எங்கும் இப்படி நடந்ததாக தகவல் இல்லை என்று மெக்சிக்கோ சுகாதார அதிகாரிகள் அதிர்ச்சியில் உறைந்து போய் இருக்கிறார்கள்.

ஏற்கனவே மெக்சிக்கோவில் ஒரு இலட்சத்து 85 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு தொற்றிருக்கிறது. 22 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டோர் பலியாகி இருக்கிறார்கள்.

இந்த அதிர்ச்சியில் உறைந்து போயுள்ள மெக்சிக்கோ சுகாதார துறைக்கு இப்படி ஒரே பிரசவத்தில் பிறந்த 3 குழந்தைகளுக்கும் கொரோனா வைரஸ் தொற்று இருப்பது புரியாத புதிராக இருக்கிறது.

இந்தக் குழந்தைகளுக்கு தாயின் கருப்பையில் இருந்தபோது, கர்ப்ப காலத்தில் நஞ்சுக்கொடி வழியாக கொரோனா வைரஸ் பரவி இருக்க முடியுமா என்று மருத்துவ நிபுணர்கள் ஆராய்ந்து வருகிறார்கள்.

அந்தக் குழந்தைகளுடைய தாய், தந்தைக்கு கொரோனா அறிகுறிகள் எதுவும் இல்லை. அவர்கள் அறிகுறியற்று கொரோனாத் தாக்குதலுக்கு ஆளாகி இருக்கிறார்களா? என்று கண்டறிய பரிசோதனை நடத்தப்படுகிறது. (2)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு


06

கலாநிதி முருகர் குணசிங்கம்

### புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள்

தமிழ் இனம் இந்தியாவின் தென்பகுதியிலும் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளிலும் வாழும் ஒரு பெரிய இனம் ஆகும். இந்தியக் கூட்டு ஆட்சி அமைப்பின் கீழ் மொழிவாரியாகப் பிரிக்கப்பட்டு உள்ள 29 மாநிலங்களுள் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மாநிலம் "தமிழ்நாடு" ஆகும். அங்கே சுமார் 8 கோடித் தமிழர்கள் வாழ்கின்றார்கள்.

பல்லாயிரம் ஆண்டுகள் பழைமையான வரலாறு தமிழ் இனத்திற்கு உண்டு. தமிழ் மொழியையும் தங்களுக்கெனத் தனிப் பண்பாட்டையும் சமயப் பழக்கவழக்கங்களையும் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள். தமிழ்நாட்டுத் தமிழர்களும் இலங்கையில் வாழும் தமிழர்களும் வரலாற்றுக் காலத்திற்கு முன்பு இருந்தே ஓர் இனமாகவும் ஒரே மொழி, ஒரே மத, கலை, கலாசார, பாரம்பரிய விழுமியங்களைக் கொண்டவர்களாகவும் வாழ்ந்து வருகின்றார்கள். தமிழ்நாட்டுத் தமிழர்கள் பிரித்தானியர் இந்தியாவை ஆட்சி செய்த காலத்தில் இருந்து பல்வேறு வழிகளில் பிறநாடுகளுக்கு வேலைவாய்ப்புக் காரணமாகவும் அரசியல் காரணமாகவும் இடம்பெயர்ந்து வாழ்கின்றார்கள். அவர்களைப் பற்றிய ஆய்வு நூல்கள் பல வெளிவந்து இருக்கின்றன. எனவே தமிழ்நாட்டுத் தமிழர்கள் இந்த ஆய்வில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இந்த ஆய்வு முழுக்கமுழுக்கப் புலம்பெயர்ந்து பிறநாடுகளில்




ஈழத்தமிழர் புலம்பெயர்ந்து வாழும் பிரதான 16 நாடுகள்

வாழும் ஈழத்தமிழர்கள் பற்றியதே ஆகும்.

ஈழத்தமிழர்கள் இலங்கைத் தீவின் பழங்குடிகள் ஆவர். இன்று இலங்கையின் மக்கள்தொகையில் 22 விழுக்காடு ஈழத்தமிழர்கள் ஆவர். பெரும்பான்மை இனமாகிய சிங்களவர்களும் இலங்கையின் மற்றொரு பழங்குடியினரே. அவர்கள் இலங்கையின் மக்கள் தொகையில் 74 விழுக்காட்டுக்கும் மேலாக உள்ளனர்.

சிங்கள மக்களின் தாய்மொழி சிங்களம், பௌத்தம் அவர்களது மதம், ஆரிய இனக்குழுவைச் சேர்ந்தவர்களே சிங்கள இனமக்கள் என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். அவர்கள் இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு தவிர்ந்த மத்திய, தெற்கு இலங்கைப் பகுதிகளில் பெரும்பான்மையினராக வாழ்கின்றார்கள். இலங்கை அரசு பெரும்பான்மைச் சிங்கள மக்களின் அரசாகவும் இலங்கை அரசின் முப்படைகளும் 99 விழுக்காடு சிங்கள மக்களை உள்ளடக்கியதாகவும் இருக்கின்றது.

மேலும் முஸ்லிம்கள், பறங்கியர் ஆகியோரும் மத்திய காலப் பகுதியில் இருந்து இலங்கையில் வாழ்ந்து வருகின்றார்கள். ஆயினும் அவர்கள் மொத்த மக்கள் தொகையில் எண்ணிக்கையில் குறைந்த அளவினராகவே உள்ளனர். முஸ்லிம்கள் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்திலும் அத்தோடு பரவலாக இலங்கை முழுவதும் சிறுதொகையிலும் வாழ்கின்றார்கள். பறங்கியர்கள் குறிப்பாக போர்த்துக்கீசிய நெதர்லாந்து நாட்டு வழிவந்தவர்கள் மிகவும் சிறு தொகையினரே இலங்கையில் வாழ்கின்றனர்.

இலங்கையின் மத்திய மலையகத் தோட்டங்களில் வாழும் இந்தியத் தமிழர்கள், பிரித்தானியர் வருகையின் போது தேயிலை, இறப்பர், தோட்டங்களில் பணிபுரிவதற்காகத் தமிழ்நாட்டில் இருந்துகொண்டு வரப்பட்டுக் குடியமர்த்தப்பட்டவர்கள் ஆவர். இவர்களின் எண்ணிக்கையும் ஈழத் தமிழர்களின் மக்கள் தொகை அளவிற்குக் காணப்படுகிறது. இவர்களின் இன, மத, மொழி, கலாசார, பாரம்பரியம், பழக்கவழக்கங்கள் ஆகியன ஈழத்தமிழர்களை ஒத்ததாகவே இருக்கின்றன. ஆயினும் இவர்கள் ஈழத்தமிழர்களின் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து புவியியல் அடிப்படையில் பிரிந்து உள்ள மலையக, மத்திய தென் இலங்கைப் பகுதிகளில் சிங்களவர்களோடு வாழ்ந்து வருகின்றார்கள். இந்த ஆய்வில் அவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

இந்த ஆய்வு முழுமையாக ஈழத்தமிழர்களை முன்னிறுத்தியே மேற்கொள்ளப்படுகின்றது. எனவே ஈழத்தமிழர்கள் இந்நிலைமைக்கு உட்படுத்தப்பட்டதற்கான வரலாற்றுப் பின்னணியை மிகச்சுருக்கமாகவேனும் இந்த ஆய்வின் தொடக்கத்தில் குறிப்பிடுவது தேவையாகின்றது. மேலும் தமிழ் ஈழம் தமிழ் மக்களின் தனிநாடாக இருப்பதன் காரணமாக இவ்வாய்வில் அங்கு வாழும் மக்கள் "ஈழத்தமிழர்கள்" என்றே அழைக்கப்படுகின்றார்கள்.

இலங்கைத் தமிழர்களின் முழுமையான வரலாறு பற்றி இந்நூலாசிரியர் "இலங்கையில் தமிழர்: ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300-கி.பி.2000) என்னும் ஆய்வு நூலை 2008 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். அதன் தொடர்ச்சியாக "தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம்: அரசபயங்கரவாதமும் இன அழிப்பும்" என்ற ஆய்வு நூலை 2012 ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார்.

நூலாசிரியரின் முன்னைய நூல்களான "தமிழ்த் தேசியவாத்தின் ஆரம்பத் தோற்றம்" என்னும் ஆய்வு நூல் 1999 எனும் இலங்கைத் தமிழர் வரலாற்று மூலாதாரங்கள்: "ஓர் உலகளாவிய தேடல்" என்னும் ஆய்வு நூல் 2006 இலும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூல்கள் யாவுமே தமிழிலும் ஆங்கிலத்திலும் முழுவதும் கிடைக்கக் கூடிய ஒழுங்குகளும் செய்யப்பட்டு உள்ளன. **Anazon.com.UK** மூலமும் பெறக்கூடியதாக உள்ளன. ஈழத்தமிழர்கள் பற்றிய ஆழமான அறிவினையும் தெளிவினையும் பெறுவதற்கு மேற்படி ஆய்வு நூல்கள் இன்றியமையாதவை.

தமிழர்கள் இலங்கையின் பழங்குடிகள் ஆவர். வரலாற்றுக் காலத்திற்கு முன்பு இருந்தே தொடர்ச்சியாக அங்கு வாழ்ந்து வருகின்றார்கள். இலங்கையின் ஆதி வரலாறு தமிழர்களின் வரலாறாகவும் தமிழ்மொழி அவர்களின் மொழியாகவும் இந்து மதம் குறிப்பாக சைவ மதம் அவர்களின் முதன்மையான மதமாகவும் இருந்து வருகின்றது என்பதைப் பல்வேறு தொல்லியல் சான்றுகள் மூலம் காண முடிகின்றது.

இலங்கையின் புராதனச் சிற்றரசுகளும் அநுராதபுரத்தை மையமாகக் கொண்டு ஆரம்பகால நூற்றாண்டுகளில் எழுச்சி பெற்ற பேரரசும் அதன் அரசர்களும் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதனை பாழி மொழியில் கி.பி.4 ஆம், 5 ஆம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட பௌத்த நூல்களாகிய தீவவம்ச, மகாவம்ச என்ற நூல்களில் ஆங்காங்கே குறிப்பிடப்பட்டுள்ளது.




தமிழீழமும் இலங்கையும்

சிங்கள இனத்தைச் சேர்ந்த நேர்மையான நவீன கால வரலாறு, தொல்லியல், மானிடவியல் ஆய்வாளர்களும் தமிழ் இனத்தைச் சேர்ந்த பிரபலமான வரலாற்று ஆய்வாளர்களும் இக்கருத்தைத் தமது ஆய்வுகளில் குறிப்பிட்டுள்ளார்கள். சர்வதேசப் பல்கலைக்கழகங்கள், **UNESCO** போன்ற நிறுவனங்களின் ஆய்வுத் துறையினர் இலங்கையில் பரவலாக நடத்திய அகழ்வு ஆராய்ச்சிகளும் முடிவுகளும் மேற்படி கருத்தை உறுதிப்படுத்தி இருக்கின்றன.

இலங்கைத்தீவு இரண்டு தனித்தனியான தேசிய இனங்களைக் கொண்ட ஒரு நாடு, ஒன்று சிங்கள தேசம், மற்றையது தமிழ் ஈழத் தேசம், வரலாற்றுக் காலம் தொட்டு இலங்கையின் தெற்கு, மத்தியப் பிரதேசங்களில் சிங்கள இன மக்களும் வடக்கு, கிழக்கு, வடமேற்கு, வடமத்தியப் பிரதேசங்களில் தமிழர்களும் வாழ்ந்து வருகின்றார்கள். இரண்டு இனங்களுமே தமக்கே உரிய இன, மொழி, மத, கலை, பண்பாட்டு, பழக்கவழக்கங்களைக் கொண்டுள்ளனர். கி.பி.13 ஆம் நூற்றாண்டில் இருந்து கி.பி.16 ஆம் நூற்றாண்டு வரையில் தமிழர்களின் யாழ்ப்பாணப் பேரரசு மிகவும் வலுவாகத் திகழ்ந்து வடக்கு, கிழக்குப் பகுதிகளில் முறையான நிதி, நிர்வாகக் கட்டமைப்பு இருந்தது.

இவ்வாறான ஒரு நிலைமையிலுங்கூட சிங்கள தேசியவாதிகளும் கல்விமான்களும் தமிழர்கள் தென் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்து ஆட்சி செய்தனர் என்று பல்வேறுபட்ட ஏற்கப்படாத கருத்துக்களை முன்வைக்கின்றனர்.


இந்த வேளையில் வரலாறு தொல்லியல் பேராசிரியர் இந்திரபாலா அவர்களின் "**Tamils in Sri Lanka: An evolution of ethnicity**" என்னும் ஆய்வு நூலில் கூறப்பட்டு இருக்கின்ற கருத்துகளை இங்கு மேற்கோள் காட்டுவதன்மூலம் மேற்படி நிலைமையைத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

"மொழி, எழுத்து, தொழில்நுட்பம், பயிர்ச் செய்கை போன்ற முக்கியமான துறைகளில் பெரும் முன்னேற்றங்களும் மாற்றங்களும் ஏற்பட்ட காலம் ஆதி இரும்புக் காலம். அரசியல், சமூக, பண்பாட்டு மாற்றங்கள் பல அக்காலத்தில் நிகழ்ந்தன. அதனால் கற்கால மக்கள் பெரிதும் முன்னேறினர். இலங்கை மக்களுடைய வரலாறும் தொடக்கம் பெற்றது.

(தொடரும்)

# பிரசாரத்தை மாத்திரம் வைத்துக் கொண்டு கருணாவைக் கைது செய்ய முடியாது

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் திகாமடுலை தேர்தல் மாவட்ட வேட்பாளருமான கருணா அம்மான் என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமையும் குற்றப் புலனாய்வுப் பிரிவில் ஆஜராக வில்லை.

ஆனையிறவில் 2000-3000 வரையான இராணுவத்தினரை ஒரே இரவில் தான் கொலை செய்ததாக அவர் தேர்தல் பிரசாரமொன்றின் போது கூறியது குறித்து அவரிடம் வாக்கு மூலம் பெறுவதற்காக குற்றப் புலனாய்வுப் பிரிவு அழைப்பாணையை திங்கட்கிழமையும் இன்றும் அனுப்பியிருந்த போதிலும் இரு தினங்களிலும் அவர் ஆஜராகாததால் அது குறித்து நீதவான் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அவரிடம் வாக்குமூலம் பெறுவதற்காக குற்றப் புலனாய்வு பிரிவினர் சிலர் அம்பாறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இது தொடர்பாக மேலும் கூறியதாவது,

இராணுவத்தினரின் கொலை தொடர்பில் கருணா தெரிவித்திருக்கும் பிரசாரத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு அவரை கைது செய்ய முடியாது. அவரிடம் பெற்றுக்கொள்ளும் வாக்குமூலங்களில் ஏதாவது தகவல்கள் கிடைக்கும் பட்சத்தில் மாத்திரமே கைது செய்வதா? இல்லையா? என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், விநாயகமூர்த்தி முரளிதரன் எனப்படும் கருணா அம்மான் தன்னால் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் சுகவீனம் காரணமாக ஆஜராக முடியாதென தனது சட்டத்தரணி ஊடாக சி.ஐ.டிக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டில் விசேட டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இன்று முதல் அடுத்த 3 நாட்களுக்கு இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், டெங்கு நுளம்பு பரவும் அபாயம் அதிகம் காணப்படும் வலயங்களாக பெயரிடப்பட்டுள்ள கொழும்பு, களுத்துறை, கம்பஹா, கண்டி மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் நிர்மாணப் பணிகள் இடம்பெறும் பகுதிகளை அண்மித்த இடங்களில் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 22 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 23 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-8)




## அன்பே வாழ்வின் ஆதாரம்!

(நேற்றைய தொடர்ச்சி)

நாம் அறிவிலே சிறந்து சட்டங்கள் பெற்று விடலாம்! செல்வத்தைத் தேடிப் பெற்று வளமான வாழ்க்கை வசதிகளை அனுபவிக்கலாம். வாகனம், மாளிகை, உயர் பதவி பெற்றுவிடலாம். ஆனால் இவை மட்டுமே வாழ்வின் உயர்ச்சிக்கு அளவுகோல்கள் ஆகிவிடாது.

"நிறைய படிச்சிருக்கான்! ஆனால் எப்படி இங்கிதமாக நடந்து கொள்வது என்று தெரியவில்லையே! இவனெல்லாம் மனிதனா?" இதுதான் சிலரின் பட்டப்படிப்பிற்கு உலகம் தரும் சான்றிதழ்!

"பணம், பங்களா, தோட்டம் எல்லாம் தான் இருக்கு! ஆனால் மனைவியைக் கண்ணீரும் கம்பலையுமாகவல்லா வச்சிருக்கான்" வசதி நிறைந்த ஒருவனுக்குச் சுற்றி இருப்போர் சூட்டும் பட்டம் இது தான்! "அவரு பெரிய செல்வந்தன் தான்! ஆனால் என்ன பிரயோசனம்! ஊர் பொது விடயங்களுக்கு ஒரு பைசாகூட தர மனசில்லையே! பணம் இருந்தால் போதுமா?" இதுதான் கோடீஸ்வரனுக்கு மக்கள் தரும் கோலாகல விருது. படித்தவர்களுக்குப் பல்கலைக்கழகங்கள் பட்டம் தந்துவிட்டால் போதுமா? பணக்காரர்கள் பட்டியல் ஒரு கோடீஸ்வரனின் பெயரை ஏற்றுக் கொண்டால் போதுமா?

வாழும் சமுதாயம் அவனை மதிக்க வேண்டும். ஆகவே ஒரு மனிதனின் உயர்ச்சி அவன் குணங்களாலேயே கொண்டாடப் பெறுகிறது.

ஆசை, கோபம், களவு கொண்டவன் பேசத் தெரிந்த மிருகம்! அன்பு, நன்றி கருணை கொண்டவன் மனித வாழ்வில் தெய்வம் என்று பாடுகிறார் கவியரசர் கண்ணதாசன். திருவள்ளுவரோ பண்புகளால் உயராத மனிதனைக் கடிந்துரைக்கிறார். அவன் மனிதனல்ல, மரம் என்றே சாடுகிறார். அரம் போலும் கூர்மையரேனும் மரம் போல்வர் மக்கட் பண்பு இல்லாதவர்.

ஒருவன் தன் மகனை அழைத்துக் கொண்டு ஊரில் உள்ள ஒரு குளத்திற்குச் சென்றார். தாமரை பூத்த தடாகம் அது. குளத்தின் படிகளில் மகனோடு இறங்கினார். ஆறு படிகள் இறங்கி அல்லியும், தாமரையும் குவிந்திருப்பதையும் மலர்ந்திருப்பதையும் மகனுக்குக் காட்டி தானும் மகிழ்ந்தார்.

அப்பா மிகவும் ஜோரா இருக்கு. நாளையும் இங்கே அழைத்துக் கொண்டு வரவேண்டும் என்றான் மகன். அன்றிரவு ஊரில் மழை ஒரேயடியாகக் கொட்டியது.

அடுத்த நாளும் மகனோடு தந்தை குளத்திற்கு வந்து படிகளில் இறங்கினார். முதல் நாள் போல் ஆறு படிகள் இறங்க முடியவில்லை. இரவு பெய்த கன மழையால் குளத்தின் நீர் மட்டம் உயர்ந்திருந்தது. மூன்று படிகளே இறங்க முடிந்தது.

தொடரும்...




## சிங்கேறு தனிலமர்ந்து குலவி வரவேணும் தாயே, நாகபூஷணி அம்மையே....

நாற்றிசையும் அலை கடல்கள் தற்சூழ
மணிபல்லவமும் புவனேஸ்வரி பீடமுமாக
அமைந்த நயினைப்பதி அமர்ந்து
அருளாட்சி செய்யும் ஸ்ரீநாகபூஷணித் தாயே
அமுதீசர் மனம் நிறைந்த நாயகியே
அங்குச பாசாங்குசமும் கரும்பும்
அங்கை கொண்ட முக்கண்ணியே
நின் கழலே சரணென்ற மென் அடியார்கள்
துயர் களையவும்,கொரோனாவிலிருந்து
பாதுகாக்கவும்,சிங்கேறு தனிலமர்ந்து
குலவி வர வரவேணும் தாயே
நாகபூஷணி அம்மையே

சரவணமுத்து பரஞ்சோதி
பொலிகையூர்.

## நயினை நாகபூஷணி அன்னை

நயினைப் பதியை ஆளும் நாகபூஷணித் தாயே
நம்பினோர் நலம் காக்கும் நாயகியே
நானிலத்தில் கொடிய கொரோனாவால்
மக்கள் படும் அவஸ்தையை போக்குதாயே
மணிபல்லவத்தின் மனோன்மணியே மணிவிளக்கே
மாந்தர் போற்றும் உலக நாயகியே
உன் திருவருளால் உலகம் உய்ய
அருள்வாய் அம்மா

ஜி.ராஜேந்திரன்
வவுனியா.

## உன் பாதம் பணிந்து தொழுகின்றேன்

அலை கடல் நடுவினிலே வீற்றிருக்கும்
அன்னையே நாகபூஷணியே
மணி பல்லவத்தினிலே இருப்பவளே
மணிமேகலைத் தாயவளே
அடியவர்களுக்கு அமுதூட்டும் அன்னையே
அமுத சுரபித் தாயே அன்னபூரணியே
நாட்களை எண்ணியிருந்தோம்
நாயகியின் மஹோற்சவம் காணுவதற்கு
நாட்டில் ஏற்பட்டுள்ள கொடிய நோய் தாக்கம் கண்டு
தாயே உன் முகம் காண முடியாது தவிக்கின்றேன்
உன்னுடைய பற்பல வடிவங்களை காண
இம்முறை எம் அகக்கண்களால் பார்க்கின்றோம் அம்மா
கருடனிடம் இருந்து நாகத்தை காப்பாற்றிய தாயே
எம் மக்கள் இக் கொடிய நோயிலிருந்து மீளுவதற்கு
மானிடக் குலத்தை காப்பாய் அம்மா
அன்னையே நாகபூஷணித்தாயே
உன் பாதம் பணிந்து தொழுகின்றேன்

தே.இளங்கோவன்
நெட்டிலிப்பாய்,கோண்டாவில்.

## தஞ்சமடி தாயே எம் நாகாத்தா

ஆர்ப்பரிக்கும் திரை கடல் மையத்தில்
நாகதீவில் உறை நாகம்மை தாயே
பக்தர்களின் ரட்சகியே நயினையம்பதி
அன்னையே நல்லெண்ணம் நல்கிட
நல்வாழ்வு பெற்றிட நலம் பல அடைந்திட
சரணாகதி அடைகின்றோம் பேருவகையுடன்
மனதார ஏற்றிடம்மா தஞ்சமடி தாயே
எம் நயினையம்பதி தாயே

எஸ்.யு.சிவம்
வவுனியா.

# நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலையில் தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் முக்கியமானதாகும்-இராதாகிருஷ்ணன்

(ஹற்றன்)

**நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலையில் தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் முக்கியத்துவம் மிக்கதாகும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான முன்னாள் அமைச்சர் இராதாகிருஷ்ணன் சுட்டிக்காட்டினார்.**

ஹற்றன் வெலியோயா பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தமிழ், முஸ்லிம் வாக்குகள் தேவையில்லை. அதற்காக அவர்களிடம் கையேந்தமாட்டோம் என விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். அதாவது தமிழ் மக்களே தங்களிடம் கையேந்த வேண்டும் என்பதே அவரின் நினைப்பாக உள்ளது.

வீடமைப்பு அமைச்சு பதவியை வகித்த விமல் வீரவன்ச, மலையகத்தில் வீடுகளை கட்டவில்லை. இனியும் அவர் அமைச்சரானால் எமது பகுதிகளில் வீடுகளை நிர்மாணிக்கமாட்டார்.

இந்நிலைமை மாறவேண்டுமானால் தொலைபேசி சின்னத்துக்கு வாக்களித்து சஜித்தை பிரதமராக்குவதற்கு எமது மக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வாக்கு என்பது உங்கள் உரிமை. அதனை எங்களுக்குத் தாருங்கள் என பலவந்தமாகக் கேட்க முடியாது. ஆனால்,



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவாளர்களின் குடும்பத்தில் நால்வர் இருந்தால் இரண்டு வாக்குகளை அவர்களுக்கும் இரண்டை எங்களுக்கும் வழங்கலாம். இது எமது கோரிக்கை மாத்திரமே.

தமிழ் முற்போக்கு கூட்டணி கடந்த பொதுத்தேர்தலில் 6 ஆசனங்களை வென்றெடுத்தது. இம்முறை இரத்தினபுரி, கம்பஹா ஆகிய மாவட்டங்களிலும் ஒவ்வொரு தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை எதிர்பார்க்கின்றோம்" என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# பொறிக்குள் சிக்கிய இரு சிறுத்தைகள் மீட்பு


## ஒன்று உயிரிழப்பு

(புஸல்லாவ)

புஸல்லாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்பொட புதுக்காடு எனும் பகுதியில் இரு சிறுத்தைகள் பொறிக்குள் சிக்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விறகுக்கு சென்ற தோட்ட மக்கள் இரு சிறுத்தைகளையும் இனங்கண்டு வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவித்ததையடுத்து வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் குறித்த இடத்திற்கு விரைந்து பார்வையிட்ட போது அதில் ஒரு சிறுத்தை உயிரிழந்துள்ளது. மற்றொரு சிறுத்தை காயங்களுக்கு உள்ளாகியுள்ளது.

காயமடைந்துள்ள சிறுத்தையை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் பாதுகாப்பாக மீட்டுச் சென்றனர். (ஜ)



# அரச ஊழியர்களுக்கான மேலதிக நேரக்கொடுப்பனவில் சிக்கல்

(கொழும்பு)

நிதிப்பற்றாக்குறையினால் மாகாண சபைகளுக்குட்பட்ட அரச ஊழியர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால், சுகாதார ஊழியர்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் உள்ளூராட்சி மன்ற ஆணையாளர்களால், பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சுக்கு அண்மையில் தெரிவிக்கப்பட்டது. இதனடிப்படையில், மேலதிக நேரக் கொடுப்பனவின் மொத்த தொகையை அறிவிக்குமாறு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இது தொடர்பான அறிக்கைகள் கிடைத்தவுடன் திறைசேரியிடமிருந்து நிதியைப் பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஜ-8)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## எதிரிகளுக்கு எச்சரிக்கை

" இருட்டிப் போய் விட்டது!

ஒரு இளம் பெண் தனியாக வெளியே போக வேண்டி இருக்கு!

"ஜாக்கிரதையாக போய் வாம்மா!" என்று வீட்டிலே இருக்கிறவர்கள் எச்சரிக்கிறார்கள். ''கவலைப்படாதீர்கள் வாடகைக்கு ஒரு நாயை வாங்கி துணைக்கு அழைத்துக்கொண்டு போகிறேன்!'' என்று சொன்னாள் அந்தப்பெண். இது இப்படி சொல்லுறது நமக்கு வேடிக்கையாக இருக்கலாம். ஆனால் அமெரிக்காவிலே இது சர்வ சாதாரணம்!

ஆமாம், அமெரிக்காவிலே பாதுகாப்புக்காக ராட்சத நாய்களை வளர்த்து வாடைகைக்கு விடுவார்களாம்.

பாதுகாப்பு வேணும் என்பவர்கள் இவற்றை வாடகைக்கு எடுத்துக் கொண்டு போகலாம். பிறகு திருப்பிக்கொடுத்து விடலாம். அமெரிக்காவிலே ஷெல்லி ஆசிரியர் இருந்தார். அந்த அம்மா இதுக்காகவே தனியான ஒரு கம்பனி நடத்தி வருகிறார்.

நூற்றுக்கணக்கிலே நாய்கள் இருக்கு அவர்களிடம்! எல்லாம் நன்றாகப் பழக்கப்பட்ட நாய்கள். யாருடன் போகிறதோ அவர்களுக்கு பாதுகாப்பாக இருக்கும். எதிரிகள் வந்தால் ஒரே பாய்ச்சல் தான்.... கழுத்தைப் பிடித்து குதறி விடும். இதுவரைக்கும் பதினேழாயிரம் தடவை இவர்கள் கம்பனி நாய்கள் "பாடிகார்ட்" வேலைக்குப் போய் வந்திருக்கிறது! இதுவரைக்கும் இதை மீறி எந்த இடையூறும் நடந்தது இல்லையாம்.

அமெரிக்காவிலே இன்னொரு அலாரம் கூட விற்பனைக்கு வந்திருக்கின்றதாம். இதை வாங்கி வாசலிலே பொருத்தி விட்டால் போதும். திருடன் வாசல் கதவிலே வந்து கையை வைத்தால் போதும். அவ்வளவு தான்.... இது உடனே நாய் மாதிரியே "வாள் வாள்" என்று குரைக்க ஆரம்பித்து விடும்.

நிஜ நாய் தான் என்று நினைத்து திருடன் பயந்து கொண்டு ஓடிப்போய் விடுவான். மனிதரிடம் இருந்து மனிதன் தப்பிப்பதற்கு இன்னும் சில சாதனங்கள் எல்லாம் வந்திருக்குது. '' ஷோக்கன் '' அப்படி என்று ஒன்று. அதிர்ச்சி துப்பாக்கி. யாராவது எதிரி வந்து விட்டால் உடனே இந்த துப்பாக்கியை எடுக்க வேண்டியது... எதிரி உடம்பை துப்பாக்கி முனையாலே தொட்டு....பட்டனை அழுந்த வேண்டியது. விரோதி வில்லுன்னு கத்திக்கொண்டு சுருண்டு விழுந்து விடுவான். சக்தி வாய்ந்த பற்றரியிலே இருந்து மின்சாரம் அவன் உடம்புக்கு உள்ளே பாய்ந்து விடும். பல அடுக்கு மாடி வீடுகளிலே அவசரத்திற்கு உதவி தேடி வெளியே ஓட முடியாத நிலைமை ஏற்படலாம். எதிரிகளிடம் நெருங்கி வந்திடு வார்கள். இந்தச் சமயத்திலே எப்படி தப்பிப்பது? இதற்கு ஒரு கம்பனி ஒரு அலாரம் தயார் பண்ணி இருக்கிறது! இதை வாங்கி வீட்டிலே பொருத்திக் கொள்ள வேண்டியது. எதிரி வந்திட்டான் என்று தெரிந்தவுடன் இந்த அலாரத்தின் பட்டினை தட்டி விட்டு நாங்கள் எங்கள் காதை கெட்டியா மூடிக் கொள்ள வேண்டும். நம்மைத் தவிர வேற யாராலும் அதை ஒப் செய்ய முடியாது. காது சவ்வு கிழிந்து போகிற மாதிரி ஒரு சத்தம் அதிலேயிருந்து வரும். ஒரு ஜெட் விமானம் நம் காதை உரசிக்கிட்டுப் போனால் எப்படி இருக்குமோ அப்படி இருக்கும் அந்த சத்தம்!

எதிரி நடுங்கிப்போய் ஓடிப்போய் விடுவானாம்.

பதிலடிஸ்பிரே என்று ஒன்று மார்க்கட்டுக்கு வந்திருக்கின்றதாம்.

தாக்க வருகின்ற ஆசாமி முகத்திற்கு நேராக இதை அடித்துவிட்டால் போதும்.. தாங்க முடியாத எரிச்சலிலே கண்ணு மண்ணு தெரியாமல் ஓட ஆரம்பித்துவிடுவானாம். இதே மாதிரி இன்னொரு வகையான ஸ்பிரே எரிச்சலுக்குப் பதிலாக ஒரு கொடுமையான துர்நாற்றத்தை உண்டாக்குமாம். அது தாங்க முடியாமல் திருடன் ஓடிப் போய் விடுவானாம். சில சமயம் அந்த துர்நாற்றம் தாங்க முடியாமல் திருடன் மயங்கியே விழுந்து விடுவானாம்.

அப்படி ஒரு கொடுமையான நாற்றம். என்ன செய்வது...காலம் போகின்ற போக்கிலே இப்படியெல்லாம் கருவிகளை வைத்துக் கொண்டு தான் மனிதர்கள் மத்தியில் காலம் தள்ள வேண்டியிருக்கு.

ஒரு வீட்டிலே இப்படித்தான் ஒரு பதிலடி ஸ்பிரே துர்நாற்றம் தாங்க முடியாமல் ஒரு ஆள் மயங்கிக் கிடந்தானாம்.

உடனே பொலிஸ்காரர் ஓடி வந்து அவனைப் பிடித்து தூக்கி நிறுத்தி நட ஸ்டேசனுக்கு அப்படி என்று சொல்லியிருக்கிறார்கள்.

சேர்... ஸ்பிரேயில எது முன்பக்கம் என்று தெரியாமல் அடித்து விட்டான். நான் திருடன் இல்லை ... வீட்டுக்காரன்! அப்படி என்றானாம் அந்த ஆள்.

# சுதேச, கலாசார விழுமியங்களை பாதுகாக்க ஊடகப் பயன்பாடு அவசியம்

## ஜனாதிபதி வலியுறுத்து



(கொழும்பு)

**நாட்டு மக்களின் கலாசாரம் மற்றும் பண்பாட்டு விழுமியங்களைப் பாது காப்பதுடன் அவற்றைப் பிரதிபலிக்கக் கூடிய வகையில் ஊடகங்கள் செயற்பட வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்தினார்.**

நேற்று முன்தினம் முற் பகல் ஜனாதிபதி அலுவல கத்தில் நடைபெற்ற சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலை யமைப்பின் ,முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாட லின்போதே ஜனாதிபதி மேற் கண்டவாறு தெரிவித்தார்.

புதிய தொழில்நுட்பத்தை அடிப்படையாகக்கொண்ட தொலைக்காட்சி ஒளிபரப்பு ஒன் றுக்காக முன்னெடுக்கப்பட வேண்டிய மாற்றங்கள் மற்றும் அறிவை வளர்க்கக்கூடிய நிக ழ்ச்சிகளை தயாரிப்பதன் அவ சியத்தை பற்றியும் இங்கு கலந் துரையாடப்பட்டது. தேர்தலுக்கு முன்னர் மக்களுக்கு முன்வைத்த "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கை பிரகட னத்தை மக்களில் பெரும்பாலா னவர்கள் ஏற்றுக்கொண்டனர். அதனால் தனது கொள்கையை எடுத்துக்காட்டுவதற்கு அப்பால் தனது அரசாங்கம் செயற்படுத்தி வருகின்ற கொள்கைப் பிர கடனத்தில் குறிப்பிட்டுள்ள அடிப்படைத்தத்துவத்தை மக் களுக்கு எடுத்துச் சொல்வதன் முக்கியத்துவத்தையும் ஜனா திபதி சுட்டிக்காட்டினார்.

வெளிநாட்டு நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்கு தெரிவு செய்யும் போது பின்பற்றப்பட வேண்டிய முறையான வேலைத்திட்டமொன்றின் அவசியத்தையும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் தற் போதைய நிலை, எதிர்கால செயற்றிட்டங்கள் தொடர்பாக வும் இதன்போது கலந்துரை யாடப்பட்டது.

சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைவர் சுதத் ரோஹன, நிறைவேற்றுப் பணி ப்பாளர் ஹசந்த ஹெட்டியாரச்சி, பிரதான நிறைவேற்று அதிகாரி நளின் குமார நிஷங்க ஆகி யோருடன் பணிப்பாளர் சபை உறுப்பினர்களும் சிரேஷ்ட அதிகாரிகளும் இக்கலந்துரை யாடலில் கலந்துகொண்ட னர். (ஜ-4)

# ஒரு பிரிவினர் தன்னிச்சையாக செயற்பட்டமையே ஜனாதிபதித் தேர்தலில் தோல்விக்குக் காரணம்

## வஜிர விளக்கம்



(கொழும்பு)

2019 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலின் போது கட்சியின் ஒரு பிரிவினர் தன்னிச்சை யாக செயற்பட்டமையே ஜனா திபதித் தேர்தலில் தோல்விக்கு காரணமாக அமைந்தது என ஐக்கிய தேசியக் கட்சியின் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பி னர் வஜிர அபேவர்தன தெரி வித்தார்.

சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அவர், ஜனாதிபதித் தேர்தலில் அடைந்த தோல்வியானது நாம் முறையாக பிரசாரப்பணிகளை முன்னெடுக்காமையினாலோ அல்லது ஒத்துழைப்பினை வழ ங்காமையினாலோ இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டி னார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், "கடந்த காலத்தில் 2016 ஆம் ஆண்டு நடத்தவேண்டிய ஜனாதிபதித் தேர்தலை 2015 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நடத்துவதற்கு முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷ அழை ப்பு விடுத்தார். அதற்குக் கார ணம் பொருளாதாரத்தைத் தொடர்ந்தும் கொண்டு நகர்த்த இயலாமையே ஆகும்.

அப்போது ஐக்கிய தேசியக் கட்சி சரியான தீர்மானத்தை எடுத்தது. அவ்வேளையில் அடுத்த ஜனாதிபதி வேட்பாள ராக தானே போட்டியிட வேண்டுமென்று ரணில் விக் கிரமசிங்க கோரவில்லை.

மாறாக நாட்டை நிர்வகிக் கக்கூடிய தரப்புக்கள் இணை ந்து செயற்படத் தீர்மானித்த தோடு, அத்தரப்புக்களினால் பொதுவேட்பாளராக மைத்தி ரிபால சிறிசேன தெரிவு செய் யப்பட்டார்.

அதில் சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடு தலை முன்னணி, சிவில் சமூக அமைப்புக்கள் உள்ளிட்ட பல் வேறு தரப்புக்கள் ஒன்றிணை ந்து போராடி வெற்றியைப் பெற் றுக்கொண்டன.

இந்நிலையில் நாம் அடுத்த தாகத் தீர்மானம் மேற்கொள்ள வேண்டியிருந்தது கடந்த 2019 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத் திலாகும். இதன்போதும் 2015 தேர்தலில் தீர்மானம் மேற் கொண்டதைப் போன்றே ஒன் றிணைந்து செயற்படக்கூடிய அனைத்துத் தரப்பினருடனும் கலந்தாலோசித்து ஒரு வேட் பாளரைத் தெரிவு செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட் டையே ஐக்கிய தேசியக் கட்சி யின் கொள்கைகளை முன்னி லைப்படுத்துவோர் கொண்டி ருந்தார்களேயன்றி, மாறாக அக்கட்சியிலேயே ஒருவரை வேட்பாளராக்க வேண்டு மென்று கருதவில்லை.

அதனாலேயே ரணில் விக் கிரமசிங்க சுதந்திர சதுக்கத்தில் அனைத்துத் தரப்பினரையும் வரவழைத்து.அவர்களுடைய அபிப்பிராயங்களைக் கேட்ட றிந்து வேட்பாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டத்தை நடத்தினார். ஆனால் அக்கூட் டத்தில் எமது தரப்பினரில் ஒரு பிரிவினர் தாமே ஜனாதிபதி வேட்பாளரெனப் பிரகடனம் செய்துவிட்டனர்.

எனவே 2019 ஜனாதிபதித் தேர்தல் தோல்வியானது நாம் முறையாக செயற்படாமையால் அல்லது பிரசாரங்களை மேற் கொள்ளாமையால் ஏற்பட வில்லை.

மாறாக நாட்டின் அனை த்துத் தரப்பினரையும் ஒன் றிணைத்து முன்னெடுக்க வேண்டிய ஒரு போராட் டத்தைப் புறந்தள்ளி, தனியாக செயற்பட முற்பட்டமையினா லேயே அந்தத் தோல்வி ஏற் பட்டது" என கூறினார். (ஜ-4)

# செய்தித்துளிகள்

## பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் சங்கம் அதிரடித் தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் 29 ஆம் திகதி தொடக்கம் கொரோனா வைரஸ் பரவல் உள்ளிட்ட அனைத்து தொற்று நோய்களைக் கட்டுப் படுத்தும் பணிகளில் இருந்து விலகிக்கொள்வதற்கு தீர்மா னித்துள்ளதாக பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் சங்கம் தெரி வித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்தும் நட வடிக்கைகளின் போது பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் முகங் கொடுத்த பிரச்சினைகளை பொதுச் சுகாதார அமைச்சு கவ னத்திற் கொள்ளவில்லை என தெரிவித்தே குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறித்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார். அத்துடன் 29 ஆம் திகதியில் இருந்து தேர்தல் கடமைகளில் இருந்தும் இடைவிலகுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

## 16 ஆயிரத்து 215 பேர் தனிமைப்படுத்தல் நிறைவு

(கொழும்பு)

நாட்டில் இதுவரை 16 ஆயி ரத்து 215 பேர் இதுவரையில் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து வீடு சென்றுள்ளனர். நேற்று முன்தினம் மின்னேரியா மற்றும் தியத்தலாவ மத்திய நிலையங்களில் உள்ள 30 பேர் வீடுகளுக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளனர்.

31 தனிமைப்படுத்தல் மத் திய நிலையங்களில் தற்போது 4 ஆயிரத்து 40 பேர் தனி மைப்படுத்தி கண்காணிக் கப்பட்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (ஜ-8)

## கொரோனா தொற்றுக்குள்ளான 4 கடற்படையினர் குணமடைவு

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற் றுக்குள்ளான 4 கடற்படையி னர் பூரண குணமடைந்து வைத்தியசாலையில் இருந்து வெளியேறியுள்ளதாக இல ங்கை கடற்படை தெரிவித்துள் ளது.

இதன்மூலம், கொரோனா தொற்றுக்குள்ளாகி குணம டைந்த கடற்படையினரின் மொத்த எண்ணிக்கை 790 ஆக உயர்வடைந்துள்ளது.

இந்நிலையில், கொரோனா தொற்றுக்குள்ளான 111 கடற் படையினர் வைத்தியசாலை யில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 50 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 140 | 120 |
| தக்காளி | 240 | 240 | 240 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 100 |
| கோவா | 160 | 120 | 130 | 160 |
| கரட் | 140 | 180 | 200 | 200 |
| பூசணி | 50 | 40 | 40 | 40 |
| புடோல் | 60 | 60 | 60 | 80 |
| வாழைக்காய் | 100 | 80 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 300 | 280 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 150 | 250 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 130 | 120 | 100 |
| பயற்றங்காய் | 140 | 150 | 200 | 80 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 | 140 |
| பீற்றூட் | 100 | 110 | 220 | 120 |
| கறிமிளகாய் | 140 | 120 | 160 | 240 |
| முருங்கைக்காய் | 500 | 700 | 400 | 400 |
| போஞ்சி | 160 | 150 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | 50 | 70 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 40 | 20 |
| தேசிக்காய் | 400 | 400 | 380-400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 50 | 40-70 |
| இராசவள்ளி | 150 | 250 | 200 | 280 |
| வெங்காயப்பூ | 320 | 240 | 300 | — |
| முள்ளங்கி | 100 | 90 | 40 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 70 | 50 | 60 |




# யார் பலசாலி?



'நான்தான் பலசாலி' 'நான்தான் பலசாலி' என்று சொல்லி சிங்கம் எப்பொழுது பார்த்தாலும் காடு மேடெல்லாம் தற்பெருமை அடித்துக் கொண்டிருந்தது.

இந்தச் செயல் மற்ற விலங்குகளுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. அப்படியிருந்தும் சிங்கத்தின் தற்பெருமையை ஒருவரும் அடக்க முடியாமல் அடங்கி ஒடுங்கி இருந்தனர்.

அந்தக் காட்டில் ஒரு குளம் இருந்தது. அதில் நட்சத்திர ஆமை ஒன்று வாழ்ந்து வந்தது. அந்தக் குளத்தை ஒட்டி ஒரு நாவல் மரம் இருந்தது. அதில் விசித்திரன் என்ற அணில் வாழ்ந்து வந்தது. நட்சத்திர ஆமையும், விசித்திரனும் உயிர்த் தோழர்களாகப் பழகி வந்தனர்.

சிங்கம், அணிலைப் பார்த்து 'மூடனே நான் கீழே இருக்கிறேன். நீ மரியாதை இல்லாமல் மேலே இருப்பதா? நீ என்னைவிட பெரியவனா? கீழே வந்து என்னை வணங்கி நில். இல்லை தோலை உரித்து கழுகுக்குப் போட்டு விடுவேன்' என்று அதட்டியது.

அணில் பயந்து போய்ச் சிங்கம் சொன்னது போல் நடந்தது.

சிங்கம் சென்றதும் குளத்தை விட்டு வெளியே வந்தது நட்சத்திர ஆமை.

தன் நண்பன் அவமானத்தால் தலை குனிந்து நிற்பதைக் கண்ட ஆமை, 'விசித்திரா சிங்கம் சொன்னதற்கு ஏன் கவலைப்பட்டுத் தலைகுனிந்து நிற்கிறாய்? உலகில் வலிமை உள்ளவர்கள் வலிமை அற்றவர்களை அடக்கி ஆள்வது தானே வழக்கம். யானையிடம் இப்படி அதனால் சொல்ல முடியுமா? என்று ஆறுதல் சொன்னது.

நண்பா சிறியவர், பெரியவர் என்றாலும் தன்மானம் பொது தானே? தேவை இல்லாமல் இன்னொருவருக்கு அடங்கி 'சலாம்' போடுவது கேவலம் இல்லையா? அவரவர் படைப்புக்கும் வேற்றுமைக்கும் ஏற்றபடி அவரவர் பலசாலிகள் தானே? என்று கொதித்தது.

'நண்பா உன் ஆதங்கம் புரிகிறது. இதன் கொட்டத்தை அடக்கத்தான் வேண்டும். என் அம்மா இதன் கெடுபிடிக்கு அடங்க மறுத்ததற்காக அதை கொன்றுவிட்டது.

எனக்கும் இதைப் பழிக்குப்பழி வாங்கத் தான் ஆசை. அதை எப்படி செய்யலாம்?' அப்போது அங்கே ஒரு கட்டெறும்பு வந்தது.

'நண்பர்களே! நீங்கள் பேசியதைக் கேட்டு நானும் கோபம் கொண்டேன். சிங்கத்தின் கொட்டத்தை நான் அடக்குகிறேன்.

அதோ அந்த ஆலமரத்தடியில் தானே சிங்கம் உறங்கும். நாளை அங்கே வந்துவிடுங்கள். 'யார் பலசாலி' என்று நிரூபிக்கிறேன்' என்று ஆலமரத்தில் சென்று தங்கியது.

வழக்கம்போல சிங்கம் ஆலமரத்தடியில் இளைப்பாறியது.

ஆமை கல்லுக்கடியில் மறைந்துகொண்டது. அணில் புதருக்குள் ஒளிந்துகொண்டது.

எறும்பு சிங்கத்தின் காதுக்குள் மெதுவாகச் சென்று நுழைந்து கொண்டு குடைந்தும் கடித்தும் இம்சைப்படுத்தியது.

சிங்கம் வலி தாங்க முடியாமல், 'அய்யோ... அய்யோ... வலி உயிர் போகுதே. காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்' என்று அலறியது.

'நீ பெரிய பலசாலிதானே, முடிந்தால் காப்பாற்றிக் கொள்ளவும்' என்று சிரித்தது எறும்பு.

அணிலும் ஆமையும் தைரியமாக வெளியே வந்து சிரித்துக் கூத்தாடின.


ஒரு கட்டெறும்பிடம் தன்பலம் பலிக்காமல் போகவே, சிங்கம் தன் ஆணவத்தை கைவிட்டது.

ஆமையும் அணிலும் 'சிங்கத்தை விட்டுவிடும்படி கூறவே, எறும்பு சிங்கத்தின் காதுக்குள் இருந்து வெளியே வந்தது.

அன்றில் இருந்து சிங்கம் தான் மட்டும் பலசாலி என்று சொல்வதை விட்டுவிட்டது.

**"ஹாய் குட்டீஸ் ஆவணம் அழிவைத் தரும் என்பதை புரிந்திருப்பீர்கள்"**

## புள்ளிக்கோட்டினை இணைக்குக





## மூளைக்கு வேலை

02) இரண்டு அப்பாவும்
இரண்டு பையனும் மீன் பிடிக்க
செல்கிறார்கள். ஒவ்வொருவரும்
ஒரு மீன் பிடிக்கிறார்கள். மொத்தம்
3 மீன்கள் எவ்வாறு???



## வழிகாட்டுங்கள்



## விடுகதைகளும் விடைகளும்

1. பாஸ்போர்ட்டும் வேண்டாம், விசாவும் வேண்டாம், உலகத்தையே சுத்தி வரலாம். அது என்ன?
   கனவு
2. மண்ணைச் சாப்பிட்டு மண்ணிலேயே வாழ்ந்து மண்ணோடு மண்ணாவான். அவன் யார்?
   மண்புழு
3. கதிர் அடிக்காத களம். உயிர் பறிக்கும் களம் அது என்ன?
   போர்க்களம்
4. உயரத்திலிருந்து விழுவான் அடியே படாது, தரைக்குத்தான் சேதாரமாகும் அது என்ன?
   அருவி நீர்
5. பச்சைக் கீரை பொரிக்க உதவாது. வழுக்க உதவும் அது என்ன?
   பாசி
6. பேப்பர் கிடையாது, வாய்ப்பாடு தெரியாது. கணக்கிலே புலி. அது என்ன?
   கால்குலேட்டர்
7. நாக்கு இல்லாவிட்டால் இவனுக்கு வேலையில்லை. அவன் யார்?
   மணி
8. பணத்தை அள்ளித் தருவதாகக் கூறி பணத்தை எல்லாம் சுருட்டிக் கொள்ளும் பூதம். அது என்ன?
   லாட்டரிச் சீட்டு
9. அண்டாவில் இருக்கும் தண்ணி அள்ளினாலும் குறையாது அது என்ன?
   கிணற்று நீர்
10. வாலுள்ளவன் ஆனால் பறப்பான் அவன் யார்?
    காற்றாடி

குற்றம் புரிந்தவனைத் தூக்கிலிடாதே; அவன் குற்றங்கள் புரிவதற்கான காரணங்களைத் தூக்கிலிடு.
*~ ரூசோ*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சேக்கிழாருக்கு - சிவன் அருணகிரிக்கு - முருகன் கருணாவுக்கு - யார் அவன்

**முதல் அடி** என்ற சொற்பதம் மிகவும் முக்கியமானது. பெரியபுராணத்தைத் தந்தருளிய சேக்கிழார் நாயனாருக்கு **உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்...** என முதல் அடியை சிவப்பரம் பொருள் எடுத்துக் கொடுக்க, சேக்கிழார் பெரியபுராணத்தைப் பாடி அருளினார்.

இதேபோல அருணகிரிநாத சுவாமிகளுக்கு முருகனே முதல் அடியை எடுத்துக் கொடுத்தார்.

**முத்தைத்தரு பத்தித் திருநகை...** என்பது முருகன் கொடுத்த முதல் அடி.

ஆக, முதல் அடி என்பது மிகவும் முக்கியமானது. பாடலில் முதல் அடி முக்கியமானது போல முதல் விழும் அடியும் முக்கியமானதே.

எதிரியைத் தாக்குவது என முடிவு செய்துவிட்டால், முதல் அடி, எதிரி எழுந்திராத வகையில் விழ வேண்டும்.

மாறாக முதல் அடி சறுக்கினால், எதிரியின் இரண்டாம் அடி பலமாக இருப்பதைத் தவிர்க்க முடியாது. இவை ஒரு சிறு விளக்கம் மட்டுமே.

தவிர, கருணா அம்மான் என அழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளீதரன் விடுதலைப் புலிகள் அமைப்பில் தான் இருந்தபோது படையினரைக் கொன்றது தொடர்பில் முதல் அடியை எடுத்து இயம்பியுள்ளார்.

அண்மையில் அவர் தெரிவித்த முதல் அடி ஆனையிறவுப் போரில் ஒரே இரவில் மூவாயிரம் படையினரைத் தான் கொன்று குவித்தது என்பதாகும்.

கருணா அம்மானின் இந்தத் தகவல் பலத்த பரபரப்பையும் சலசலப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆனையிறவுப் போர் நடந்து இருபது ஆண்டுகள் கடந்த நிலையில் – பேரினவாத சக்திகளுடன் கருணா இணைந்து தமிழ் இனத்துக்கு ஈனத்தை ஏற்படுத்திய நிலையில், மூவாயிரம் படையினரை ஆனையிறவில் கொன்றேன் எனக் கூறினார் எனில், அவருக்கு இந்த முதல் அடியை எடுத்துக் கொடுத்தது யார்? என்ற கேள்வி எழவே செய்யும்.

கருணா கூறிய மேற்போந்த விடயத்தை அவர் சுயமாகக் கூறவில்லை. அதை அவர் கூறுவதற்குக் காரணமாக யாரோ மறைந்து நின்றுளார் என்பது தெளிவு.

எது எவ்வாறாயினும் கருணாவின் மூவாயிரம் படையினரைக் கொன்ற காதை போர்க்குற்ற விசாரணைகளில் இருந்து இலங்கை அரசாங்கம் தப்புவதற்காக,

விடுதலைப் புலிகளும் படையினரைக் கண்டபாட்டில் கொன்றுள்ளனர் என்பதை நிரூபிப்பதற்காக,

படையினர் மீது போர்க்குற்ற விசாரணை செய்வதாக இருந்தால், விடுதலைப் புலிப் போராளிகளாக இருந்தவர்களையும் விசாரிக்க வேண்டும் என்பதற்காக,

கருணாவுக்கு முதல் அடி எடுத்துக் கொடுக்க அவர் திருவாய் மலர்ந்துள்ளார்.

## தென்கொரியாவிற்கு எதிரான இராணுவ நடவடிக்கை நிறுத்தம்

### வட கொரியா அறிவிப்பு

(சியோல்)

தென் கொரியாவுக்கு எதிரான "இராணுவ நடவடிக்கை" திட்டங்களை வட கொரியா இடைநிறுத்தியுள்ளதாக அந்நாட்டு அரச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னை விமர்சிக்கும் மற்றும் மனித உரிமைகளை ஆட்சி புறக்கணிப்பது போன்ற வழக்கமாக பலூன்கள் வழியாக அனுப்பப்படும் எல்லை தாண்டிய துண்டுப்பிரசுரங்களினால், இரு நாடுகளுக்கும் இடையிலான பதற்றம் சில காலமாக அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் வட கொரியா மற்றும் தென் கொரியா ஆகிய இரு நாடுகளை பிளவுபடுத்தும், இராணுவமயமாக்கப்பட்ட எல்லைப் பகுதிக்கு துருப்புக்களை அனுப்புவதாகவும் வடகொரியா அச்சுறுத்தல் விடுத்திருந்தது.

ஆனால் ஜனாதிபதி கிம்ஜாங்உன் தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கூட்டத்தில், இராணுவ நடவடிக்கையை இடைநிறுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அரச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (2)

## அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை வடமேற்கு ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இவ்வருடம் நடைபெறாது.

எனினும் உற்சவ காலமான இன்று 25 ஆம் திகதி முதல் எதிர்வரும் 4 ஆம் திகதி வரையான 10 தினங்களும் முற்பகல் 11 மணியளவில் அபிஷேகம் இடம்பெறும். (5)

## தேர்தல் முறைப்பாடுகளை முன்வைக்க விசேட பிரிவொன்று அமைப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள காலப் பகுதிக்குள் இடம்பெறும் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகள் குறித்த முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு விசேட பிரிவொன்றை தேர்தல்கள் ஆணைக்குழு நிறுவியுள்ளது.

இதுதொடர்பில்மேலும தெரிய வருகையில், ஏதேனுமொரு கட்சி அல்லது குழுவுக்கு அல்லது யாரேனும் ஒரு வேட்பாளருக்கு பக்கச் சார்பாகவோ அல்லது பாதகமான வகையிலோ அல்லது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலோ செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டால் அது தொடர்பிலான முறைப்பாடுகளை இதனூடாக முன்வைக்க முடியும்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைமையகத்தில் இதற்கான முறைப்பாட்டு மத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பொதுத் தேர்தல் தொடர்பான விதி மீறல்கள் தொடர்பில் 011 288 6179 அல்லது 011 288 6421 அல்லது 011 288 6117 எனும் தொலைபேசி இலக்கங்களின் மூலம் அல்லது 071 916 0000 எனும் வைபர் அல்லது வட்ஸப் இலக்கத்தின் ஊடாக அறிவிக்க முடியும். அத்துடன், தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கம் அல்லது Tell Commission எனும் பேஸ்புக் பக்கம் ஊடாகவும் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும். (ஐ-8)

## இரத்ததானம்

(குப்பிழான்)

ஸ்ரீலங்கா டெலிக்கொம் பிரதேச காரியாலயத்தினரின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் யாழ். நகர் காரியாலயத்தில் இடம்பெறும்.

(4-5-18)

## சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய வர்த்தமானி வெளியிடப்பட்டமையால் தேர்தல்கள் ஆணைக்குழு அதிருப்தி

(கொழும்பு)

பொதுத்தேர்தல் தொடர்பான சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் இது வரை வெளியிடப்படாமை குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப் பிரிய அதிருப்தி வெளியிட்டார்.

குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படாமையால், தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு பெரும் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர தெரிவித்தார்.

இது குறித்து தாம் சுகாதார அமைச்சுக்கு கவலை வெளியிடுவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி பொதுத தேர்தல இடம் பெறவுள்ள நிலையில், தேர்தல் தொடர்பான சுகாதார வழிமுறைகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் கடந்த 22 ஆம் திகதி வெளியிடப்படும் என சுகாதார அமைச்சு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## மின்சாரம் தடைப்படும்


உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**வவுனியா பிரதேசத்தில்** பகல அளுத்வத்த கிராமம், புளிதறித்த புளியங்குளம் கிரா மம், செக்கட்டிப்புலவு, கிறிஸ்தவ குளம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** மாலுவாடி, New Silk Road Aqutic Company PVT (Ltd) ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## சத்திய தரிசனம்

### தர்மம் என்றும் காக்கும்



❖ பிறர் படும் துன்பத்தைக் கண்டு வருந்துவதோடு, உதவ முன்வருவதே அறிவு இருப்பதன் அடையாளம்.

❖ துன்பத்தில் கொடிய துன்பம், கடனாளியாக வாழ்வதே. இருப்பதைக் கொண்டு நிறைவாக வாழ முயல வேண்டும்.

❖ நீண்டநாள் வாழ்வதைக் காட்டிலும், இருக்கும் வரை உடல் என்னும் கருவியைச் செம்மையாக வைத்திருக்க உணவு, உடையை தூய்மையாக வைத்திருங்கள்.

❖ மனம் என்னும் கருவியைத் தூய்மையாக்க எண்ணத்தை ஒழுங்குபடுத்துங்கள்.

❖ முற்பிறவியின் பயனாக நம்மைத் தொடரும் பாவச்சுமையை, இன்றைய வாழ்வின் நற்செயல்களால் மட்டுமே போக்க முடியும்.

❖ நாம் கடவுளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அதனால், நம் தந்தையான கடவுளின் அன்புப் பிணைப்பை உறுதியாக்கிக் கொள்ள வேண்டும்.

❖ பயணம் செய்யும் போது வெறுமனே வேடிக்கை பார்க்காதீர்கள். கடவுளின் திருநாமத்தை ஜெபித்துக் கொண்டிருங்கள்.

❖ செல்வம், அதிகாரம், ஆடம்பரம் ஆகியவை ஒரு நாள் நம்மை விட்டுக் காணாமல் போய்விடும். ஆனால், செய்த தர்மமோ என்றும் அழியாமல் நம்மைக் காக்கும்.

❖ சமைக்கப்பட்ட பிறகு எரிபொருள் தேவையில்லை. அதுபோல, வாழ்வின் உண்மையை உணர்ந்தவனுக்கு ஆன்மிகப் பயிற்சிகள் தேவை ப்படுவதில்லை. ஆரோக்கியத்துடன் வாழ்வதே நல்லது.

❖ கடவுளிடம் அன்பு வைக்க வேண்டுமே தவிர, ஒருபோதும் ஆசை வைப்பது கூடாது.

❖ உருகிய தங்கத்தில் நவமணிகள் பதிவது போல, உருகிய உள்ளத்தில் கடவுளின் அருள் பதிந்து விடும்.

# விழாக்களுக்கான அனுமதி முன்கூட்டியே பெற வேண்டும்

## சுகாதாரப் பகுதியினர்

(சாவகச்சேரி)

விழாக்களுக்கான அனுமதிகளைப் பெற வருவோர் ஒரு வாரத்திற்கு முன்பாகவே அதற்காக விண்ணப்பிக்க வேண்டும் என சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

திருமணம், புதுமனைப் புகுவிழா, ஆலயத் திருவிழா உள்ளிட்ட மங்கல நிகழ்வுகளுக்கான அனுமதிகளைப் பெற வருவோர் ஒரு வாரத்திற்கு முன்னராகவே கிராம உத்தியோகத்தர் ஊடாக அப்பகுதி சுகாதாரப் பரிசோதகரிடம் விண்ணப்பத்தை வழங்கி சுகாதார வைத்திய அதிகாரியின் அனுமதியைப் பெற முடியும் எனத் தெரிவித்துள்ளனர்.

தற்போது பெரும்பாலானோர் ஒரு நாளுக்கு முன்னாகவே அனுமதியைப் பெற வருகின்றனர்.

இதனால் அனுமதி வழங்குவதில் சுகாதாரப் பகுதி சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது எனத் தெரிவித்தனர். மரணச் சடங்குகளுக்கான அனுமதியை உடனடியாகப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்தனர். (4-5-30)

# பகிரங்க அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்ட பின்வரும் சான்றுப் பொருட்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றது.

எனவே குறித்த சான்றுப்பொருட்களை உரிமைகோருபவர்கள் எவரேனுமிருப்பின் 2020.08.17 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமூகமளித்து பெற்றுக்கொள்ளுமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

சான்றுப்பொருட்கள் **NPTI 0381** இலக்க மோட்டார் சைக்கிள், **NCMS 8589** இலக்க மோட்டார் சைக்கிள், **NPML 8700** இலக்க மோட்டார் சைக்கிள், **500-0764** இலக்க மோட்டார் சைக்கிள், **NPBFL 5734** இலக்க மோட்டார் சைக்கிள், **NPBEW 8424** இலக்க மோட்டார் சைக்கிள், **EPMG 8465** இலக்க மோட்டார் சைக்கிள், **NPXG 7369** இலக்க மோட்டார் சைக்கிள், **NPBBC 7808** இலக்க மோட்டார் சைக்கிள், **NPJV 7971** இலக்க மோட்டார் சைக்கிள், **NPJL 4736** இலக்க மோட்டார் சைக்கிள் என்பனவாகும். (5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில் பட்டதாரி வங்கி அதிகாரி<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம் பார்க்கும் பெண்<br>தொ.இ: B/10850 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:LLB,உரைபெயர்ப்பாளர்<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் உயர் உத்தியோகம்<br>தொ.இ: G/10894 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: செவ் 9 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த சுவிஸில் வேலை செய்கின்றார்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10851 | பிறப்பு: 1973 கிறிஸ்தவம்<br>உயரம்: 157cm<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. பாதுகாப்பு உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில் திருமணமாகாதவர்<br>தொ.இ: G/10898 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: 50 செவ் 12 இல்<br>உயரம்: 156 cm<br>தகைமை/தொழில்: Diploma in Auto Electrical தொழில்நுட்ப பொறிமுறை உதவி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் தொழில் ஆசிரியர் தொழில் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/10852 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 55 செவ் 1 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: AAT, HNDE, IELTS<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன்<br>தொ.இ: G/10903 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா: 24 ¼ செவ் 6 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில் க.பொ.த.சா/த சொந்தத் தொழில்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10855 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா: 11 ½ செவ் 3 ல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.<br>எதிர்பார்ப்பு: நிரந்தர உத்தியோகம் பார்ப்பவர்<br>தொ.இ: G/10904 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2058

### ராஜன்



வாழ்க்கையில் ஜெயிக்க ஆயிரம் முறை யோசிக்கலாம் ஜெயிப்போமா என்று ஒருமுறை கூட யோசிக்கக்கூடாது...

### சுமதி




யார் நம்மள பத்தி என்ன சொன்னாலும் நாம கவலைப்படக்கூடாது... ஏன்னா நமக்கான வாழ்க்கையை அவங்க வாழ்ந்ததும் இல்லை இனி வாழப்போறதும் இல்ல!!!

### சாமந்தி



ஆண்டவராகவே இருந்தாலும் அவரும் தாய்க்கு மகன் தான்.

### மதுசன்



பிறர் நினைத்ததை எழுதும் காகிதமாக இருக்காதீர்கள். நீங்கள் நினைத்ததை எழுதும் பேனாவாக இருங்கள்..

### கஜன்



இன்றைய உலகில் போலியாக நடிப்பவர்களுக்கு முதல் பரிசு உண்மையாய் இருப்பவர்களுக்கு ஆறுதல் பரிசு அல்ல ஏமாற்றம் என்ற பரிசு..

### றொசான்



வலியை அனுபவித்தவர்களால் மட்டுமே... அடுத்தவரின் வலியை உணர முடியும்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## கந்தரோடை மடத்...

வாள்களால் உடைத்து உள்ளே சென்று கொள்ளையிட முயன்ற போதும் வீட்டின் குடும்பத் தலைவரின் கடும் போராட்டத்தால் அம்முயற்சி கைகூடாமல் குறித்த கொள்ளைக் கும்பல் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வீட்டின் குடும்பத் தலைவி வேலைக்குச் சென்ற நிலையில் குடும்பத் தலைவரும் அவரது பிள்ளைகளும் வீட்டில் உறக்கத்திலிருந்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று அதிகாலை 2 மணியளவில் கொள்ளைக் கும்பல் மதில் பாய்ந்து வீட்டு வளவிற்குள் நுழைந்துள்ளது.

இந்நிலையில் நாய் குரைக்கும் சத்தம் கேட்டு விழித்தெழுந்த குடும்பத் தலைவர் கொள்ளைக் கும்பல் வந்துள்ளமையை உணர்ந்து சுதாகரிப்பதற்குள் குறித்த கொள்ளைக் கும்பல் வீட்டின் முன்கதவை உடைத்துள்ளது.

வீட்டு வளவினுள்ளிருந்த மண்வெட்டி மற்றும் தம்முடன் எடுத்து வந்த வாள்களால் வீட்டின் முன்கதவு கொள்ளையர்களால் உடைக்கப்பட்டது.

முன்கதவின் மேற்பகுதி கொள்ளையர்களால் உடைக்கப்பட்ட நிலையில் குறித்த பகுதியால் கொள்ளையர்கள் வீட்டினுள் செல்ல முற்பட்டனர்.

எனினும், கதவின் மேற்தடுப்பை வீட்டினுள் நின்ற இளம் குடும்பஸ்தர் தனது கையில் எடுத்து வைத்தவாறு உள்ளே வந்தால் அடிவிழுமெனக் கொள்ளையர்களை எச்சரித்துள்ளார். இதனையடுத்து கதவின் கீழ்ப்பகுதியும் கொள்ளையர்களால் உடைக்கப்பட்டுள்ளது.

எனினும், கொள்ளையர்கள் உள்ளே நுழையாதவாறு கதவின் கீழ் தடுப்பைக் குடும்பஸ்தர் தனது காலால் அழுத்தியும் சில நிமிடங்கள் வரை வைத்திருந்துள்ளார்.

இந்நிலையில் வீட்டின் முன்பக்கத்தில் வாகனத் திருத்தங்களுக்காக வைக்கப்பட்டிருந்த இரும்புகளாலும், அங்கு வைக்கப்பட்டிருந்த கதிரையாலும் குறித்த கொள்ளைக் கும்பல் உடைக்கப்பட்ட கதவு வழியாக வீட்டினுள் நின்றவர்கள் மீது எறிந்து தாக்குதல் நடத்தியுள்ளது.

சம்பவத்தில் வீட்டினுள் நின்ற இளம் குடும்பஸ்தர் சிறுகாயங்களுக்கு உள்ளானார். வீட்டினுள் நின்றவர்கள் எழுப்பிய அவலக் குரலையடுத்து அயலவர்கள் அப்பகுதியை நோக்கி விரைந்துள்ளனர். எனினும், அதற்குள் குறித்த கொள்ளைக் கும்பல் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொண்டுள்ளனர்.

(ம-3,18,78)

## கட்டணம் செலுத்...

மின் இணைப்பு துண்டிக்கப்படாது என்ற போதும், கடந்த ஜனவரி, பெப்ரவரி மாத கொடுப்பனவுகளை செலுத்தாதவர்களின் மின் இணைப்பு துண்டிக்கப்படும் என மின்சார சபை அறிவித்துள்ளது.

கொரோனா நெருக்கடி காரணமாக மார்ச், ஏப்ரல், மே மாத கொடுப்பனவுகளை செலுத்துவதில் இலங்கை மின்சார சபை சலுகை வழங்கியிருந்தது.

எனினும், ஜூன் மாத கொடுப்பனவை வழக்கம் போல செலுத்தலாம் என மின்சார சபை தெரிவித்துள்ளது.

இறுதியாக வழங்கப்பட்ட மின் கட்டணம் சரியானது என்றும், பாவிக்கப்பட்ட மின் அலகிற்கு ஏற்பவே கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், அதிக கட்டணம் வசூலிக்கப்பட்டதாக எந்த வாடிக்கையாளரும் கருதினால், அவருக்குரிய கணக்கிலக்கத்தை சரி பார்த்துக் கொள்ளலாமென்றும், கணக்கீட்டில் தவறிருப்பது நிரூபணமானால் பணத்தை மீளப் பெற்றுக் கொள்ளலாமென்றும் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (ம-3)

## ஏழாலை மயிலங்...

ஏழாலை தெற்கு மயிலங்காடு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் மூலஸ்தான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் அம்பாளின் மூடி இருந்த இரண்டு கண்கள் திறந்து காட்சியளித்தன.

இதேவேளை அம்பாளின் இருப்பிடத்துக்கு அருகில் பாம்பு முட்டைகளும் இருப்பதை காணக்கூடியதாக இருந்தது.

இதனைப் பெருந்திரளான மக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

(ம-3,60,78)

## 57 கிலோ கஞ்சா...

கைக்கு கடத்தி வரப்பட்ட 57 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று புதன்கிழமை காலை அனலைதீவு கடற்பகுதியில் வைத்து கடற்படையினரினால் இக்கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது.

படகொன்றில் கடத்தி வரப்பட்ட 57 கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் பேசாலை மற்றும் தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவும் கைது செய்யப்பட்டவர்களும் முற்பகல் 10 மணியளவில் ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ம-3,60)

## யாழில் நான்கு...

விற்பனை செய்து வந்ததோடு மட்டுமல்லாது நகைகள் திருடும் திருடர்களுக்கு மேலும் உதவிகள் செய்து வந்துள்ளதாக கூறப்படுகின்றது.

சமீபத்தில் யாழில் நகைத் திருட்டில் ஈடுபட்ட நபர் ஒருவர் பொலிஸாரிடம் சிக்கிய நிலையில், களவெடுக்கும் நகைகளை விற்கும் நகைக் கடையைக் காட்டி உள்ளார்.

இதனை அடுத்து நடந்த மேலும் ஒரு விசாரணையில் மேலும் 3 நகைக்கடை உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர் (ம-3)

## வாள்களுடன்...

எனத் தெரிவித்து இருவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு விசேட அதிரடிப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

கொழும்புத்துறைப் பகுதியில் நேற்றைய தினம் இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலில் வீடொன்றிலிருந்து வாள் ஒன்றை மீட்டுள்ளனர்.

இதனையடுத்து இந்த வாள் கைப் பற்றப்பட்ட சம்பவத்துடன் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் இருவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் மீட்கப்பட்ட வாளையும் இராணுவத்தினர் விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைத்துள்ளனர். (ம-3,107)

## மன்னாரில்...

மன்னார் கீரி பிரதான வீதி இரண்டாம் ஒழுங்கையில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் ஆலய உரிமையாளரால் பொலிஸில் முறையிடப்பட்டதையடுத்து சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-3,286)

## நயினை அம்...

யில் சுமார் 70 அடியவர்களையும் வெளி வீதியில் சுமார் 300 அடியவர்களையும் அனுமதிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை கூட்டத்தின்போதே குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகின்ற நிலையில், பெருமளவான அடியவர்கள் ஆலய வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு ஆர்வம் காட்டி வருகின்ற போதிலும் கொரோனா தொடர்பான முற்பாதுகாப்பு நடவடிக்கைகளினால் அடியவர்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டிருந்தனர்.

இந்நிலையிலேயே, சமூக இடைவெளியைப் பேணுவதுடன் சுகாதார பிரிவினரினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றி மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்கள் உற்சவகால வழிபாடுகளில் கலந்து கொள்வதற்கு அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## தேர்தல் மீண்டும்...

ஒத்திவைக்கப்படலாம் என தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலுக்கு முன்னர் கொரோனா 2ஆம் அலை ஏற்படும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. ஆனால் எதிர்பாராதவிதமாக இரண்டாம் அலை ஏற்பட்டு விட்டால் என்ன செய்வதென்பதை அந்த சந்தர்ப்பத்திலேயே தீர்மானிக்க வேண்டும். அநாவசியமாக மக்களையும் அரச அதிகாரிகளையும் அச்சத்திற்குள்ளாக்கத் தேவையில்லை என்றார். (ம-3)

## கொரோ...

ளார்.

இது தொடர்பில் மிகவும் வருத்தத்துடன் கருத்து வெளியிட்ட அவர், பலர் சுகாதார வழிமுறைகளுக்கு அமைய செயற்படுவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமூக இடைவெளிகளை கடைபிடிக்காமல் ஒருவருக்கு ஒருவர் நெருக்கமாக செயற்படுவதாக அவர் கூறியுள்ளார்.

விசேடமாக பொதுப் போக்குவரத்து சேவைகளில் பயணிக்கும்போது ஒரு ஆசனத்தில் ஒரு பயணி பயணிப்பதுடன், முகக் கவசம் அணிவது மிகவும் முக்கியமாகும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-3)

## நாவாந்துறை...

யாழ்ப்பாணம் நாவாந்துறைப் பகுதியில் நேற்றிரவு இனந்தெரியாத கும்பல் ஒன்று புகுந்து பலரின் வீடுகளின் கேற் மற்றும் கதவு, யன்னல் என்பவற்றை வாள் மற்றும் கோடரி என்பவற்றால் கொத்தி சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இதனையடுத்து அப்பகுதியில் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (ம-3)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 24-06-2020 சீட்டிழுப்பு இலக்கம் 1031
B 0 5 3 4 2 2

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 24-06-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2458
M 22 53 55 57

மஹஜன சம்பத
திகதி 2020/06/24
சீட்டிழுப்பு இலக்கம் 4164
X 4 7 5 2 0 8

மெகா பவர்
திகதி 24/06/2020
சீட்டிழுப்பு இலக்கம் 533
H 10 06 31 57 80

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 343 திகதி 24.06.2020 வர்ணம் நீலம்
H 34 46 51 7
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 54,480,268
Web: www.dlb.lk

ராசி
வெற்றி வாரம் 2841 வர்ணம் பச்சை திகதி 24.06.2020
வெற்றி இலக்கங்கள் 04 23 31 43 சிம்மம்
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 2,965,690
Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 960
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2020.06.24
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 64,897,030/-
வெற்றி இலக்கங்கள் 01 13 52 54 V

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3329 திகதி: 2020.06.24
ஊதா புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 24 44 68 X
அடுத்த சனிக்கிழமை ஜக்பொட் 30,985,657/-
Web: www.dlb.lk

## உலகை விட்டு கொரோனா அழியவில்லை

# கவனயீனமாக செயற்பட்டால் நாட்டில் வைரஸ் பரவும் அபாயம்

## ஜனாதிபதி கோட்டாபய எச்சரிக்கை



**(கொழும்பு)**

**கொரோனா வைரஸ் தொற்றில் இலங்கை வெற்றி பெற்றிருந்தாலும் வைரஸ் இன்னமும் உலகை விட்டு அழியவில்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.**

கவனயீனத்துடன் செயற்பட்டால் மீண்டும் நாட்டில் கொரோனா பரவும் அபாயம் உள்ளதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

எனவே சுகாதாரப் பிரிவு மற்றும் அரசாங்கத்தின் ஆலோசனைகளுக்கு அமைய தொடர்ந்து பாதுகாப்பு நடவடிக்கையை பின்பற்றி செயற்படுமாறு இலங்கையர்களிடம் கேட்டுக்கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனது முகப்புத்தகப் பதிவில் பதிவொன்றை பதிவிட்டு ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவரது பதிவில்,

"உலகின் அனைத்து நாடுகளும் நோய் தொற்றினால் அவதியுறும் நிலையில், எமது நாடு அனைவரினதும் ஒன்றிணைந்த முயற்சியினால் குறிப்பிடத்தக்க வகையில் இந்தப் போராட்டத்தில் வெற்றி கண்டுள்ளோம், இருந்த போதிலும் கொரோனா நோய்த் தொற்றானது முற்றாக இல்லாதொழிக்கப்பட வேண்டும். கவனயீனமான செயற்பாடுகள் நோய்த் தொற்றை மீண்டும் பரப்பக் கூடும். எனவே, சுகாதாரத் துறை மற்றும் அரசாங்கத்தினால் எடுக்கப்படும் நடவடிக்கைகளை முற்றாக பின்பற்றுமாறு அனைத்து இலங்கையர்களையும் நான் வேண்டிக் கொள்கின்றேன்." என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# இயக்கச்சி தனிமைப்படுத்தலில் மூவருக்கு கொரோனாத் தொற்று

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வு கூடங்களில் நேற்றுப் புதன்கிழமை 132 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், நேற்றைய பரிசோதனையில் இயக்கச்சி தனிமைப்படுத்தல் நிலையத்தைச் சேர்ந்த மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் இயக்கச்சி தனிமைப்படுத்தல் மையத்தைச் சேர்ந்த 57 பேர், முல்லைத்தீவு இலங்கை விமானப் படை தனிமைப்படுத்தல் மையத்தைச் சேர்ந்த 43 பேர், மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட 30 பேர், வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஒருவர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வந்த ஒருவர் ஆகியோரே இவ்வாறு பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம- 3,18)


விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
0768226240

விஞ்ஞானபாட வகுப்புக்கள்
வகுப்பு :- தரம் 10, 11 விஞ்ஞான பாடம் ( தமிழ் மொழி மூலம் )
இடம் :- இராமநாதன் வீதி ( நாச்சிமார் கோவிலடி ), யாழ்ப்பாணம்.
காலம் :- வார இறுதி நாட்கள்
குறிப்பு:- கடந்தகால வினாத்தாள்கள் மற்றும் மீட்டற் பயிற்சிகளுடன் பரீட்சைக்கான விரைவுத் தயார்படுத்தலை உள்ளடக்கிய வகுப்பு நடைபெறுகிறது.
Personal வகுப்புகளும் நடைபெறுகின்றன
தொடர்பு :- 077 909 7878 (C-9756)

வேலை ஆட்கள் தேவை
மல்லாகத்தில் இயங்கும் எமது தொழில் ஸ்தாபனத்திற்கு பொதி செய்வதற்கு பெண் வேலை ஆட்கள் தேவை.
வயது எல்லை 18 தொடக்கம் 30 வரை.
வேதனமாக நாளொன்றுக்கு ரூபாய் 600/= வழங்கப்படும்.
தொடர்பு (3097)
076 118 4010

சிறுநீரகம் தேவை
2 சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட மிகவும் வறுமை நிலையிலுள்ள ஆண் நோயாளி ஒருவருக்கு A(-) குருதிப் பிரிவைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை.
தானமளிக்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு (3100)
077 028 3924 / 076 465 1066
077 314 4850

சிவப்பு மண் விற்பனைக்குண்டு
பள்ள நிலங்களைச் சீர் செய்வதற்கும் கட்டட அத்திபாரங்கள் நிரப்புவதற்கும் உகந்த சிவப்பு நிற மண் எம்மிடம் விற்பனைக்கு உண்டு.
தேவைப்படுவோருக்கு மிகக் குறைந்த விலையில் தங்கள் இடத்துக்கு டிப்பர் மூலம் கொண்டு வந்து பறிக்க முடியும்.
(C-9757)
T.P : 077 649 1027 / 077 940 0963

விரைவு பொதிகள் சேவை
DHL வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.
Lanka Cargo Worldwide Express

315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (3102)
021 221 1995
076 283 2397

நாடாளுமன்றத் தேர்தல் - 2020
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
தமிழ் மக்கள் தேசிய கூட்டணி



6
சி.வி.விக்னேஸ்வரன்
நீதியின் கரங்களுக்கு நேர்மையான பக்கபலம்
நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில்
தமிழ் மக்களுக்கான நேர்மைமிகு அரசியல் தலைமையை உருவாக்குவோம்.
(C-008)
10
தவச்செல்வம் சிற்பரன்
பழைய மாணவன்-யாழ். இந்துக் கல்லூரி, கொழும்பு றோயல் கல்லூரி
(Architect மொறட்டுவ பல்கலைக்கழகம்)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.